16 Dec 1930

JL
M211, M5AB
N30.16.6.
182504

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரிஜிஸ்டர்ட்.)

## "சகுந்தலா" கூந்தல் வளரும்

### பரிமளத் தைலம்

ஆழாக்கு எண்ணெய் அடங்கிய

டின் 1-க்கு விலை அணா 12

இத்தைலத்தின் பரிமளம் எவருக்கும் இன்பத்தை யளிக்கும். இது கூந்தலை நீளமாக வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச் செய்யும் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்தி செய்யும். கண்ணில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தேக நமைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மனோ வியாகூலம், ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்துத் தேக ஆரோக்கியத்தைத் தந்து வாசனையை உண்டாக்கும். இந்தத் தைலம், பல வனமூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதில் ஒரு டின் தைலம் வாங்கிப் பார்த்தால் இதன் அருமை விளங்கும்.

## கிருஷ்ண சஞ்சீவி




தலைநோய், பாரிச வாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் இவைகளைத் தீர்ப்பதில் இது முதன்மை பெற்றது. நோய்கண் [illegible] இல் இந்த கிருஷ்ண சஞ்சீவியைத் [illegible] மூன்று நிமிஷங்கள் வரை [illegible] ாய் ஓடிவிடும். இளங் [illegible] சத்திய நோய்களுக்கும் [illegible] தன் புட்டிகள் ஆயிரக் [illegible] கொண்டு வருகின்றன. [illegible] பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி [illegible] தன் விலை புட்டி 1-க்கு அணா 8. டஜன் 1-க்கு ரூ. 5.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆனந்தபோதினி **Regd. No. M. 1190.**

# "ஆனந்தபோதினி"

ஆனந்தபோதினி 1-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம், 13-ம், 14-ம், 15-ம், 16-ம், 17-ம் வருடப் புத்தகங்கள் முழு காலிகோவில் நேர்த்தியாக பைண்ட் செய்யப்பட்டவை.

ஒவ்வொன்றும் விலை ரூபா 1-0-0; தபால் கூலி பிரத்யேகம்.

ஒரு வருடத் தனி சஞ்சிகைகள் 12-ம் விலை ரு. 1; தபால் கூலி வேறு.

1-வது முதல் பைண்ட் புத்தகம் விலை ரூபா 1-12-0; தபால் கூலி வேறு.

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS.
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

(152)

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

(மூன்றாம் பதிப்பு) விலை ரூபா 2-0-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

எம்.ஏ., எல்.டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முக சுந்தர முதலியா ரவர்களால் இயற்றப்பெற்ற சேர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800-பக்கங்களுக்குமேல் திக்குகாகிதத்தில் அச்சிடப்பட்டு சீமைகாலிகோ பைண்டு செய்யப்பட்டது.**

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த **16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.**

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.

இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக்கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச்செலவு செய்து 10 வருஷம் படிப்பதனுல் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணிவித்தியாசம், அன்னியதேச நாணயமதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

---

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்.
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று !

187504

# இன்பவாழ்க்கையின் - இரகசியங்கள் -

(மூன்றாம் பதிப்பு)

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்

400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் போனந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளியிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாரங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன்பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

## இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய மூஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி சாஸ்திர் ஆராய்ச்சி, தந்திரம், சாமர்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களி லிருந்து தப்புவதும் அவனைக் காப்பாற்றவும், மூஷ்டிக்காத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவமிக்கப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். **இதன் விலை ரூபா 3.**

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.

ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 4 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

## (சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றும் பதிப்பு)  இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## எமது சொந்தப் பிரசுரங்கள்.

# கைவல்ய நவநீத வசனம்.

## (இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

# இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந்திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம் பொருந்திய செயல்களாயும படிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

**ஞானசெல்வம்பாள் (5-பாகங்கள்)  9 10 0**

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இதுதான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரியதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா | | | 2 | 0 | 0 |
| ஐந்தாவது பாகம் மாத்திரம் | ,, | ,, | 1 | 10 | 0 |
| ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ஐந்து பாகமும் சேர்ந்து வாங்கினால் | ,, | ,, | 8 | 0 | 0 |

**பவளத்தீவு 2 பாகம்  3 0 0**

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

# சந்திராபாய்

அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மினசாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், வெடி குண்டு, டார்படோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனநாகரீகப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2—0—0.

# கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரச மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணாபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

# மதனாம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3,

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8

அற்புதமர்மங்கள் அல்லது

ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் **1 12 0**

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டு விதமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடைவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

**அமராவதி 2 பாகம் 4 0 0**

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும்,, நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**இரத்தினபுரி இரகசியம் 3 பாகம் 6 0 0**

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

## இனிய செந்தமிழ் நாவல்கள்.

| | ரூ. | அ. | | | |
|---|---|---|---|---|---|
| சுவர்ண சுந்தரம் 2-பாகம் | 2 | 0 | ஷண்முகநாதன் | 1 | 4 |
| காந்திமதி | 2 | 0 | ராதை | 1 | 4 |
| மணிவாசகன் | 1 | 4 | அமிர்தம் | 0 | 8 |
| | | | மனிதனின் வாழ்நாள் | 0 | 6 |

நந்திதேவர் திருவாய் மலர்ந்தருளிய

## ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்.

சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த நம் முன்னோர்கள் நமக்கு இம்மை மறுமைப்பயன்களைத் தருவனவாக அருளிச்செய்த நூற்களில் இது சிறந்ததாகும். மனிதர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆயுள், செல்வம், புகழ், புத்திரகளத்திராதி சம்பத்து, சிலம், இன்பம் முதலியவைகளைப் பூரணமாக அறிந்து கொள்ளும்படி இந்த ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோலென்னும் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. சோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், ஒன்பது கிரகங்களையும் பன்னிரண்டு இராசிகளில் அடைந்த ஆட்சி யுச்சம் இவைகளைக் கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 1-2-3-4-5-6-7-கிரகங்கள் ஒன்றாகக் கூடியிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறி யிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் உரிய மார்க்கங்களை இதனால் தெரிந்து கொள்ளலாம். இந்த ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோலைக் கையிலெடுத்துப் பார்த்த ஒவ்வொருவரும் சோதிடர்களாவதற்குத் தடையிராது. இந்த நூல்போல் எந்த நூலுமிராது.

## இதன் விலை அணா 8.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ... | 1 | 4 |
| கடற்கொள்ளைக்காரன் 2பாகம் | 3 | 4 |
| மதனும்பாள் 2-பாகம் ... | 3 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச் சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 3 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் ... | 0 | 14 |
| இந்திராபாய் ... | 2 | 8 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மஞ்சள் அறையின் மர்மம் ... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகமும் ... | 3 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்தினபுரி ரகசியம் 3-பாகமும் | 6 | 0 |
| சந்திராபாய் ... | 2 | 0 |
| இராஜாமணி ... | 2 | 0 |
| இரத்தினாபாய் ... | 1 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணம்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| பத்மாஸனி ... | 0 | 14 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 |
| ஆனந்தஸிங்கின் அஷ்ட ஐயங்கள் | 1 | 12 |
| அர்ஜுனஸிங், சுந்தர் ... | 0 | 2 |
| கைவல்லிய நவநீத வசனம் ... | 1 | 8 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 |

---

| | ரூ. | அ. |
|---|---|---|
| தத்வஸங்க்ரஹ ராமாயணம் ... | 4 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 |
| விவேகாநந்தர் ... | 4 | 0 |
| தமிழ் மெடீரியா மெடிகா ... | 3 | 0 |
| மாதவி மாதவன் 2-பாகம் ... | 2 | 0 |
| மலையாள பகவதி ... | 1 | 0 |
| அற்புத நவநீதாம்பை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| துயராளன் கதை ... | 0 | 12 |
| பூலோக லக்ஷ்மி கதை ... | 0 | 10 |
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| நளினசுந்தரி ... | 0 | 10 |
| கம்பராமாயண சங்கிரக வசனம் | 2 | 0 |
| குசேலோபாக்கியான வசனம் | 1 | 0 |
| ஸ்ரீபாலன் ... | 0 | 8 |
| உதயணன் ... | 0 | 7 |
| தசக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் வசனம் ... | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| முப்பெருந்தாசர் ... | 0 | 10 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 3 |
| பரசுராமன் ... | 0 | 3 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| அங்கதன் ... | 0 | 4 |
| தசாவதாரம் ... | 0 | 6 |
| கிருஷ்ணன் தூது வசனம் ... | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்தியவசனி ... | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| நாலுமந்திரி கதை ... | 0 | 4 |
| மங்கனேசுவரன் ... | 0 | 6 |
| தக்கன் ... | 0 | 6 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| நான்குகோடி ... | 0 | 4 |
| மஹிமோச விளக்கம் ... | 1 | 0 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மேனுமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணாகானன் ஞானேந்திரி ... | 0 | 8 |
| மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| விகடவல்லி கதை ... | 0 | 6 |
| தாலிகட்ட மறந்த கதை ... | 0 | 5 |

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**


8-JAN 1931

ஓம்

பரப்பிரஹ்மணே நம:


# ஆனந்தபோதினி.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி 16 | பிரமோதூதஸு மார்கழிமீ கஉ<br>1930ஸு டிசம்பர்மீ 16உ | பகுதி 6 |
|---|---|---|


## கடவுள் வணக்கம்.

பொற்பினொடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலால்
போந்திடை யொடுக்கமுறலால்
பொலிவான வெண்ணீறு பூசியே யருள்கொண்டு
பூரித்த வெண்ணீர்மையால்
எற்பட விளங்குகக னத்தி லிமையா விழி
இசைந்துமே லேக்கமுறலால்
இரவுபகல் இருளான கனதந்தி படநூறி
இதயங் களித்திடுதலால்
பற்பல விதங்கொண்ட புலிகலையின் உரியதூ
படைத்துப்ர தாபமுறலால்
பனிவெயில்கள் புகுதாமல் நெடியவான் தொடர்நெடிய
பருமர வனங்களாரும்
வெற்பினிடை யுறைதலால் தவராஜ சிங்கமென
மிக்கோர் உமைப்புகழ்வர்காண்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (1)

---

ஆலம் படைத்த விழியார்சண் மால்கொண் டவர்செயிந்த்ர
சாலம் படைத்துத் தவர்ந்தனை யேயென்றும் தண்ணருள்கூர்
கோலம் படைத்துக்கல் லாலடிக் கீழ்வைகும் கோவுக்கன்பாங்
காலம் படைக்கத் தவம்படை யாதென்கொல் கன்னெஞ்சமே. (2)

---

பஞ்சாய்ப் பறக்குநெஞ்சப் பாவியை நீ கூவியையா
அஞ்சாதே யென்றின் னருள்செயவுங் காண்பேனு. (3)

# அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் வித்தகச் சித்தர் கணத்தின் தவ மாட்சியை விளக்குகின்றார்.

(இ-ள்.) வேதாந்த சித்தாந்தங்களின் உண்மை கண்டு, சமரசமாகிய நல்ல நிலைமை பெற்று விளங்கும் ஞானச் சித்தர்கணமே! அழகிய கை கால்களில் கூரிய நகங்களைப் படைத்திருத்தலானும், இடையானது சுருங்கி வந்திருத்தலானும், ஒளி மிகுந்த திருவெண்ணீற்றைப் பூசித் திருவருள்பெற்று இறுமாந்த வெண்ணீர்மையானும், பிரகாசம் தோன்ற விளங்குகின்ற சிதாகாயத்தில் இமையாமல் கண்கள் பொருந்தி, ஊர்த்துவ திருஷ்டி வாய்ந்திருத்தலானும், இரவிலும் பகலிலும் அஞ்ஞான அந்தகாரமாகிய பெரிய யானையானது இறக்கும்படி தொலைத்து மனம் செருக்கடைந் திருத்தலானும், பற்பல விதமான புலித் தோலையும், மான்தோலையும் ஆசனங்களாகப் படைத்து மனோ பல வைபவத்தைப் பெற்றிருத்தலானும், பனி வெய்யில் முதலியவை நுழையப் பெறுமல் பரந்த வான மண்டலத்தை அளாவிய உயரிய பெரிய மரங்கள் அடர்ந்த வனங்கள் சூழ்ந்த மலையினிடத்து வசித்தலானும், தவராஜ சிங்கம் என்று மேலோர் உம்மைப் புகழ்வர் என்பதாம்.

இதில் தவசிகட்கும் சிங்கத்திற்கும் உவமை கூறித் தவராஜ சிங்கமெனக் கூறியிருத்தலால் மேல் தவசிகட்குக் கூறியவை போலச் சிங்கத்திற்கும் கை கால்களில் கூரிய நகங்களும், ஒடுங்கிய இடையும், மதிக்கத் தக்க தன்மையும், மேனோக்கிய கண்களும், யானைகளைக் கொல்லுதலால் களிப்பும், புலிகளையும் மான்களையுங் கொன்று அவற்றின் தோல்களைத் தன் குகையில் வைத்திருத்தலும், அடர்ந்த காட்டில் வாழுதலும், ஆகிய குணங்கள் பொருந்தியிருத்தலைக் காண்க. மிருகங்களுக்குள் சிறந்து விளங்குவது சிங்கம்—மக்களுக்குள் சிறந்து விளங்குபவர் தவசிகள் என்க.

(2) (இ-ள்.) கருங்கல்லினை யொத்த மனமே! நஞ்சு பொருந்திய கண்களையுடைய மாதர்கள்மேல் மோகங்கொண்டு அம்மாதர் காட்டுகின்ற இந்திரசாலத்தினுக்குள்ளாகித் தளர்ச்சி உற்றனையே! எக்காலத்திலும் குளிர்ந்த திருவருளுருக்கொண்டு கல்லால் விருக்ஷத்தின் அடியில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனுக்கு அன்பு பாராட்டும்படியான காலம் உண்டாகத் தவம் செய்யாமைக்குக் காரணம் என்ன ? என்பதாம்.

(3) (இ-ள்.) பஞ்சினைப்போல் உலகில் திரியும் மனம்படைத்த பாவியேனை நீயே வலிய அழைத்து, ஐயா! பயப்படாதே என்று உனது இனிய கிருபை செய்யவும் காணப்பெறுவேனோ? என்பதாம்.

ஆனந்தபோதினி
பிரமோதூத
௵ மார்கழிமீ 1உ

## பெண்கள் நிலை.

பெண்கள் கல்வி கற்கக் கூடாது, சாஸ்திரம் படிக்கக் கூடாது, வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என்ற காலம் மலையேறி விட்டது. இப்பொழுது நாட்டில் பெண்களின் கல்வி நலத்தையும், சமூகச் சீர்திருத்த நலத்தையும் நாடும் சங்கங்கள் ஆங்காங்குத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. பெண் பாடசாலைகளின் தொகை நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வருகின்றது. உயர்தரக் கல்வி பயின்று பட்டதாரிகளாக விளங்கும் பெண்களின் தொகையும் பெருகிவருகின்றது. பெண்மணிகள் மேனாடுகட்குச் சென்று கல்விப் பயிற்சி பெற்று வருதலும் அருமையாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. பள்ளிக்கூட ஆசிரியைகளாகவும், டாக்டர்களாகவும் பல பெண்மணிகள் வேலைபார்த்து வருகின்றனர். உயர்தர நீதிமன்றங்களில் நியாயவாதிகளாகவும் முன் வந்திருக்கின்றனர். இம்மட்டோ? இப்பொழுது நமது நாட்டில் நடைபெற்று வரும் தேசியப்போரில் ஈடுபட்டு—பல கஷ்ட நஷ்டங்களுக் குள்ளாகியும் அஞ்சாது போர் புரிந்துவரும் பெண்மணிகளின் துணிவையும் வீரத்தையும் என்னென்று புகழ்வது? இவையெல்லாம் இந்திய மாதர் உலகத்தில் புத்துயிரும், புதிய ஊக்கமும் கிளம்பியிருப்பதற்குப் போதிய அறிகுறிகளாகும். பெண்மக்கள் கல்வி கற்கவேண்டும்.

---

“புதிய விருந்தாளி வேண்டாமென்னும் போதே வலுக்கட்டாயமாகச் சாதம் வைக்கும் கையே—சிறிது பழகி விட்டால் அவன் கேட்டாலும் அது உள்வாங்கும்.”

ஒரு பெண் தன் கணவனுக்குத் தோழியாகவும், தன் மக்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும், மற்றவர்கள் விஷயத்தில் தரும சிந்தனை படைத்தவளாகவும் விளங்கல் வேண்டும்.

நமது நாடு பண்டைக் காலந் தொட்டு நாகரிகத்தில் சிறந்து விளங்குவது என்ற ஒரு பெருமை நமக்கு உண்டு. ஆனால் பல நூற்றாண்டுகளாகப் பெண் மக்கள் அநாகரிகமாகவே நடத்தப்பெற்று வருகிறார்கள் என்ற வசையையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். நமது ஆடவர்களுக்குப் பெண்மணிகள் மக்கள் குழுவைச் சேர்ந்தவராகத் தோன்றினார்கள் இல்லை—விலங்குகளாகவே காணப்பெற்றனர் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஒருவனுக்கு உடைமையான வீடு, நிலம், ஆடு, மாடு முதலிய பொருள்களைப் போலவே பெண்களும் உடைமைப் பொருளாக மதிக்கப்பட்டனர். பெண்களுக்கு எத்தகைய உரிமையும் இல்லை. ஆயுள் முழுதும் அடிமைக் குழியிலேயே ஆழ்ந்து கிடக்கவேண்டும். இளமையில் தாய் தந்தையர், வயது வந்தபோது கணவன், முதுமையில் மக்கள், கணவன் இறந்தால்—அவனைச் சார்ந்த தாயாதிகள் ஆகிய இவர்களது ஆதிக்கத்திலேயே பெண்கள் அடிமையாய்க் காலங் கழிக்கவேண்டும். இந்து தருமப்படி பெண்கட்குத் தனியாக வாழும் உரிமை எப்பொழுதும் கிடையாது. இத்தகைய கொள்கைகளே சாஸ்திர விதிகளாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இத்தகைய மனப்பான்மை நம் ஆடவர்கட்கு என் ஏற்பட்டது? பெண்கள் பேதைகள்; அவர்களுக்கு ஸ்திர புத்தி இல்லை; சலனமனம் படைத்தவர்கள்; கோழைகள்; வலிமையற்றவர்கள் என்று ஆடவர்கள் கருதிவிட்டமையே காரணமாகும். தமிழ்மொழியிலும் வடமொழியிலும் பெண்களை இழித்துக் கூறும் அம்சங்கள் ஏராளமாக மலிந்து கிடக்கின்றன. உலகங் கெடுவது பெண்களாலே என்பது நமது சாஸ்திரிகள்—மகா கவிகளின் கருத்து. "பெண்கள்—பெருமை இலர், பிறப்பை நோக்கார், மனநிறை இலர், ஓராயிர மனத்தர், பத்துப் பணம் எண்ணிக் கையில் கொடுத்தால் இந்திரன் மகளும்கூட வெண்ணெய்க் குன்றில் நெருப்புப் பற்றியதுபோல் மனங்கரைந்து—சபலம் அடைந்து ஒருவன் பின் ஓடிவிடுவள்" என்றார் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சிந்தாமணி ஆசிரியர்.

---

"ஒருவன் பெரிய பட்டணத்தில் என்ன சுகபோகத்திலிருந்தாலும் தான் பிறந்த சிறு கிராமம் எல்லாவற்றிலும் பெருமையாய்த் தோன்றும்."



"வாமமேகலை மங்கையரால் வரும், காமமில்லை யெனில் கடுங் கேடெனும், நாமமில்லை நரகமும் இல்லை" என்றார் கல்வியிற் சிறந்த—கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பர் பெருமான். இத்தகைய மகாகவிகளின் கண்களுக்கே பெண்கள் இவ்வாறு தோன்றின் ஏனையோரைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? பாவம் ஏதோ ஒரு கவிராயர் நோக்கத்தில் பெண்மணிகள் எவ்வாறு காட்சி அளிக்கின்றனர் என்பதைச் சற்றே கடைக்கணித்துப் பாருங்கள். அதாவது,

"ஆலகால விஷத்தையும் நம்பலாம்
ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்
கோலமாமத யானையை நம்பலாம்
கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்
காலனார்விடு தூதரை நம்பலாம்
கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்
சேலைகட்டிய மாதரை நம்பினால்
தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே."

என்பதே யாகும். இப்பாட்டைப் பாடிய புலவர் திலகருக்குப் பெண்கள் என்ன கொடுமை செய்தனரோ யாம் அறியோம். ஆலகால விஷத்தை நம்பலாமாம்—ஆனால் ஆயிரங்காலத்துப் பயிரான அரிவைமார்களை நம்பக்கூடாதாம். வெள்ளப் பெருக்கெடுக்கும் ஆற்றையும் சண்டமாருதக் காற்றையும் நம்பலாமாம்—கள்ளங் கபடற்ற காரிகைமார்களை நம்பக்கூடாதாம். கொடிய மதயானையையும் கொல் வேங்கைப் புலியையும் நம்பலாமாம்—குல மாதரான கோதைமாரை நம்பக்கூடாதாம். காலதூதரை நம்பலாமாம்—கவலைகொள்ளாது கணவரை மகிழ்விக்கும் காந்தைமாரை நம்பக் கூடாதாம். கள்ளர், வேடர், மறவரை நம்பலாமாம்—உள்ளங் கனிந்து இல்லறம் புரியும் மெல்லியலாரை நம்பக்கூடாதாம். என்னே இத்தீந் தமிழ்ப்புலவரின் திருவுள்ளம்! இவர் எங்கேனும் ஒரு தாசி வீட்டுக்குச் சென்று நன்கு அடிபட்டு அந்த வயிற்றெரிச்சலை இப்பாட்டில் கொட்டி அளந்திருக்க வேண்டும் என்றே எண்ணுகிறோம். ஒரு சில புலவர்கள் தாசிலோலர்களாய் இருந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகளும் உண்டு.

"போமிராச் சூழுஞ்சோலைப் பொருங்கொண்டை திம்மிகையில்,
நாமிராப் பட்டபாடு நமன்கையில் பாடுதானே"

என்றார் கவி காளமேகம். ஆந்திர மகாகவி ஸ்ரீநாதர் ஒரு செக்காரப் பெண்ணைக் கூட்டிக் கொடுக்கவில்லை என்று காலவைரவக் கடவுளின்

---

"பத்திரிகை விஷயங்கள் புரியாவிட்டாலும் பெருமைக்காகப் பலபேர் கையில் பத்திரிகை வைத்திருப்பதுண்டு."

மீது வசைபாடத் தொடங்கிவிட்டதாகவும் ஒரு வரலாறு வழங்கப்படுகிறது.

உலகங் கெடுவதற்குக் காரணம் பெண்களா? ஆண்களா? ஆண்களாலேதான் உலகங் கெடுகிறது என்று ஏன் கூறக்கூடாது என்று கேட்கின்றோம். ஆதிமுதல் பெண்களும் கல்வியறிவு படைத்தவர்களாக விளங்கியிருப்பின் இப்பாடத்தை அவர்கள் ஆண்கள்மீது திருப்பி ஒப்புவித்திருக்க மாட்டார்களா? பெண்களுக்கு எப்படிப் போதிப்பினும் கல்வி ஏறாது—அறிவு விளங்காது என்ற எண்ணம் நமது நாட்டில் பொதுவாக வேரூன்றி விட்டது. இதனாலன்றோ "சேலைமேல் சேலைகட்டும் தெய்வரம்பை யானாலும், ஓலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண்ணாகாது" என்றும், "எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும், பெண்புத்தி என்பது பெரும் பேதைமைத்தே" என்றும் "பேதைமை என்பது மாதர்க்கணிகலம்" என்றும் "தையல்சொற் கேளேல்" என்றும், "சித்திரவிழியார் நெஞ்சம் தெரிந்தவர் இல்லை கண்டீர்" என்றும், மும்மூர்த்திகளே யாயினும் "மங்கையர் மனநிலை உணர வல்லரோ?" என்றும் பெண்மணிகளைப் பழிக்கும் ஒரு சார்பு பற்றிய நீதிகள் கிளம்பத் தொடங்கின? பெண்கள் ஜடப்பொருள்களா? அவர்கட்கு உயிர் இல்லையா? உணர்ச்சி இல்லையா? அறிவு இல்லையா? எல்லாம் உண்டு. ஆனால் ஆடவர் கண்கட்கு அவை தோன்றுவதில்லை. "எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லைகாண்" என்றார் நமது தேசியக் கவிராஜர். ஆடவர்களைக் காட்டிலும் பெண்மணிகளிடம் அறிவு நுட்பம் அதிகம் என்றும், சிறு விஷயங்களையும் விடாமல் கவனிக்கும் நுண்ணிய அறிவாற்றலும், பொறுமையும், உண்மையைக் கிரகிக்கும் சாமர்த்தியமும் அதிகம் என்றும் பல அறிஞர் ஆராய்ந்து கூறியிருக்கின்றனர். இவ்வுண்மைகளை நாமும் நமது தினசரி வாழ்க்கையில் கண்கூடாகக் காணலாம். எவ்வளவு கற்றவராயினும் குடும்ப நிர்வாக விஷயங்களில் பெண்மக்களின் ஆலோசனைகளை அங்கீகரிக்கத் தயங்குகிறார்கள் இல்லை. கல்லாத பெண்களின் நல்ல ஆலோசனைப் பிரகாரமே குடும்ப ரதம் நடைபெறுகின்றது. கற்ற ஆடவருக்குக் காரிகையார் மதிநலம் வாய்ந்த மந்திரிகளாய் விளங்குகின்றனர். கல்வியற்ற நிலைமையிலேயே—தங்கள் இயற்கை அறிவின் வன்மையால் குடும்ப வாழ்க்கையை இன்பமயமாக நடத்தி, கணவன்மார்களையும் குழந்தைகளையும் காப்பாற்றி வரும் பெண்மணிகட்குக் கல்வியறிவும் பொருந்தி விட்டால் வாழ்க்கை எத்துணைச் சிறப்பாக இருக்கும் என்பதை யாம் விரிக்கவும் வேண்டுமோ? கல்வியறிவு வாய்ந்த ஆடவர்கட்குள்ளேயே கூடாவொழுக்கங்கள் பல குவிந்து கிடக்கும்

"ரயில் வர அதிக நேரமிருந்தாலும் ஸ்டேஷனுக்கு கால்கள் வேகமாய்த்தான் நடக்கும்."



போது, ஒன்றும் அறியாமல்-தாங்கள் குடியிருக்கும் வீடே சுவர்க்கமாக நினைத்துக்கொண்டிருக்கும் பெண்களிடம் குறைபாடுகள் தோன்றுவதில் ஆச்சரியம் உண்டா என்று வினவுகின்றோம்.

நமது நாடு முன்னேற்றம் அடைந்து சுதந்தர இன்பம் நுகர வேண்டும் என்றால் பெண்மக்கள் கல்வித் துறையிலும் சமூக சீர்திருத்தத் துறையிலும் முன்னணியில் வந்து நிற்கவேண்டும். இப்பொழுது சுதந்தரமாக விளங்கும் ஒவ்வொரு நாட்டிலும் பெண்கள் தீவிரமான முற்போக்குணர்ச்சி வாய்ந்தவராய் வாழ்கின்றனர். ஆண்கள் உயர்ந்தோர், பெண்கள் தாழ்ந்தோர் என்ற மனப்பான்மையைக் கட்டோடு ஒழித்து விட்டனர். பெண்களுக்குரிய கல்வியறிவு விஷயத்தில் ஒவ்வொரு நாடும் பூரண சிரத்தையோடு பாடுபட்டு வருகின்றது. நமது நாட்டிலும் சிறிது காலமாகப் பெண்களின் கல்வியைப்பற்றியும் பிறவிஷயங்களைப் பற்றியும் ஒருவாறு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. எனினும் அதற்கு எதிர்ப்பும் அசிரத்தையும் குறுக்கே நின்று தடை செய்து கொண்டிருக்கின்றன. "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? பெண்கள் படித்து என்ன உத்தியோகம் சாதிக்கப் போகிறார்கள்? நாங்கள் எல்லாம் என்ன பாஸ் பண்ணியிருக்கிறோம்? கலியாணம் செய்து மக்களைப் பெற்றுக் குடும்ப நிர்வாகம் செய்யவில்லையா? பேரன்—பேத்திகளை எடுக்கவில்லையா?" என்று கடாவுகின்ற பெண்கள் இன்னும் நமது நாட்டில் இருக்கின்றனர். வயது முதிர்ந்த ஆடவர்களுக்குள்ளேயும் இந்த மனப்பான்மை கொண்டவர்கள் பலர் இருக்கின்றனர். பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்று உணர்ந்து ஒப்புக்கொள்ளுகின்ற ஆடவர்களிடையே அசிரத்தைக் குடிகொண்டிருக்கின்றது. ஆண் மக்களுக்குக் கல்வி போதிப்பதில் இவர்கள் எவ்வளவு சிரத்தை காட்டுகின்றனரோ, அவ்வளவு சிரத்தை பெண் குழந்தைகளின் கல்வி விஷயத்தில் காட்டுவதில்லை. நிற்க, நமது நாட்டு வழக்க ஒழுக்கங்களும் பெண் கல்வி விஷயத்தில் தொல்லை விளைக்கின்றன. இரண்டாவது மூன்றாவது வகுப்புக்களுக்கு வருவதற்குள்ளாகவே பெண் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தினின்றும் நிறுத்திவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகின்றது. இதனால் வீண் பொருள் நஷ்டத்தைத் தவிர வேறு எத்தகைய பயனும் உண்டாவதில்லை. தவிர உயர்தரப் படிப்புக்குச் செல்லும் பெண்களும் இக்காலக் கல்விமுறையின் தோரணையால் விசேஷ நற்பயனை அடைவதில்லை. ஆண்களுக்குக் கொடுக்கப்படும் கல்வியே பெண்களுக்கும் கொடுக்கப்படுகின்றது. இக்காலக் கல்வி முறை வேலையில்லாத் திண்டாட்டத்தையே மேன் மேலும் பெருக்கி வருகின்றது.

"பல ஆபீஸ்களில் கடிதம் எழுதினால் உடனே தகவல் கிடைக்கும். ஆனால் நேரில் போனால் ஒரு தகவலும் கிடையாது."

பெண்களுக்கு என்று தனிக் கல்வித்திட்டம் வகுக்க வேண்டும். அதில் குடும்ப நிர்வாகப் பயிற்சியும், சுகாதாரஞானமும், சிசு போஷணை முறைகளும், பின்னல், நூற்றல் போன்ற வீட்டுக் கைத்தொழில் முறைகளும் பெண்கள் தெரிந்து மேற்கொள்ளுமாறு அமைக்கப்படல் வேண்டும். வெளி உலக விவகாரங்களில் ஈடுபட்டுழைக்கத் தூண்டும் கல்வி முறை நமது நாட்டுப் பெண்களுக்குப் பொருந்தாது. பொதுவாக நோக்குமிடத்து அத்தகைய கல்வி முறை பெண்களின் இயற்கைக்குப் பொருந்தும் என்றுங் கூறமுடியாது. ஆடவர்களைப்போல் பெண்களும் குடும்பம் அல்லாத வெளி விவகாரங்களில் ஈடுபட்டால் வாழ்க்கை இன்பம் கெடும். அவ்வாறு வெளி விவகாரங்களில் ஈடுபடுவதற்குப் பிள்ளைப்பேறு முதலிய இயற்கைத் தடைகளும் உண்டல்லவா? அதனால் மேனாட்டுப் பெண்கள் தோரணை நம் நாட்டுப் பெண்களுக்குத் தேவை இல்லை நமது பெண்மணிகள் எல்லாரும் கிருகலட்சுமிகளாய் விளங்கவேண்டும் என்பதே எம் வேண்டுகோள்,

நமது பெண்களின் சமூக வாழ்வில் அநேக ஊழல்கள் நிறைந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒழித்துவிட வேண்டும் என்று சுமார் நாற்பது ஐம்பது வருஷங்களாக முயற்சி செய்யப்பட்டு வருகிறது. எனினும் அவை இன்னும் ஒழிந்தபாடில்லை. பொது ஜனத்தலைவர்களாகவுள்ள ஆண்களும் பெண்களும் செய்து கொண்டு வரும் முயற்சியாலும் கிளர்ச்சியாலும் அவ் ஊழல்கள் இன்னவை என்றும், அவற்றால் விளையும் தீமைகள் இன்னவை என்றும் இப்பொதுதான் பொதுஜனங்கள் உணர ஆரம்பித்திருக்கின்றனர். பாலியவிவாகம், கட்டாய வைதவ்யம், தேவதாசி முறை, பெண்களுக்குச் சொத்துரிமை இன்மை, ஆண் பெண் அடங்கலும் ஒரே விதமான ஒழுக்கம் இன்மை முதலிய குறைகள் எல்லாம் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் விவகரிக்கப் படுகின்றன. ஒவ்வொரு மகாநாட்டிலும் இவற்றிற்குப் பரிகாரம் தேடும் தீர்மானங்கள் சகஜமாய்—ஏகமனதாய்—எதிர்ப்பின்றி நிறைவேற்றப் படுகின்றன. ஆனால் இவைகள் எல்லாம் அநுஷ்டானத்தில் வரும் நன்னாளையே நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

பாலிய விவாகத்தை ஒழிக்கும் சாரதாச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வந்தும்-அது உறக்கத்தில் ஆழ்ந்துவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டதைக் கண்டு நாம் வருந்தாமல் இருக்க முடியவில்லை. இதற்கு ஒரு சில வைதிக கோஷ்டியார் செய்த ஆர்ப்பாட்டமே காரணமாகும். பொதுவாக நமது நாட்டுக்கும் சிறப்பாகப் பெண்கள் சமூகத்துக்கும் ஒழுக்கக் கேட்டையும், அவமானத்தையும் கஷ்டங்களையும் உண்டாக்கிக்கொண்டு வரும் தேவதாசி முறையை ஒழித்துவிடவேண்டும் என்றால் அதற்கும் ஒரு சில படித்த கூட்டத்தாரே

---

மௌனத்தால் பொய் பேசுவோனும் அடங்கிக் குணமாறுத லடைகிறான்.



எதிரிகளாய்ப் போர்புரிய முன்னணியில் நிற்கின்றனர். வியபிசாரத்தை ஒழிக்கச் சென்னை சட்டசபையில் டாக்டர். முத்துலக்ஷ்மி ரெட்டி அவர்கள் ஒரு மசோதாக் கொண்டுவந்து நிறைவேற்றி வைத்தமை மிகவும் போற்றத்தக்க விஷயமாகும்.

பெண்கள் அடிமைகளாயிருப்பதற்கு மூலகாரணம் அவர்கட்குச் சொத்துரிமை இன்மையேயாகும். இதனாலேயே அவர்கள் "பெண் ஜன்மமோ புண் ஜன்மமோ?" என்று நாடோறும் கண்ணீர் விட்டுக் கதறவேண்டிய நிலைமையில் காலங்கழித்து வருகின்றனர். ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் ஒரு தாய் தந்தையர் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் அல்லரோ? ஆண் குழந்தைகட்குச் சொத்துரிமை இருப்பான் ஏன்? பெண்குழந்தைகட்கு அவ்வுரிமை இல்லாமற் போவான் ஏன்? மைசூர் அரசாங்கத்தார் பெண்களின் சொத்துரிமை விஷயமாய் விசாரணை செய்து ஒரு திட்டம் தயாரிக்குமாறு ஒரு கமிட்டி ஏற்பாடு செய்தது மிகவும் பாராட்டத்தக்கது. அக்கமிட்டியாரும் தங்கள் சிபார்சுகளை வெளியிட்டிருக்கின்றனர். மைசூர் ராஜ்யத்தில் இது சம்பந்தமாய் விரைவில் சட்டம் ஏற்படக் கூடும் என்று நம்புகின்றோம். அத்தகைய சட்டம் ஒன்றை நமது அரசாங்கத்தாரும் செய்யவேண்டியது மிக மிக முக்கியம்.

சமீபத்தில் சென்னையில் ஐந்தாவது சென்னை மாதர் கல்வி—சமூக சீர்திருத்த மகாநாடு நடைபெற்றது. அதில் பெண்களின் கல்வி வளர்ச்சி சம்பந்தமாகவும், சமூக சீர்திருத்த சம்பந்தமாகவும் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றிருக்கின்றன. "சாரதாச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருமாறு வைசிராயைக் கேட்டுக்கொள்ளுவதுடன் ஒவ்வொரு ஜில்லாவிலும் சாரதாக் கமிட்டிகளை ஏற்படுத்தி ஷை சட்டத்தை மீறி நடப்பவர்களைச் சர்க்காருக்குத் தெரிவிக்கவேண்டும் என்று இளைஞர்களையும் பெண்பிள்ளைகளையும் கேட்டுக்கொள்ளுவதாகவும், வியபிசார விடுதிச் சட்டத்தை ஏற்படுத்தியதற்காகச் சர்க்காருக்கு நன்றி தெரிவிப்பதாகவும், வியபிசார விடுதிகளை விசாரணை செய்வதிலும், மைனர் பெண்களை விடுவிப்பதிலும் போலீசாருக்கு உதவிபுரிய ஸ்திரீ டாக்டர்களையும், ஸ்திரீத் தொண்டர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதாகவும், மைனர் பெண்களுக்குக் கடவுளின்பேரால் பொட்டுக் கட்டக்கூடாது என்றும், தேவதாசி முறை அநுமதிக்கப்படும் கோவில்களைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்றும் அம்மகாநாட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இக் கோரிக்கைகளையெல்லாம் விரைவில் இனிது நிறைவேற்றிவைக்குமாறு எல்லாம் வல்ல திருவருளை இறைஞ்சுகின்றோம்.

ஓம் தத் ஸத்

---

நமது எண்ணத்தின்படியே வாழ்வும் தாழ்வும் அமைந்திருக்கின்றன.

(ஆரியூர். வ. பதுமநாபபிள்ளை பாடியது.)

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானில்
தெய்வத்தொ டொப்பச் சிறப்புறு வானென
செந்நாப் புலவர் செப்பிய மொழிகொண்(டு)
அந்நாள் பலவித அருந்துய ரப்பட்டு
இல்லற வாழ்வை இனிது நடாத்த
நல்லணங் கொருத்தியை நலமுறு துணையாப்
பெற்றிட எண்ணிப் பெருமகிழ்வுடனே
உற்றார் உறவினர் உவந்திட மணந்த
மனைவியை நினைக்க மனம் பதைக்கின்றதே!
எனையவள் உயர்த்துவள்; இன்பமே தருவள்;
வெளியில் விளையும் விசனம் அகற்றிக்
களிப்பிப்ப ளென்றே கருதியிருந்தேன்!
பலபல தந்தும் பாவை அவட்கு
நலமுறு திருப்தி நண்ணிய தில்லை!
என்ன அளிப்பினும் இன்பம் உறாது
உன்று மவற்றினும் உயரியவற்றை
எய்த விரும்பி ஏங்கிக் கிடப்பள்!
‘வைதலில் பயனில்லை வருத்தமே யல்லால்’
என்னு முண்மையை எண்ணியே யானும்
பன்னு மவளைப் பழிப்பதுமில்லை!
பொழுது விடிந்ததும் புறப்படுஞ் சண்டையும்
அழுகையும் கலகமும் அறையவும் படுமோ!
திருமண மதனில் சிரத்தை யில்லாது
இருந்த முன்னாளில், “என்னடா மகனே!
எத்தனை நாட்கள் இப்படி கழிக்கச்
சித்தமுற்றாய்? என் சிந்தை மகிழ்ந்திட
மருகி ஒருத்தி மனைபுகச் செய்து
அருமைப் பேரரை அளிப்பாய்” என்று

சாதி சமய வேறுபாடு உள்ள எந்த நாட்டுக்கும் முன்னேற வழியில்லை.



கன்னியைக் கொணர்ந்தென் காதலியாக்கிய
அன்னை இந்நாளில் அன்னவளோடு
கொண்ட பகைமை கூறவும் படுமோ
சண்டை யனைத்தையும் சாற்றுவதென்றால்,
ஒண்ணாதாதலின் ஒருநாள் விளைந்த
எண்ணிலாத் துயரம் எய்துவித் ததனைப்
புகல்வேன் இன்று; பொறுமையிலாத
தகவுடை யன்னை தானழைத் ததனை
மதியா திருந்த மருகியைச் சீறி,
“கதியற்றவளாய்க் காலங் கழித்த
நாரியே! உன்னை நான் கொண்டுவந்திச்
சீரிய மனையிற் சேர்த்திரா விட்டால்,
எங்கு சென்று ஏங்கி நிற்பாயோ?
சங்கை கெட்டுத் தவித்திடுவாயோ!
பாவம்! உன்னைப் பண்புறச் செய்ததால்
கூவியுஞ் செவியிற் கொண்டிலை போலும்!”—
என்றுகூறி எழுந்து வந்தவள்முன்
அன்றவள் கொணர்ந்த அன்னவள் மருகி,
துணியைத் திருத்தித் துண்ணென எழுந்து
துணிவொடு மெதிரில் தோன்றி நின்றவளாய்,
“மாமியா ரென்று மதித்திருந்தேனிச்
சாமியார் சபமினிச் சாயா தறிவாய்!
உன்னிலை மீறி உரைக்கப் புகுந்தாய்!
என்னடி! யானுன் ஏவலாளியோ?
கதியின்றி யானோ காலங் கழித்தேன்?
துதிபெற வீட்டிற் சுகமா யிருந்த
என்றனுக் கித்தனை இடுக்கண் விளைத்த
உன்றனின் கொழுப்பை ஒடுக்குவே னறிவாய்!”—
என்ன எதிர்த்து இயம்பிய வுடனே
அன்னை பதைத்து அருஞ்சினங் கொண்டு—
“ஏதடி! சிறுக்கி இத்தனை தூரம்
வாதிட வந்தாய்! எத்தனை தீரம்!
தலையணை மந்திரம் சாற்றி என்மகனைக்
கலைத்தனை போலும், காதகி நீயே!
ஈன்று வளர்த்து எண்ணரு நாட்கள்
சான்றுயர்ப்பட்டு நலமுறப் பேணிய
என்மக னென்மொழி ஏற்காவாறு

பொன் நகை யினுக்குப் போலி அழகாம். கல்வி அழகே அழகு.

துன்மொழி புகன்ற தூர்த்தையே! உன்னைக்
கடவுளே பார்த்துக் கண்டிக்கவேண்டும்!
மடமக னென்னை மறந்து தன்வருவாய்
எல்லா முனக்கே ஈந்ததா லன்றோ
பொல்லாய்! நீயும் போக்கிரி யானாய்!
என்னவனான என்மகன் றன்னை
உன்னடிமைத் தொழில் உவந்து புரிந்திடும்
சேவகனாகச் செய்வித்த வேசையே!
பாவமஞ்சாப் படுநீலி மூளியே!
என் வயிற்றெரிச்சல் ஏகாது வீணாய்,
துன்மார்க்கி உன்னைத் தொடர்ந்து வருத்துமே!"—
என்று தன்மாமி இயம்பக் கேட்ட
வன்மொழி மருகி வஞ்சினங் கொண்டு—
"கிழட்டுப் பிணமே! கேடுசெய் குரங்கே!
வழக்கிடச் சலியா வாயாடி நீலியே!
பேயே! நாயே! பெப்பெப்பேயென
வாயோயாமல் வாதுசெய்வாயே!
நீயோ மாமி? நீசக் கிழமே!
நோயே வாராதோ நொடியில்நீ தொலைய!"
என்று பல்விதமா யேசலுற்றனளே;
வன்றுயர் தருமவ் வாய்ப்போர் முற்றி
கைச்சண்டை நேருங்கால், அதுகாறும்
நிச்சப்த மாக நின்றே யிருந்தயான்
அறையை விட்டு அவரிடஞ் சென்று
பொறையிலா அவரைப் "பொறுமின்! பொறுமின்!!
என்னே இச்செயல்! என்னே இச்சமர்!!
அன்னே! சீற்றம் ஆறுதி! ஆறுதி!!"—
என்ற என்னை, "எடா! மூடா!
இன்றிவள் கொழுப்பை என்னென உரைப்பேன்?
உன்னைப் பெற்று உவந்து வளர்த்த
என்னை உன் மனைவி ஏசுதல் கண்டும்
அன்னவ ளோடு கொஞ்சும் அறிவிலாய்!
என்ன என் தலைவிதி இருந்தவாறு!
என்று இந்தநீலி இங்கு வந்தனளோ
அன்று தொட்டிதுவரை அவள் ஏவியவா(று)
ஏவல் புரிந்திடும் ஏவலா ளானாய்!
ஆவலென்பால் அணுவுங் கொண்டிலை!
உன்னைப் பெற்று உறுவதிச் சுகமோ?



என்னினும் பாவிகள் யாவ ரிவ்வூரில்?"—
என்றே பழித்து இயம்பின ளன்னை!
புன்மொழி லாரவர் புரிந்தவெம் போரைக்
கண்டும் வசைமொழி காதிற் கேட்டும்
கொண்டு நின்றனன், கூறொணாத் துயரே.
செப்பருங் கவலை சேர்ந்தவ் விடத்தில்
நிற்பதானேன் நெஞ்சு கலங்கியே:
இருவரி லெவர்மேல் யான் சினங்கொள்வ(து)?
ஒருவழி காணேன் உவகை யோடிருக்க,
இருதலைக் கொள்ளி எறும்பென இருந்தேன்;
வரும் அமரொழிய வழியெதுங் காணேன்.
அன்னையே கொணர்ந்த அணங்கினை அன்னை
என்னையே பகைப்பது இன்றென வியந்தேன்!
இருவர்தம் முறையீட் டினையுங் கேட்டுப்
பெருகிய வெஞ்சினப் பிணக்கினை எண்ணி
"இதுவோ குடும்ப இன்பம்!" என்றேங்கி
எதுவோ செய்வ தின்றெனத் திகைத்தேன்!
அவ்வமயத்தே ஆண்டவன் தந்த
செவ்விய செல்வமாம் சிறுவர் போந்து
குழலினு மினிய குமுதவாய் திறந்து
மழலை மொழிந்து மடிபிடித் திழுத்த
மைந்தனைக் கண்டு மனமிக மகிழ்ந்து
சிந்தை வருத்தஞ் சிறிது தணிந்து
மலர்க் கரம்பற்றி மகிழ்வொடு தூக்கி
குலமகன் தன்னொடு குலவுவ தானேன
பான்மண மாறாப் பாலக னவன்முன்
தோன்றிய சிறுமி துணிபற்றி நின்றாள்!
சிறிது முன்னரே சேர்ந்த வெந்துன்பம்
அறியேன்! எங்கே அகன்றதோ தெரியேன்!
இவ்விரு குழவிகள் எய்து(ம்)ந லொற்றுமை
வெவ்விய சினத்திவ் வீணர்கட் கிலையே!
என்றக மிரங்கி எய்திய பாலரின்
இன்முகங் கண்டு இன்புற்று நின்றேன்.
நன்மகவின்பம் நானிலந் தன்னில்
இன்றெனில், தேறுவ தெவ்வித மந்தோ!
ஆற்றொணாத் துயரை அகத்தமைத் திறைவன்
மாற்றிட வளித்தனன் மைந்தரை யென்றே
ஆறுதல் கொண்டு அகத்துயர் மறந்து
தேறியிருந்தேன் தெய்வமே துணையே!




# வீரமா நகர்.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.)

இலங்கையில் வாழ்ந்த அரக்கரெல்லாம் தலை சிறந்த வீராய்த் திகழ்ந்தா ரென்றும், இலங்கை வேந்தனாய இராவணனும், அவன் மைந்தனான மேகநாதனும், தம்பியாய கும்பகர்ணனும், வீரருள் வீராய் விளங்கினரென்றும், முந்திய கட்டுரையிற் கண்டோம். இவ்வாறு எங்கும் வீரமே பொங்கித் ததும்பிய அந்நகரில் விளங்கிய அரக்கர்கள் மாற்ருருடன் போர் புரிந்து வெற்றிபெற்ற நாட்களையே விழுமிய நாட்களாகப் போற்றினார்கள். அன்றியும், மாற்றருடன் மலைந்து மார்பில் விழுப்புண் பட்டு இறந்த நாளே, என்றும் இருந்த நாளென்று இறுமாந்தார்கள்.

இத்தகைய அரக்கர் குலக் கொழுந்தாய் விளங்கிய வீரர் மூவரும் வீரப் புகழை மற்றெவற்றினும் மேலாக மதித்தார்கள். கலைமகளும் திருமகளும் களித்து நடம்புரிந்த இலங்கைமா நகரில் வீரமாது வீறுபெற்று விளங்கினாள். அடலேறு போன்ற அரக்க வீரர், மன்னு உலகத்து மன்னும் புகழை உயிரினும் உயர்வாக ஓம்பிய தன்மை அவரது வரலாற்றில் இனிது விளங்கக் காணலாம். "வில்லாளராணர்க் கெல்லாம் மேலவன்" என்று சொல்லின் செல்வராய கம்பரால் புகழப் பெற்ற மேகநாதன் பொன்றாப் புகழையே குன்றாச் செல்வமாகக் கருதிய செம்மை அறிந்து இன்புறத்தக்கதாகும். அரக்கர் கோன் மைந்தனும் தன்னருமைத் தம்பியுமான அக்கன், அனுமனுடன் பொருது இறந்து பட்டான் என்றறிந்த மேகநாதன் கோபத்தால் மனங் கொதித்து, தரைமீது கிடந்த தம்பியை நோக்கி கூறும் தகைசான்ற சொற்களில் வீரமணம் கமழக் காணலாம்.

"தம்பியை யுன்னுந்தோறுந் தாரைநீர் ததும்புங் கண்ணான்
வம்பியல் சிலையை நோக்கி உருத்து வாய்மடித்து நக்கான்
கொம்பியல் மாயவாழ்க்கை குரங்கினால் குரங்காவாற்றல்
எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழன்றோ தேய்ந்ததென்றான்."

அருமைசான்ற தம்பியின் உடலைக் கண்டபோது மேகநாதனது மனத்தில் மூண்டெழுந்த கோபமும் மானமும் கற்போர் கருத்தைக் கவர்வனவாம். அக்கன் இறந்தான் என்று நினைத்தபோது மேகநாதனது கண்கள் உடன் பிறப்பென்னும் பாசத்தால் நேசத்தாரைகள் சொரிந்தன. அக்கனைக் கொன்ற அனு

---

"ஆபத்துக் காலத்தில் கடவுளுக்குப் பிரார்த்தித்துக் கொள்வதுபோல் பிறகு செய்வது கிடையாது."



மன் உயிரோடு இருத்தலையும் தான் வரிசிலையை வீணே சுமந்து திரிதலையும் நினைந்து வீரன் எள்ளி நகைத்தான். இவ்வாறு மேகநாதனது உள்ளத்தில் எழுந்த பாசம் மாற்றான்மேல் சீற்றத்தை எழுப்புகின்ற முறை அறிந்து இன்புறத்தக்கதாகும். இவ்வாறு மானத்தால் மனங் கொதித்த மேகநாதன் தன் தந்தையின் மாயாப் புகழ் மாசுற்றதென்று நினைந்து வருந்தும் மொழிகளில் வீரப் புகழையே விழுமிய செல்வமாக மதிக்கும் அவ்வீரனது மனப்பான்மை மாண்புற இலங்குவதாகும். விண்ணும் மண்ணும் போற்ற வீரப் புகழ்பெற்ற இலங்கேசனது மைந்தன், ஓர் குரங்கின் வலிமைக்கு ஆற்றாது குழைந்து அழிந்தான் என்றால் இராவணன் புகழ் என்னாகும் என்று ஏங்கினான். நீண்ட புகழால் உலகளந்த நிருதர்கோன் மைந்தன், ஓர் வானரத்தின் வலிமைக் காற்றாது இறந்தான் என்றால் வானவர் நகுவரென்று மேகநாதன் வருந்தினான். தம்பி இறந்தான் என்னும் வருத்தத்தினும் மேலாக தந்தையின் புகழ் தேய்ந்ததென்று வருந்தும் மேகநாதனது மனப்பான்மை இனிது விளங்குவதாகும்.

இவ்வாறே, இராவணன் தம்பியாய கும்பகர்ணனும் உயிர் கொடுத்து உலையாப் புகழ்பெற்று வாழக்கருதினான். அறநெறி திறம்பிய அரக்கர்கோனை ஆதரித்தோர் எல்லாம் அழிந்தொழிவது திண்ணம் என்று கும்பகர்ணன் நன்றாய் அறிந்திருந்தும், அமர்க்களத்தில் அண்ணனுக்காகப் போர் புரிந்து அழியாப் புகழ் பெறுதலே பிறவிப்பயனாகு மென்று கருதினான். அஞ்சனவண்ணனாய அயோத்தி அண்ணலைச் சேர்ந்து இம்மைச் செல்வமும் மறுமைச் செல்வமும் எய்தி என்றும் வாழுமாறு இரந்து வேண்டிய விபீடணனை நோக்கி, கும்பகர்ணன் கூறும் மொழிகள், அவனது மனப்பான்மையை பளிங்குபோல் விளக்கக் காணலாம்.

"மலரின்மே லிருந்தவள்ளல் வழுவிலா வரத்தினால் நீ
உலைவிலாத் தருமம்பூண்டாய் உலகுளதனையும் உள்ளாய்
தலைவன் நீ உலகுக்கெல்லாம் உனக்கது தக்கதேயால்
புலையுறு மரணமெய்தல் எனக்கது புகழதேயால்."

என்று கும்பகர்ணன் வீரமொழி பகர்ந்தான். அறநெறியில் நின்று அழியாப் பேறு பெறக் கருதிய தம்பிக்கும் மறநெறியாகிய வீர நெறியில் நின்று மாயாப் புகழ்பெறக் கருதிய தனக்கும் உள்ள வேற்றுமையைக் கும்பகர்ணன் விளக்கமாய் எடுத்துரைத்தான். அறநூல்களை ஐயந்திரிபற ஓதியுணர்ந்து, விதித்தன செய்து விலக்கியன ஒழித்து வாழும் விழுமிய நெறியை மேற்கொண்ட விபீடணன், அறநெறியை ஆதரித்தொழுகும் அயோத்தி அண்ணலைச் சேர்ந்து, இருமைச் செல்வமும் பெறுதல் பொருந்து மென்றும், வீரமே விளைத்து விண்ணும் மண்ணும் வென்ற ஆண்மை மாசுறாதவாறு போர் புரிந்து அமர்க்களத்தில் ஆவி துறத்தலே தனக்கு ஏற்றதாகும் என்றும், கும்பகர்ணன் கூறும் மொழிகளில் வீரமணம் வீசக்காணலாம்.

இன்னும் மாற்றானது அடிபணிந்து அவன் அளிக்கும் செல்வத்தைப் பெற்று அரசாள்வதினும் அவனுடன் போர் புரிந்து புலையுறு மரண மெய்தல், என்றும் பொன்றாப் புகழளிக்குமென்று கும்பகர்ணன் கருதினான். அயோத்தி வீரனாய இராமன் அறநெறி வழுவாத அண்ணலேயாயினும், அவனே இறுதி

---

"ஒருவனைப் பற்றி ஒன்றுந் தெரியாவிட்டாலும் தமக்கு எல்லாம் தெரிந்து விட்டதாக அவனைக் கேவலப்படுத்திப் பேசுவது சிலரது வழக்கம்."

யில் வெற்றி பெறுவான் என்பது ஒரு தலையாயினும், மற்றொருவனது அடி பணிந்து அவன் அளிக்கும் இலங்கைச் செல்வம் பெற்று இனிதுவாழக் கும்ப கர்ணன் இறையளவும் இசைந்தானல்லன். அவ்வெளிமையை நினைந்த போதே அவன் நெஞ்சம் மானத்தாற் கொதித்துக் குமுறுவதாயிற்று.

"செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம்தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகையைவாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங்கொண்ட புண்ணுடை நெஞ்சோடைய
கும்பிட்டு வாழ்கிலேன்யான் கூற்றையும் ஆடல்கொண்டேன்."

என்று கும்பகர்ணன் கூறும் வீரமொழிகளில் மானத்தா லெழுந்த மனக் கொதிப்பு மாண்புற விளங்குகின்றது. இலங்கைமா நகரின் அளவிறந்த பொருளை விரும்பித் தமையனைக் கொன்ற பகைவனது தாள் பணிந்து அவன் முன்னே குறுகி நின்று கும்பிட்டு வாழ்தல் கூற்றையும் ஆடல் கொண்ட வீரர்க்கு ஏற்ற தன்றென்று, கும்பகர்ணன் கூறும் சொற்களில் வீரமணம் கமழக் காணலாம். உயரிய வீரம்வாய்ந்த ஒருவன், தன் படைவலியாலும் தோள்வலியாலும் பாராளக் கருதுவனே அன்றி மற்றொரு வீரன் மனமுவந் தளிக்கும் எச்செல்வத்தையும் பிறர் மிச்சிலென்றிகழ்வான் என்பது கும்பகர் ணனது வாய் மொழியால் சிறந்து விளங்கக் காணலாம்.

## செந்தமிழ்ச் செல்வர்கட்கு வேண்டுகோள்.

நமது தமிழகத்தில் சிறுவர்—சிறுமியர் விளையாடும் போது—அவ்வவ் விளையாட்டுக் கேற்ற பல அருமையான பாட்டுக்கள் அவர்களால் பாடப்பெறுகின்றன. தாய்மார் தங்கள் குழந்தைகட்கு உற்சாகங் கொடுக்கவும் அவர்களை உறங்க வைக்கவும் பல அருமையும் பெருமையும் செறிந்த பாடல்களைப் பாடுகின்றனர். தங்கள் தங்கள் தாய் மொழிகளின் மாட்சியில் பற்றுள்ளவர்களென்று அவைகளை வளர்க்க முற்படும் ஒவ்வொரு நாட்டவரும் அத்தகைய பாடல்களைத் திரட்டி இலக்கிய வளர்ச்சி செய்து வருகின்றனர். நமது தமிழ் மக்களிடையே அத்தகைய உணர்ச்சி இன்னும் தோன்றாதிருத்தல் வருந்தத்தக்க விஷயமாகும். செந்தமிழ் அன்பர் எல்லோரும் இவ்விஷயத்தில் சிந்தை செலுத்தி அத்தகைய பாடல்களைத் திரட்டி அனுப்பின் தமிழ் அன்னைக்குச் சிறந்த தொண்டு புரிந்தவராவர். முக்கியமாய்க் கிராமங்களில் உள்ள ஆரம்பாசிரியர்கள் இப்பணியை மேற்கொள்ளலாம் என்பதையும் தனியாகக் குறிப்பிடுகின்றோம். சிறந்த முறையில் கிடைக்கப் பெறும் பாடல்களையும் அனுப்பியவர் பெயரையும் நமது "ஆனந்தபோதினி"யில் வெளியிட்டுவருவோம். [ப—ர்.]

"புருஷர்கள் தங்களிச்சைக்காகச் சொல்லும் வார்த்தைகள் இச்சை முடிந்ததும் பறந்து போய்விடும்."

# கம்பர் கவிநயம்.

(பண்டிதர், ரா. திம்மப்ப ஐயர்.)

'பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகஞ்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம்'

என்பது இராமாயணத்து நாட்டுப்படலத்தின் கண் வருகின்ற மிகச் சிறந்த ஓர் பாசுரமாகும். இதன்கண் கூறப்பட்டுள்ள விடய வமைப்பை யினித் துருவி யாய்ந்து வரையத் தொடங்குவாம். கோசலநாட்டு மங்கையர் பந்து களை யாடு மிடம் சந்தனச் சோலைகளாயினும் (உய்த்தறியு மிடத்து அவை யல); மற்று அவை சண்பகச் சோலைகளே யாம்: மயில்வாகனத்தை ஏறி நடத்துகின்ற முருகக்கடவுளை யொத்த வாலிபர் நூல்களை யாராய்கிற கல் விச்சாலைகள் நந்தன வனங்களாயினும் (உய்த்தறியு மிடத்து அவையல) மற்று அவை தேன்பாய்ந்த முல்லை வனங்களாம், என்பது இப்பாட்டின் றெளிந்த பொருள். முன்னிரண்டடிகளும் பின்னிரண்டடிகளுடன் முறையே சென்றியைந்து பொருள் படுதலால் இதுமுறைநிரனிறை யணியாம். யதா சங்கியா லங்காரமென்பர் வடநூலார். மாதர் பந்தாடிடம் சந்தன வனமே யாயினும் அவர்கள் மேனி நிறத்தினாலும் சுவாச வாசனையினாலும் பந்துக் கள் வீசுதலால் வண்டுகள் மொய்க்காமையினாலும் சண்பகவன மெனக் கூறப்பட்டது. வாலிபர்கள் கலைபயிலிடம் நந்தனவனமே யாயினும், அவர் கள் கலைபயிலுங்கால் பற்கள் முல்லை யரும்புபோலப் பிரகாசிப்பதனாலேயும், அவர்களது மேனி முல்லைமலர்போல் மணம் வீசுதலாலும், வேதமோதுங் குரலிசை வண்டுகள் பாடும் இசைபோன்றிருப்பதாலும் முல்லை வனமெனக் கூறப்பட்டது. எனவே பந்தாடிய மாதரது கூட்ட மிகுதியும் சந்தனவனத் தின் வாசனையையுங் கவளீகரித்து, அதனினு மிக்கு அவர் தம் மேனியின் கண் இயல்பாயிருந்த சண்பகவாசமே யாண்டும் பரந்திருந்த தாகலின், சண் பகவன மென்னலாம் படியாயிற் றென்ற அவரது திருமேனியின் எழிலார் வாசமும் வருணிக்கப்பட்ட படியாம். அவரது பந்தாட்டின் சிறப்பை,

'வைத்த பந்தெடுத்தலும் மாலையுட்க ரத்தலுங்
கைத்தலத்தி னோட்டலுங் கண்ணி நெற்றி நீட்டலும்
பத்தியிற்பு டைத்தலும் பையாவி னூடலும்
இத்திறத்த பந்தினோ டின்பமெல்லை யில்லையே'

'அங்கையங் தலத்தகத்த வைந்துபந் தமர்ந்தவை
மங்கையாட மாலைசூழும் வண்டுபோல வந்துடன்
பொங்கி மீதெழுந்து போய்ப்பிறழ்ந்து பாய்த லின்றியே
செங்கயற்கண் புருவந்தம்முன் உருவஞ் செய்யத் திரியுமே'

'மாலையுட்கரந்த பந்து வந்து கைத்தலத்தவா
மேலநாறிருங் குழற் புறத்தவாண் முகத்தவா
நூலினேர் நுசுப்புநோவ வுச்சிமாலை யுள்ளவா
மேலெழுந்த மீநிலத்த விரலகைய வாகுமே'

என்ற சீவகசிந்தாமணிச் செய்யுட்களிலும் அவற்றி னுரையிலுந் தெளியக் காண்க. மற்றும் கொங்குவேண் மாக்கதை யென்னும் அரிய சங்கநூலில் 4-வது வத்தவகாண்டத்துப் பந்தடி கண்டது என்ற உட்பிரிவின் கண் மகளிர் பந்தாட்டிலக்கண வகைகளி யாவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளமை நம் பண்டைத்தமிழ் மக்களின் பந்தாட்டு நாகரீகப் பான்மையை நன்கு தெளிவுறுத்தற்குப் போதிய சான்றாகும். உலக மதனைத் தெரியவேண்டி அந்நூலிலிருந்து சில பகுதிகளை யீண்டு வரைகின்றேன்.

'மதுநாறு தெரியன் மகதவன் றங்கை
பதுமா பதிதன் பணியெதிர் விரும்பி
விராய்மலர்க் கோதை யிராசனை யென்போள்
கணங்குழை முகத்தியை வணங்கினள் புகுந்து
மணங்கமழ் கூந்தலும் பிறவுந் திருத்தி
யணங்கெனக் குலாஅ யறிவோர் புனைந்த
கிடையும் பூளையு மிடைவரி யுலண்டு
மடையப் பிடித்தவை யமைதியிற் றிரட்டிப்
பீலியு மயிரும் வாலிதின் வலந்து
நூலினுங் கயிற்றினு நுண்ணிதிற் சுற்றிக்
கோலமாகக் கொண்டனர் பிடித்துப்
பாம்பின் றோலும் பீலிக் கண்ணும்
பூம்புன லுரையும் புரையக் குத்திப்
பற்றிய நொய்மையிற் பல்வினைப் பந்துகள்
வேறுவே றியற்கைய கூறுகூ றமைத்த
வெண்மையுஞ் செம்மையுங் கருமையு முடையன
தண்வளி யெறியினுந் தாமெழுந் தாடுவ
கண்கவ ரழகொடு நெஞ்சக லாதன
ஒண்பந் தோரேழ் கொண்டன ளாகி
யொன்றொன் றேற்றி யுயரச் சென்றது
பின்பின் பந்தொடு வந்துதலை சிறப்பக்
கண்ணிமை யாம லெண்ணுமி னென்று
வண்ண மேகலை வளையொடு சிலம்பப்
பாடகக் கான்மிசைப் பரிந்தவை விடுத்துஞ்
சூடக முன்கையிற் சுழன்றுமா றடித்தும்

வீண் செலவு மிடியின் கருவி.



அடித்த பந்துகள் அங்கையி னடக்கியு
மறித்துத் தட்டியுந் தனித்தனி போக்கியும்
பாயிர மின்றிப் பலகல னொலிப்ப
வாயிரங் கைநனி யடித்தவ ளகல
வன்ன மென்னடை யவந்திகை யுவந்தவள்
கண்மணி யனைய வொண்ணுதற் பாவை
காஞ்சன மாலை வாங்குபு கொண்டு
பிடித்த பூம்பந் தடித்துவிசும் பேற்றியு
மடித்த பந்தால் விடுத்தவை யோட்டியுங்
குழன்மேல் வந்தவை குவிவிரற் கொளுத்தியு
நிழன்மணி மேகலை நேர்முகத் தடித்துங்
கண்ணியிற் சார்த்தியுங் கைக்குட் போக்கியு
முண்ணின்று திருத்தியும் விண்ணுறச் செலுத்தியும்
வேயிருந் தடந்தோள் வெள்வளை யார்ப்ப
வாயிரத் தைந்நூ றடித்தன ளகலச்
செயிர்தீர் பதுமைதன் செவிலித் தாய்மகள்
அயிரா பதியெனும் அம்பணைத் தோளி
மானேர் நோக்கிற் கூனி மற்றவ
டானேர் வாங்கித் தனித்தனி போக்கி
நாற்றிசைப் பக்கமு நான்கு கோணமுங்
காற்றினுங் கடிதாக் கலந்தன ளாகி
யடித்தகைத் தட்டியுங் குதித்தமுன் புரியா
வகங்கை யொட்டியும் புறங்கையிற் புகுத்தியுந்
தோண்மேற் பாய்ச்சியும் மேன்மேற் சுழன்றுங்
கூன்மேற் புரட்டியுங் குயநடு வொட்டியும்
வாக்குறப் பாடியு மேற்படக் கிடத்தியு
நோக்குநர் மகிழப் பூக்குழன் முடித்தும்
பட்டநெற்றியிற் பொட்டிடை யேற்று
மற்றது புறங்கையிற் றட்டின ளெற்றியு
முன்னிய வகையான் முன்னீ ராயிரங்
கைந்நனி யடித்துக் கையவள் விடலும்
பேசிய முறைமையி னேசா நல்லெழில்
வாசவ தத்தைக்கு வலத்தோ ளனைய
வச்சமில் காரிகை விச்சுவ லேகையென்
றுற்ற நாமப் பொற்றொடிக் குறளி
யானிவ ணிற்பக் கூனியைப் புகழ்தல்

வழக்கு நீத்தே செழிப்புடன் வாழுக.

ஏலா தென்றவள் சேலங் திருத்திக்
கருவிக் கோனனி கைப்பற் றினளாய்
முரியுங் காலைத் தெரிய மற்றதிற்
றட்டின ளொன்றென் றற்றன ளெழுப்பிப்
பத்தியிற் குதித்துப் பறப்பன வாகியும்
வாங்குபு கொண்டு வானவிற் போல
நீங்கிப் புருவ நெரிவுட னேற்றியு
முடக்குவிர லெற்றியும் பரப்புவிரற் பாய்ச்சியுந்
தனித்து விரற்றரித்து மறித்தெதி ரடித்துங்
குருவிக் கவர்ச்சியி னதிரப் போக்கியு
மருவிப் பரப்பின் முரியத் தாழ்த்தியு
மொருபாற் பந்தி னொருபாற் பந்துற
விருபாற் றிசையு மியைவன வாகிப்
பாம்பொழுக்காக வோங்கின வோட்டியுங்
காம்பிலை வீழ்ச்சியி னுங்கழித் திட்டு
முன்னிய வகையான் முன்னீ ராயிரத்
தைந்நூ றடித்துப் பின்னவள் விடலுஞ்
சீரியல் பதுமைதன் சிந்தைக் கொப்பெனுங்
காரிகை மயிலன வாரிகை புகுதா
நுணங்குகொடி மருங்கு நோவ வசைஇ
மணங்கமழ் கூந்தல் வகைபெற முடித்துஞ்
சூடக மேற்றியும் பாடகந் திருத்தியு
நாடக மகளிரி னன்கன மூலாவியு
மிருகைபு மடிப்ப விசும்பொடு நிலத்திடை
திரிபுவீழ் புட்டோ லொருவயி னில்லா
தெழுந்துவீழ் பந்தோ டெழுந்துசெல் வனள்போற்
கருதரு முரிவொடு புருவமுங் கண்ணும்
வரிவளைக் கையு மனமு மோட
வரியார் மேகலை யார்ப்பொடு துளங்கவும்
வருமுலை துளும்பவுங் கூந்த லவிழவு
மரிமலர்க் கோதையோ டணிகலஞ் சிதறவு
மிருந்தன ணின்றன ளென்பதை யறியார்
பரந்த பஃறேன் வடிவின ளாகித்
திரிந்தன ளடித்துத் திறத்துளி மறித்து
முரியுந் தொழிலொடு மூவாயிரங்கை
முறையி னேற்றிப் பந்துநிலத் திடலும்





வரிநெடும் பந்து வந்தெதிர் கொள்ளுந
ரொருவரு மின்றி நின்றுழிப் பொருவரும்
வாளேர் தடங்கண் வாசவ தத்தை
கோளேர் மதிமுகங் கோட்டி நோக்கக்
கடையோர் போலக் காமத்திற் கழுமா
திடையோ ரியல்பின தாகி யில்லை
துடையோர்க் குரிய வுதவி நாடி
ஆணுச் சிறப்பின் யாவர்க் காயினுந்
தானப் பெரும்பயந் தப்புத லின்றி
யோசை யோடிய வுலவாச் செல்வத்துக்
கோசல வளநாட்டுக் கோமாற் பிழையாத்
தேவியர்க் கெல்லாந் தேவியாகிய
திருத்தகு கற்பிற் றீங்குயிற் கிளவி
வரிக்குழற் கூந்தல் வசுந்தரி தன்மகள்
மானே யன்ன மயிலே மால்வரைத்
தேனே பவளந் தெண்கட னித்திலங்
கயலே காந்தள் புயலே பொருவிற்
பையே பொற்றுடி படைநவில் யானைக்
கையே குரும்பை கதிர்மதி வேயே
நோக்கினு மொதுக்கினு மாக்கே ழணிந்த
சாயல் வகையினுஞ் சால்புடை மொழியினு
மாசில வாயினு மணிபெற நிரைத்த
பல்லினுங் கண்ணினு மெல்விரல் வகையினு
நறுமென் குழலினுஞ் செறிநுண் புருவத்
தொழுக்கினு மிழுக்கா வல்குற் றடத்தினு
மெல்லிய விடையினு நல்லணி குறங்கினுங்
குற்றமின் முலையினு முகத்தினுந் தோளினு
மற்றவை தொலையச் சொற்றெளி திகழத்
தனக்கமை வெய்திய தீவளையங் கிண்கிணி
வனப்பெடுத் துரைஇ வையகம் புகழினும்
புகழ்ச்சி முற்றாப் பொருவரு வனப்பிற்
றிருக்கண் டன்ன வுருக்கிளர் கன்னி
கோசலத் தரசன் கோமகட் பூவணி
வாசச் சுரிகுழன் மாணிழை யொருத்தியென்
றுங்கொரு காரணத் தவள்வயி னிருந்தோள்
பூங்குழை தோற்றது பொரூஅ நிலைமைய

ளெழுந்தன டேவியைப் பணிந்தனள் புகுந்து
மடந்தைய ராடலை யிகழ்ந்தன ளகையா
வந்தரி வையரெதிர் வாசதி வகையாற்
பந்தா டிலக்கண நின்றுபல பேசி
..................................
..................................
..................................
சொல்லிய மகளி ரெல்லாங் காணச்
சில்லரிக் கண்ணி மெல்லென முரியாச்
செந்தளிர் பொருவச் சிவந்த கையாற்
கந்துக மேந்திக் கசிந்த கோதைக்கு
மிகைக்கை காணார் நகைப்படு மவளென
உகைத்தெழு பந்தி னுடனெழுவன போற்
சுழன்றன தாமங் குழன்றது கூந்தல்
அழன்றது மேனி யவிழ்ந்தது மேகலை
யெழுந்தது குறுவியர் இழிந்தது சாந்தம்
ஓடின தடங்கண் கூடின புருவ
மங்கையி னேற்றும் புறங்கையி னோட்டியுந்
தங்குற வளைத்துத் தான்புரிந் தடித்து
மிடையிடை யிருகாறெரிதா மடித்து
மாவணி யல்குற் றுகினெறி திருத்தியு
நித்திலக் குறுவியர் பத்தியிற் றுடைத்தும்
பற்றிய கந்துகஞ் சுற்றுமுறை யுரைத்துந்
தொடையுங் கண்ணிபு முறைமுறை யிபற்றியும்
அடிமுதன் முடிவரை யிழைபல திருத்தியும்
படிந்தவண் டெழுப்பிபுங் கிடந்தபர் தெண்ணியுந்
தேமலர்த் தொடையல் திறத்திறம் பிணைத்தும்
பந்துவா னோக்கியும் பாணிவா ரொடித்துஞ்
சிம்புளித் தடித்துங் கம்பிதம் பாடியு
மாழியென வருட்டியுந் தோழியொடு பேசியுஞ்
சாரிபல வோட்டியும் வாழியென வாழ்த்தியும்
அந்தளிர்க்கண்ணி அவந்திகை வெல்கெனப்
பைந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணு யிரங்கை யேற்றின ளென்றலும்'

இப்பகுதிகளால் உதயண வேந்தனது உரிமைத் தேவியரிருவரும் **தத்தம் தோழிமார்களுடன்** பந்து விளையாடிய பான்மை **எத்துணை** யருமையுடன்





விளங்கிற் றென்பது நன்கு தெரியலாகும். எந்நூலிலுங் காணப்படாத இத்தகைய பந்து விளையாட்டு வருணனையை மிகச் சிருங்காரமாக வருணித்த நந்தம் புலவர் பெருமானாகிய கொங்குவேளிரது பெறவரும் புலமைத்திற வினோதமும், செல்லுவாய்ப் பட்டொழியாது நம் தமிழ்நாடு கண்டுகளிக்க இந்நூலை யச்சுவாகனத்தேற்றி யுபகரித் தருளிய புலவர் மகாதிலகம் தாக்ஷி ணாத்ய கலாநிதி மகாமகோபாத்தியாய வே. சாமிநாத ஐயரவர்களது தன்னிகரில்லாப் பேராராய்ச்சியுட னிலங்கும் தமிழபிமானமும் நம்மனோரால் என்று நின்று கொண்டாடற் பாலனவாம். வெகு காலத்திற்கு முன்னரேயே நம் நாட்டுப் பெண்டிர் பந்தாட்டயர் வதிற் பலவகைத் தேர்ச்சியுற் றிருந்தன ரென்ற நாகரீகப்பான்மை மேற்கூறிய வாற்றாற் றெள்ளிதிற் புலனாகின்றதன்றோ? மிகைபடச் சொல்வானேன்? ஸர்க்கஸ் என்று இக்காலத்திலாங்காங்குக் காட்டப்படு மாட்டங்களில் மகளிராடும் பந்தாட்டத்தின் மேன்மையே மிக மாண்புடன் திகழ்கின்றதெனின், நம் பண்டைக்கால மகளிர் பந்து விளையாட்டம் எத்துணையோ மேன்மையாக இருந்திருக்க வேண்டு மென்பதிற் சற்றேனும் ஐயமுண்டோ?

மயிலூர் கந்தனை யனையவர் எனக் கலைபயில்சிறாரைச் சிறப்பித்தவதனால் வித்தைக் கதிதேவதையாய் ஞானமூர்த்தியாய் விளங்கும் முருகப் பெருமானைப் போலவே பல வல்லமையும் அவர் பெறுத லுறுதியா மாறு காண்க. மயிலாகிய அஞ்ஞானத்தை யடக்கிக்கொண்டு அதன்மே லிவர்ந்துள்ள குகனைப் போலவே, அவிச்சையை யகற்றி வித்தையில் விளங்கும் அவ்வாலிபாது கல்வி யாற்றலைக் குறித்தே 'மயிலூர் கந்தனை யனையவர் கலைதெரி கழகம்' என்றாரென்க. இனி, 'அயில்ஊர் கந்தனை அனையவர்' எனப் பிரித்து ஞானசத்திவேலை யேந்திய முருகனைப்போன்றவ ரெனவும் இத்தொடர்க்குச் சிலர் பொருள் காண்பர். இவரது மேனியின் முல்லைவாச மிகுதியான் பல ஜாதி மலர்களின் பரிமளமிக்க நந்தவனம் வாச மடங்க முல்லைவாசமே மிக்கதென்க. கலை பயில்பவர் பிரமசாரிகளாகலின் அவர்கள் பற்கள் முல்லையரும்புபோ லிருக்கின்றன வென்ற குறிப்பும் இதிற் றொனித்த லறிக. இனி, வாலிபர் தனுர்வேதம் பயிலுமிடம் நந்தனவனமல்ல காடுபோ லாகும்; ஏனெனில் படைபயிற்று மிடமாகலின் அவண் போதற்கு யாவர்க்கும் அச்ச முண்டாம் எனப் பொருள் கொள்வாரு முளர். இளையவர் பந்தினைப் பயிலிடம் சந்தன வனமே யல்ல சண்பகவனமுமாம்; கந்தனை யனையவர் கலைதெரி கழகம் நந்தனவனமே யல்ல நறைவிரி புறவுமாம், எனச் சிலருரைக்கும் உரையிற் பொருட்பொலிவு விளங்காமை உய்த்துணரத் தக்கதாம். இதனால் கலை பயில் சிறாரது சிறப்பும் அவரது தெய்வீக வன்மையும் வனப்பும் இனிது விளங்குதல் காண்க. இதனாற் பண்டைக்காலத்து நந்தமிழ் மக்கள் வனங்களிடத்தே மனந்தூய் தாதற்கேற்ற வசதிகொண்டு இனிது கலைபயின்று சிறந்தனரென்ற நாகரீகமேன்மை இக்கவியிற் றெளிவுறுதல் பாராட்டற் பாலதால் பட்டி மண்டபத்திலும் கலைபயிறல் பழையகால வழக்க மென்பதை ஆன்றோர் வாக்குக்களான் இனி துணாலாகும் இதனைப் 'பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்' என்று புனைந்துரைத்தனர் பிறிதோரிடத்தும் நம் கம்பநாடார் என்க. 'பன்னருங் கலைதெரி' என்றதால், வேதங்களின் அங்கங்களாகிய சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கற்பம் என்

பவைகளையும், ஆயுர்வேதமாகிய வாகடநூல், காந்தர்வவேதமாகிய இசைநூல், தனுர்வேதமாகிய விற்பயிற்சிநூல் ஆதிய வற்றையும் குறிப்பித்தமை செவ்விதின் விளங்கும். மணிவாசகப் பெருமானார் 'பட்டி மண்டப மேற்றினை யேற்றினை' யென்றிதனைத் திருவாசகத்துக் குறித்துள்ளார். 'ஒட்டிய சமயத்துறு பொருள் வாதிகள், பட்டி மண்டபத்துப் பாங்கறிந்தேறுமின்' என்ற மணிமேகலையும், 'பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்' என்ற சிலப்பதிகாரமும் ஈண்டைக்கு நோக்கத் தக்கனவாம். எனவே நம் பழந்தமிழ் மக்கள் விழுமிய கலைபயின்று ஞானச்சுடர் மிக்கு நாகரீக முதிர்ந்த பெரியார்களாய் விளங்கினார்கள் என்ற செய்தி மேற்கூறிப் போந்த வாற்றான் விளங்கிக் கிடத்தலின் நாமும் நம் பழந்தமிழை மறவாது மனத்துட்கொண்டு உலகைத் தமிழ்மய மாக்குந்திறத்தி லூக்கங் கொள்வோமாக.

காளி:—"பார்வதிக்குத் தன் பிள்ளைகள் செய்கிற குற்றங்கள் ஒன்றேனும் கண்ணுக்குத் தோன்றுவதில்லை."

வள்ளி:—"எந்தத் தாய்க்கும் தன் பிள்ளைகள் செய்கிற குற்றங்கள் தோன்றுவது இல்லை"

காளி:—"அந்தப் பேச்சை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். என் பிள்ளைகள் ஒரு குற்றங்கூடச் செய்யமாட்டார்கள். செய்தால் கட்டாயம் எனக்குத் தெரிந்தேதீரும்."

* * *

ஒருவன்:—"பக்கத்து வீட்டுப் பெண் குழந்தைக்குப் பேர்வைத்து விட்டார்களா?"

மற்றவன்:—ஓஹோ அந்த அழுமூஞ்சி குழந்தையைக் கேட்கிறாயா? வீட்டுக்காரர்கள் பேர் வைத்தார்களோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் அது இரவில் இராகம் வைக்கத் தொடங்கும்போது, அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாரும் அக்குழந்தைக்கு அநேக பேர்களை வைக்கத்தொடங்கி விடுகிறார்கள்.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.

# மேனாட்டு விழுச் செல்வம்

(பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

மனித வாழ்வு பெறுதல் அரியதோர் காரியம். ஆனால் பெறற்கரிய மக்கள் வாழ்வு பெற்றுவிட்டால் அவ்வாழ்வின் இலட்சியம் யாது? இன்பம் ஒன்றே என்று எல்லோரும் இயம்புவர். இதை யாரும் மறுக்க இயலாது. சகல மதங்களும் இதையே சாற்றும்.

இன்பம் இருவகைப்படும்—சிற்றின்பம் பேரின்பம் என. ஒன்று அழியுந் தன்மை உடையது, சீக்கிரம் தெவிட்டிப் போவது, இறுதியில் இன்னலில் கொண்டு சேர்ப்பது. பேரின்பமோ என்றும் நிலைபெற்றது, அந்தமில்லாதது, தெவிட்டாதது, ஒரு பொழுதும் துன்பமாய் மாறாதது. இவ்வாறு மாறுபட்டிருப்பினும் இரண்டையும் இன்பமென்றே உலகம் உரைக்கும். அதனால் எத்தகைய இன்பமானாலும் மனித வாழ்வின் லட்சியம் இன்பமே என்று கூறுவதில் இழுக்கில்லை.

இந்த லட்சியத்தை அடையும் வழி என்ன? மனிதன் உண்மையான இன்பத்தை விரும்பினால் ஒழுக்கத்தின் மூலமாகவே அதை உண்டாக்கிக் கொள்ள ஒண்ணும். இவ்வுண்மையை இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னதாகவே நமது தமிழ் மறை வகுத்த வள்ளுவர்,

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழு மில."

என்று வற்புறுத்தி அருளியிருக்கின்றார். அறநெறி நிற்பவரே ஆனந்தம் அடைவர்; அல்வழி சேர்ப்பது அல்லலிடமே.

சந்தோஷமாய் இருப்பதற்குரிய வழியை அறிந்து கொண்டோம்; அந்நிலை அடைய அவ்வழி செல்ல அவசியமான சாதனம் யாது? அறம் செய்ய வேண்டுமானால் நமக்கு இருக்க வேண்டியது என்ன? எதைக் கொண்டு அறம் இயற்றலாம்? இக்கேள்விக்கும் வள்ளுவரே விடை பகர்வார்.

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு."

பொருள் ஒன்று தேடிவிட்டால் அதைக் கொண்டு அறம், இன்பம் இரண்டும் எளிதில் பெற்றுவிடலாம் என்பது அவருடைய கருத்து.

அறம் அடைவதற்குப் பொருள் தேவையாய் இருப்பதுபோலவே அறத்தின் சாரமாய் நிற்கும் அருளைப் பூண்டு ஆனந்தம் காண்பதற்கும் பொருள்

பிறர் கை நோக்கான் அற நெறி மிக்கான்.

தேவையாகும். அருள் மனத்திலேயே அரும்பவேண்டியதானாலும் அதை வளர்த்துப் பயன் தரச் செய்வது பொருளாகும்.

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு."

என்பது பொய்யா மொழி. ஆகவே இன்ப லட்சியம் அடையும் அற வழியில் நிற்க, அருள் சுரக்க ஐஸ்வரியம் அத்யாவசியம் என்பது அறியலாகும்.

இனிப் பொருள் என்றால் என்ன? அதுவும் இருவகைப்படும். ஒன்று செல்வப் பொருள். மற்றொன்று கல்விப் பொருள். வாழ்விற்கு எப்பொருள் தேவை. இரண்டுமே. ஒன்று மட்டும் இருந்தால் போதாது. செல்வம் உடலையும் கல்வி உயிரையும் ஒக்கும்.

உடல் இல்லையானால் உயிரால் ஒன்றும் உலகில் சாதித்துக் கொள்ள இயலாது. சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுதவேண்டும்? உயிர்க்குரிய சாதனம் உடல்; சாதனமின்றி ஒன்றைச் சாதிப்பார் தரணியில் கிடையார். உயிர் இல்லையானால் உடல் தரும் பயன் யாதுமுண்டோ? ஒன்றுமே கிடையாது. அம்மட்டோ? உயிரில்லா உடலால் உறுவது கேடேயாகும். அதனாலேயே அது பிணமென்று இகழ்ந்து உற்றார் உறவினராலும் உடனே அகற்றப்படுகின்றது. உயிரற்ற உடல் புதைக்கப்பட அல்லது எரிக்கப்படுதற்கே உரியது.

அவ்வாறே செல்வமில்லையானால் கல்வி எப்பயனும் காண இயலாது. செல்வம் போய்விடுமானால் அதனோடேயே சிறந்த கல்வியும் மாய்ந்துவிடும் என்று நாலடியார் நவில்கின்றது.

"எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்ப்பா டிலவாம்."

என்பது குமரகுருபரர் கூற்று.

அதுபோல் கல்வி யில்லையானால் செல்வம் ஈட்டுதலும் இயலாது; உபயோகிக்கவும் ஒண்ணாது. அறிவில்லார் வசம் ஐஸ்வரியம் அடையுமானால் அது பேடி கையில் பிடித்த வாளை ஒக்கும். அது உடையவனுக்கும் பிறர்க்கும் தீமையே விளைவிக்கும். ஆகவே மனிதன் பொருளால் இன்பம் காண வேண்டுமானால் இருவகைப் பொருளையும் தேடிக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

செல்வம் கல்வி இரண்டும் இன்றியமையாது வேண்டப்படுமாயினும் அவற்றுள் ஏற்றத் தாழ்வு இல்லாமல் இல்லை. செல்வத்திலும் கல்வியே சிறப்புடையது என்பதைச் சிறியாரும் அறிவர். செல்வம் அழிந்துபோகும் கல்வியோ அழியாதது. செல்வம் கொடுக்கக் குறைபடும்; அறிவோ அபரிமிதமாக அயலார்க்கு அளித்தாலும் அளவு குன்றாது அபிவிருத்தியே அடையும். தவிர ஐஸ்வரியம் தேடவும் உபயோகிக்கவும் காக்கவும் அத்யாவசியமாய் வேண்டிய சாதனம் அறிவேயாகும். அதனாலேயே அறிவே செல்வம் என்பர் அறிஞர்.

---

உணவுடை பெருக்க மணமுறு முலகே.



"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை."

என்பது குறள். ஒருவனுக்கு அழியாத உயர்ந்த பொருள் கல்வி; பிறவெல்லாம் பொருள் ஆகா. அதாவது அறிவு இருந்தால் போதும்; பிறபொருள் எல்லாம் தாமாகவே வந்து தங்கும் என்பதாம்.

இனி இப்பொருள் சம்பந்தமாய் இந்தியாவின் நிலைமை என்ன? ஒரே மொழியில் ஓவியம் தீட்டினது ஒப்ப உரைத்துவிடலாம். அவ் ஒரு மொழியே வறுமை என்பதாகும். இந்தியாவில் இருவகை ஏழைகளும் ஏராளம். நாளுக்கு நாள் தரித்திரம் அதிகம். கல்வியும் குறைந்துகொண்டே போகின்றது; எழுதப் படிக்கத் தெரிந்தவர் நூற்றுக்கு ஏழுபேரே. ஆகவே தாழ்ந்த சாதனப் பொருளாகிய செல்வமுமில்லை; உயர்ந்த செல்வமாகிய கல்வியுமில்லை.

ஆனால் மேனாட்டில் இவ்விரண்டும் அபரிமிதம். சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக ஸ்ரீ தேவியும், சரஸ்வதியும் மேனாட்டையே தங்கள் வாசஸ்தலமாக்கிக்கொண்டு விட்டனர். அங்கே தினசரி சராசரியாக இரண்டு ரூபாய்க்குக் குறைந்த வருமானம் பெறுபவர் கிடையார்; நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு அதிகமாகவே எழுத்து வாசனை உண்டு. அதனால் அங்குள்ள ஐரோப்பிய பாஷைகளில் காணப்படும் நூல்கள் அளவிறந்தன. அவை மிக உயர்ந்த தன்மை உடையனவும் ஆகும். உண்மையில் அவை தேடற்கரிய கேடறியா விழுச்செல்வமே என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய கல்வி அறிவுப் பெருக்கம் அங்கே காணப்படுவதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய ஆள்வினையே காரணம். திரைகடலோடியும் திரவியம் தேடுவதில் சலிப்படைவதிலர். ஆங்கிலேயரைப் பற்றி பினேக் என்னும் கவி கூறியதுபோல,

"ஆகாரம் தேடி ஆகாயம் முழுவதும் அலையும் கழுகுபோல் அவர்கள்
ஐஸ்வரியம் தேடி அவனி முழுவதும் திரிவர்."

உலகிலுள்ள பொருள் எல்லாம் தங்களுடையதே என்பது அவர்கள் நம்பிக்கை.

"எங்கே கண்டாலும் சரி என்னுடையதை எடுத்துக்
கொள்வேன்"

என்று மார்மெண்டல் துரை கூறும் மொழிகள் ஐரோப்பியர் செல்வம் தேடும் முறையைத் தெள்ளிதில் விளக்கும்.

தரணியில் கண்டதெல்லாம் தங்களுடையது என்னும் கொள்கை செல்வ விஷயத்தில் தவறானதே. ஆனால் அக்கொள்கை அறிவு விஷயத்தில் தவறாகாது. செல்வம் தனிப்பட்டவர்க்குச் சொந்தமாயிருக்கும்; ஆனால் கல்வி எல்லோர்க்கும் பொது உடைமையாகும். உலகில் ஒரு நூல் உண்டாக்கப்படுமானால் அது யாருக்குச் சொந்தம் என்று ஒரு எல்லைக்குட் படுத்திவிட இயலாது. அதை அறியக் கூடியவர் அனைவர்க்கும் அது சொந்தமே யாகும்.

அதனால் அறிவு எங்கு இருப்பினும் அதை அடைய முயலுதல் கடன்.

---

உழுதுண்பானே பழுதில்லாதான்.

அயலார் அறிவு என்று அலட்சியம் செய்தலாகாது. இதுவே மேனாட்டார் கொள்கையும் கையாளும் முறையும். ஆங்கில நாட்டுப் போாசிரியர்களில் ஒருவராகிய பேக்கன் என்பவர்,

அறிவு அனைத்தையும் என் தேசமாகக் கொள்வேன்

என்று கூறியுள்ளதைக் கவனிக்க. அறிவு விஷயத்தில் உலக முழுவதும் ஒரே குலம்.

உண்மை ஒருவருக்கு மட்டுமே சொந்தமான பொருளன்று;
மனிதர் அனைவருக்கும் சொந்தமான மாண் பெரும் பொக்கிஷ
மாகும்

என்பது அமெரிக்க நாட்டு மகாத்மா எமர்ஸன் வாய்மொழி.

அதனாலேயே நாம் அவனியிலுள்ள சகல நாட்டு நூல்களையும் கையாளுதல் அவசியம்.

எனக்கு நண்பர் நூல்களே. அவர் எல்லா நாடுகளிலும் உண்டு

என்று இத்தாலிய நாட்டு முக்கிய கவிகளில் ஒருவராகிய பெட்ரார்க் என்பவர் கூறுகின்றார்.

இவ்வாறு மேனாட்டார் எங்கும் சென்று கல்விச் செல்வத்தைக் கைகொண்ட மட்டும் கொண்டுவந்து தமது நூல்களில் நிரப்பிவைத்து வருவதாலேயே மேட்டில் விழுச் செல்வம் அங்கே அதிகமாகக் காணப்படுகின்றது. அவ்வாறு நாமும் செய்தால் என்ன? நம்மவர் தம்முடைய நூல்களே தரணியில் தலை சிறந்தவை என்று வீண் தர்க்கம் செய்வதிலேயே கருத்து வைத்து நிற்கின்றனர். அவர்கள்

எல்லாப் பொருளு மிதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால்

என்று தங்கள் நூல்களைப் பற்றிக் கூறித் தமக்குத் தாமே மகிழ்ந்து கொள்வர். அவ்வளவே. ஆனால் உண்மையான புகழ் எனில் அது பிற நாட்டாரிடமிருந்தன்றோ வரவேண்டும்?

நாம் செய்யவேண்டியது என்ன? சலிப்பின்றித் தேனீ சகல இடங்களுக்கும் சென்று மலர்களில் மதுவெடுத்துத் தேன் திரட்டுவதுபோல் நாம் இடைவிடாது சகல மொழிகளிலும் காணப்படும் நூல்களை யெல்லாம் ஆராய்ந்து அதன் கண் மிளிரும் அரும் பெறல் மணிகளை எல்லாம் அடைந்து கொள்ளல் வேண்டும்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமை யில்லை

என்று பாரதியார் விரும்புவதே நாமும் விரும்பத்தக்கதாகும்.

---

பயிர்த் தொழிலுலகில் உயிர்த் தொழிலாகும்.



ஆகையால் நான் மேனாட்டுச் சோலைகளில் புகுந்து சில மலர்களும் கனிகளும், மலைகளில் ஏறி மருந்து வகைகளும் வாசனைத் திரவியங்களும், கழனிகளில் சென்று தானியமும் தவசமும் சேர்த்துத் தமிழ் மக்களுக்குத் தர விரும்புகிறேன்.

ஆனால் நான் ஏதேனும் சில மேனாட்டு அறிஞரின் நூல்களை மொழிபெயர்க்கப் புறப்படவில்லை. நான் மொழிபெயர்த்து இங்கே தர விரும்புவதெல்லாம் மேனாட்டு விழுச் செல்வப் பொக்கிஷத்தில் பொலிந்து விளங்கும் சில கண் கவர் பொறுக்கு மணிகளையே. மேனாட்டுப் பெரியோர்களுடைய விழுமிய உபதேச உரைகளை மட்டுமே தமிழில் தருவேன். அவ்வற வுரைகள் ஆங்கில ராஜதந்திரிகளில் சிறந்தவரும் அரும் புலவருமான மார்லி துரை கூறியவாறு,

"ஆதவன் கதிர்கள் ஒருமுகப்படுத்தப் பட்டால் அதிக ஒளி தருவதுபோல் அறிவு ஒருமுகப்படுத்தப்பட்டு அதிக அழகும் ஆற்றலும் உடையனவாகும்"

அவைகள்

அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டிய தொப்ப

சில மொழிகளால் ஆக்கப்பட்டு பொருளாழம் உடையவாயிருக்கும். அதனால் ஐரோப்பியப் போாசிரியர்களில் ஒருவராகிய கதே என்பவர் கூறியபடி

"அவை தம் கூரிய கொடுக்கினால் நம் இதயத்தில் ஒட்டிக்கொள்ளும்."

ஒரு முறை படித்து அறிந்து உணர்ந்துவிட்டால் ஒரு நாளும் அவை நம்மை விட்டு அகலா. அத்தகைய ஆற்றல் உடையன அவை.

ஆயினும் அவற்றைப் படிக்கும் பொழுது எச்சரிக்கையாய் இருத்தல் அவசியம். நான் மொழி பெயர்த்துத் தருபவைகளில் சில நமக்குச் சர்வ சாதாரணமாய்த் தெரிந்த உண்மைகளாகவே தோன்றும். ஆனாலும் அவற்றின் உரு புதியதாகையால் அவை புதிது என்றே கொள்ளத்தகும். தவிர நமக்குத் தெரிந்ததே யானாலும் அவ்வுண்மை பிறர் வாயினின்று எழும் பொழுது, எமர்ஸன் கூறுவதுபோல், புதியதோர் ஆற்றல் பெற்றே நம்மிடம் வந்து சேரும்.

சில உண்மைகள் மிக்க அழகுடையனவாயிருக்கும். எளிதில் அறிந்து கொள்ள இயலாது போகும். அவைகளை அறியவேண்டுமானால் நாமே அவற்றை மறுபடியும் கண்டு பிடிக்க முயலல் வேண்டும். இன்றேல் அறிவதற்குப் போதிய அனுபவமானது நம்மிடம் இருத்தல் வேண்டும் என்று ஸாண்டர்ஸ் கூறுவதைக் கவனிக்க.

சில உரைகளில் காணப்படும் உண்மை முழுவதும் உண்மையே என்று கொள்ளற்க. அதற்குப் பல நிபந்தனைகளும் வரம்புகளும் இருக்கும்.

நோய் வந்தபின் தீர்ப்பதிலும் நோய் வாராமல் தடுப்பதே சிறந்தது

என்பது ஒரு பழமொழி. அது கூறுவதில் உண்மை உண்டு. ஆனால் சில சமயங்களில் நோய் வாராமல் தடுக்க முயல்வதிலும் நோய் வரக் காத்திருந்து தீர்ப்பதே சுலபமாக இருக்குமல்லவா? ஆகையால் எதையும் உண்மை என்று ஏற்றுக் கொள்ளாமல் எச்சரிக்கையாயிருந்து ஆராய்ந்து அறிவதே கடன்.

---

மிடியைத் தீர்ப்பது குடித் தொழிலாகும்.

மொழி பெயர்ப்பைப் பற்றி ஒரு வார்த்தை. இரு பாஷைகளிலும் பாண்டித்தியம் உண்டு என்று உரைக்க முடியாது. ஆனாலும் தவறின்றிக் கருத்து முழுதும் தமிழில் வரும்படி முயன்றிருக்கின்றேன். தவிர இரு மொழிகளும் தம் அமைப்பில் மிக்க வேறுபாடு உடையன. ஆதலால் மேனாட்டுப் பெரியார் கருத்தை மட்டுமே கவனித்தேன்; அவர்கள் மொழி யழகையும் வன்மையையும் அப்படியே தமிழில் அமைக்க இயலவில்லை. என்றால் இயன்ற மட்டும் முயன்றுளேன் என்று மட்டுமே உறுதிகூற முடியும்.

ஆகையால் ஏதேனும் படித்தவுடன் பொருள் விளங்காவிடில் என் மொழிபெயர்ப்புத் தவறு என்று எண்ணிவிடவேண்டாம். வாசக நண்பர் படிக்கும் உரை வாசகர்க்குப் புதிய உண்மையைப் புகலக்கூடும், அல்லது அவர் கருத்துக்கு மாறுபட்ட உண்மையை உரைக்கலாம், அல்லது மிக ஆழமான கருத்தை உடையதாக இருக்கலாம். இக்காரணங்களால் எளிதில் பொருள் விளங்காதிருக்கக் கூடும். அதனால் நண்பர்கள் திரும்பத் திரும்ப வாசித்துப் பொருளை மனதில் ஆக்கிக்கொள்ள முயலுதல் கடன். அங்ஙனம் பன்முறை பயில்வார்க்கே நூல் நயம் அறியக் கிடைக்கும் என்று வள்ளுவர் கூறியுள்ளதை மறவற்க.

"மனிதன் எதை அறிகின்றானோ அதுவே அவனுக்குச்
சொந்தம்"—கதே.

---

பொம்மன்:—"நான் நாளை ஞாயிற்றுக்கிழமை நாடகத்தில் அரிச்சந்திரன் வேஷம் போடப்போகிறேன்."

திம்மன்:—"அப்படியா முன்னாடியே சொல்லிவிட்டது நல்லதாகி விட்டது."

பொம்மன்:—"ஏன்?"

திம்மன்:—"சொல்லாதிருந்தால் காசுக்குக் கேடு—உறக்கத்துக்குக் கேடு இரண்டும் நேர்ந்திருக்கும்."

## உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.

---

பெருமைப் பூணும் அருமைக் கதரே.

# அஞ்சுவது அறம்

P. S. வேணுகோபால்சாமி நாயுடு.

"அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா."

வீடுபெற விரும்புவோனுக்கு அவாவானது இடையூறாக நிற்கும். அறமாவது அவாவிற்கு அஞ்சுதல் என்றார் வள்ளுவர்.

பொய்யா மொழியார் பொருட்பாலில் பலவிடத்தும் அஞ்ச வேண்டிய இடம், அஞ்சவேண்டிய மக்கள், அஞ்சவேண்டிய விஷயங்கள், இன்னின்ன, இன்னார், இன்னவையென்று பலவாறு கூறிச் செல்கின்றார். உதாரணமாக, அஞ்சுவது அஞ்சாமை பேதைமை யென்றும், அஞ்சுவதற்கு அஞ்சுதல் அறிவுடையார் தொழில் என்றும் கூறுகின்றார். எனவே, அஞ்சுதல்-பயப்படுதல் என்றுள்ள குணம், இல்வாழ்வோர்க்கும் துறவோர்க்கும் பொதுவானதே யன்றிச் சிறப்பாகத் துறவோர்க்கே உரித்தானதன்று என்பது பெற்றாம். என் இருவர்க்கும் பொதுவான குணமாகக் கொண்டாரெனில் முற்றத்துறந்த முனிவோராயினும் மண்ணாசை பெண்ணாசை விண்ணாசை ஆகிய மூவாசைகளையும் மறந்தாலும், துறந்தாலும், அவர்களையும் வஞ்சித்து ஆசை உள் நுழைந்து வீடுபெறும் பேற்றைக் குலைத்துவிடும்.

அன்பும் அறனுமே அணிகலனாகக் கொண்டு, இயல்பினான் இல்வாழ்க்கை நடத்துவதே முறையாயினும், "பணமெனுந் தாயைக் கணத்திலே பற்று" "இல்லானை யில்லாளும் வேண்டாள்" "பொருளிலோர்க் கிவ்வுல கில்லை" "பணம் பாதாளம் வரையிலும் பாயும்" என்றபடி பணத்தின் இன்றியமையாமையைக் கருதி பொருள் தேடும்பொழுது, பழி—பாவங்கட்கு அஞ்சவேண்டும் எனும் அறத்தை அறவே மறந்து பேராசையின் வயப்பட்டு எப்படியாவது பணக்காரனானால் போதும் என்றே பொருளீட்ட முயல்வான்.

ஆகவே, அஞ்சுவது அறம், அஞ்சாமை பாவம் என்ற உண்மையை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். இல்லறத்தில் வாழ்வோனுக்கும், துறவறத்தில் வாழ்வோனுக்கும் இவ்வுண்மை உணர்ச்சி இன்றியமையாததாகும். வஸிஷ்டர் போன்ற ரிஷிகளும், கலைக்கோட்டு முனிபோன்ற முனிபுங்கவர்களும், அவாவிற் கஞ்சாதிருந்தமையாலன்றோ அவாவானது அவர்களை வஞ்சித்தது? அவா வஸிஷ்டரைப் பஞ்சாங்கப் புரோகிதனாக்கிவிட்டதே! தசரதன் முதலிய சக்ரவர்த்திகள் அரண்மனையில், நன்னாள் பார்ப்பதும், முகூர்த்தம் நிச்சயிப்பதும் சக்களத்தி (சககளஸ்திரங்கள்) கட்குப் பஞ்சாயத்து செய்வதும், சாந்தி முகூர்த்தத்திற்குச் சமயம் பார்ப்பதும் போன்ற தொழில்களை,

---

தன்னுழைப் புண்ண மண்செழித் தோங்கும்.

அவாவானது வசிஷ்டனை வஞ்சிக்காது இருக்குமேல் செய்யத்தூண்டுமோ? ஒருகாலும் தூண்டாது. முற்றத்துறந்த முனிக்கு, அவாவின்றேல் அரசாது திருமாளிகையில் என்ன வேலை? அவாவின் வஞ்சனையால், மோசம்போய்க் கணிகையரின்—கயமையே குணமாகக்கொண்ட கண்ணாட்டியரின் கட்டழகில் கலைக்கோட்டு மாமுனி மூழ்கினானன்றோ? காரணம் என்ன? பயமற்றிருந்தார் எதற்கு? பேராசைக்கு! அஞ்சாதிருந்தார் எதற்கு? அவாவிற்கு!

மன்னுயிரோம்பவும் மன்னவனாயினும், தன்னிலோம்பும் இல்வாழ்வோனாயினும், சிற்றின மஞ்சவேண்டும், இளிவரவிற்கு அஞ்சவேண்டும், பிறப்பு நிலைக்கு அஞ்சவேண்டும், கொலைக்கு அஞ்சவேண்டும், தீவினைக்கு அஞ்ச வேண்டும், தீயினும் தீயான தீயவற்றிற்கு அஞ்சவேண்டும், பொருள் சேர்க்குங்கால் பழி பாவத்திற்குப் பயப்பட வேண்டும், நீதி நடுநிலை தவறுதலில் அஞ்சவேண்டும். இவை முதலிய துறைகளில், அஞ்சாதிருப்பரேல், அறம் குலைந்துவிடும். மறம் மலிந்துவிடும். சுயநலம் வந்து வாழ்க்கையில் நுழையுமேல் ராஜாவாயினும் பிரஜையாயினும் பாவக் குழியில் வீழ்ந்தே விடுவான். அதற்காகத்தான் அஞ்சவேண்டுவதற்கு அஞ்சவேண்டும் என்று அறமோதினார் அறவோர். மக்களிடத்தில் அச்சம், பயம் என்பன இருக்குமேல் அடாது செய்து படாதன படார். தாம், தாம் எடுத்துக்கொண்ட காரியத்தை முடிக்கவேண்டும் என்ற ஊக்க மிகுதியால், நுனிக்கொம்பேறினவன், வீழ்வோம் என்ற அச்சமின்றி மீண்டும் உயரப்போய்த் தன்னுயிரையே முடித்துக் கொள்கின்றான். அச்சம் என்பது தோன்றியிருந்தால் எண்ணிய வினையை முடிக்காது உயிரை முடித்துக்கொள்ள முந்தியிருப்பானோ?

ஆண்டவனிடம், ஒருநாள் போய் விடை சொல்ல வேண்டுமே யென்ற கவலை—பயம்—அச்சம், மக்கட்கிருந்து வருமேல், கொலைக் கருவிகளும் விஷக் காற்றும் உலகில் பெருகுமோ? பெருகாவன்றோ? பழிக்கஞ்சாது பொருளீட்டி வருங்கூட்டம் வட இந்தியாவில் தோன்றியுளதாமே! பகலில் ஆயுதங்களோடு வந்து கொள்ளையிடுகின்றனராமே! அக் கொள்ளையும் அறத்திற்கே யன்றித் தம்பொருட்டல்ல வென்கிறார்களாமே! அறத்திற்கும், மறத்திற்கும் அன்பே துணையென்றார் ஆன்றோர். இக் கொள்ளைக் கூட்டத்தவரோ அவ்வான்றோர் கூற்றையும் மறந்து—கொள்ளை அறத்திற்கே துணையாகு மன்றி மறத்திற்கல்ல என்று கூற முன்வந்துவிட்டார். அச்சம் என்னும் அருமையான குணம் குடிகொண்டிருக்குமேல் கொள்ளையே அறம் என அறங்கூற வருவரோ? வாரார் அன்றோ பழிக்கஞ்சாது—பாவத்திற்குப் பயப்படாது பொருள் தேடித் தருமம் செய்தால் அத்தருமம், செய்தவரைத் தவிர்த்துப் பொருளுடையோரையே சேரும். தர்மம் செய்தவனுக்கோ பாவம்தான் வரும். கொள்ளிக்கட்டையை எடுத்துத் தலைசொரிந்து கொண்டதுபோல், கொள்ளை வழியில்—மோசமான வழியில் பிறரை ஏமாற்றி, வஞ்சித்துப் பொருள் தேடித் தர்மம் செய்தால் செய்தவனுக்கு வருவதென்ன? பாவம்! நரகம்!

அந்தோ! எத்தனைபேர் பயமில்லாது வாழ்வதால் வாழ்க்கையையே கெடுத்துக் கொள்கின்றார்கள்! காலை முதல், மாலைவரை வேலை செய்தவனுக்குப் படிநிறைய அளந்தியாத பாவிகள் எத்தனைபேர்! அச்சமென்ற குணமின்மையால், குறைப்படியால் கூலிகொடுக்கும் குடும்பஸ்தர்களெத்தனைபேர்!

---

குடியும் புகையும் உடல் நலங்கெடுக்கும்.



தன், ஆடுகளையும் மாடுகளையும், கொழுக்க மேய்த்துக் கொடுப்பவனைக் குடல் சிறுகக் கூழூற்றிக் குலைத்துவரும் குபேரர்களெத்தனைபேர்! பாடுபடாமற் பணக்காரராவதற்காகப், பாடுபட்டோரை ஏமாற்றப் படிகளைச் சுருக்கியும், பெருக்கியும் பழிபொருள் தேடிய பணக்காரர்களெத்தனைபேர்! வருத்தமில்லாமல் பணக்காரராவதற்காக நிறுத்தும் அளவுகளைச் சுருக்கியும், பெருக்கியும் வாழ்ந்த வணிகர்களெத்தனைபேர்? அந்தோ நிராசையர் வாழ்ந்த காலத்திலேற்பட்ட தராசு பேராசையர் வாழும் இக்காலத்தில் தராசாக மாறிற்றே! ஒரு பொய் பேசியதற்காக, அதுவும் தன்னை அறியாமல் கூறியதற்காகத் தருமராஜன், நரகலோகத்திற்கு விசிடராய்ச் சென்றார் என்றால் இக்கலியுகத்தில், பயமே இன்றி வாழும் இம்மக்கள் கூட்டத்தில், நரகலோக விசிடர்கள் எத்தனைபேருளரோ? இத்தனை விசிடர்களையும் பதிய எத்தனை பெரிய விசிடிங் பதிவு புத்தகம் தேவையோ நாமறியோம்!

இக்காலத்தில் தைரியம் என்பதற்கும், தர்மம் என்பதற்கும், என்ன பொருளோ ஆண்டவனே அறிவான். நடமாடும் தெய்வங்களாகிய ஏழை மனிதரை வாட்டி வதக்கிப் பொருளீட்டிப் படமாடும் தெய்வங்களாகிய கல்லாலும் செம்பாலும் செய்திருக்கும் சாமிக்குப் பஞ்சாமிர்த அபிஷேகஞ் செய்வதும், விஷயம் அறியாதவனிடம், ஒரு தம்பிடிப் பொருளைப் பத்து தம்பிடிக்கு விற்று, அவனுடைய அறியாமையையே கருவியாகக் கொண்டு பணக்காரனாகி விடுவதும், பணப் பெருக்கத்தால், மக்கட்குத் தேவையான பொருள்களை யெல்லாம், சிலர் சேர்த்து வைத்துக்கொண்டு மக்கட்குத் தேவையை அதிகரிக்கச் செய்து, அவர்கட்குத் தேவையான சமயம் பார்த்து ஒரு ரூபாய் பொருளுக்குப் பத்துரூபாய் வாங்கிப் பணக்காரராவதும், பயமென்பது வாழ்க்கையில் தோன்றியிருக்குமேல், இந்த பாவகுணங்கள் மக்களிடையில் தோன்றுமா? தோன்றாவன்றோ? ஆதலால், மனிதனானவன் முதலில் அறியவேண்டியது அஞ்சுவது—அறம், அஞ்சாமை—பாவம் என்பதேயாகும். குழந்தையாய்ப் பிறக்கும் பொழுது அறிவு மழுங்கி அறியாமை நிரம்பியிருக்கும். அக் குழந்தைக்கு முதல் முதல் அறிவூட்டும் ஆசான் யாவன்? அஞ்சுதல் எனும் ஆசானே! முதல் முதல் குழந்தை தன் அறியாமையால், தவழ்ந்து துள்ளித் துள்ளி எங்கு வேண்டுமானாலும் வீழத் துணிகின்றது. விளக்கோடு விளையாடவும் விழைகின்றது.

குறு குறு நடந்து பழகுகின்றது. இடறி வீழ்கின்றது. இச்சமயங்களிலெல்லாம், ஆசானாக இருந்து உதவியது எது? அச்சம்தான். வீழ்ந்து அடிபட்டால் நோய் பொறாது அழுது, இனி வீழ்ந்தால் நோயுறுவோம் என்று நோய்க்கஞ்சி வீழாமலிருக்கும். ஒரு தடவை விளக்கின் சூடு பெற்றால் மற்ற ஒருதடவை சூட்டுக்கஞ்சி விளக்கை அணுகா தொழியும். இவ்வாறே வாழ்நாளில் ஆரம்ப அறியாமையைப் போக்கும் ஆசான் அச்சம். மாணாக்கனாயிருக்குங்கால்—குரு அறியாமையைப் போக்குகின்றார். இல்வாழ்வில்—உலகம். எப்பேர்ப்பட்டவனையும் உலகம் திருத்திவிடும். உலகத்தோடு ஒட்ட ஒழுகலைக் கல்லாதான் உலகில் இருக்க இயலாது. வழியில் ஒழுங்காக ஒருவர் மீதும் படாது நடந்து போகின்றவனைப் பயங்கொள்ளி என்று பழி கூறுவதா? பட்டே அறியும் முட்டாளர் போற் கெட்டே அறியும் கேடர் பெருகு

---

பணப்படுகுழியிற் குணத்தரும் வீழ்வர்.

வதற்குக் காரணம் அச்சமின்மையே யாகும். ரயில் வண்டி ஓடும்போது, இறங்குவது தைரியமென்றும், இறங்காதது பயமென்றும் சில பேதைகள் கூறுவர். இக் கூற்றைக் குணவான்கள் கொள்ளார். எனவே, அறமாகிய அச்சத்தையும், புண்ணியமாகிய பயத்தையும் பண்பாகக் கொண்டு வாழ்வாரே மண்ணுலகிலும் விண்ணுலகிலும் மாண்புற வாழ்பவராவார்.

ஒருவர், ஒரு இயக்கத்தில், ஒரு கிளர்ச்சியில் முனைந்து வேலை செய்யாம விருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். உதாரணமாகக் காந்தியடிகள் இயக்கத்தில் பேரவாக் கொண்டிருக்கும் ஒருவன், துணிச்சல் குறைச்சல் காரணம் பற்றிச் சிறை செல்லாமலிருக்கலாம். துணிவுக்கு அடிப்படையான வயது இளம் வயதேயாகும். அதனால்தான்—மாணவர் வாலிபர் பலரும் முன்வருகின்றனர். அறிவும் அநுபவமும் பெற்றவர்களைவிட பெருதவர்கட்கு விரைவில் ஒரு கிளர்ச்சியில் பற்றுள்ளம்—துணிச்சல் ஏற்படும். நகரவாசிகளை விடக் கிராமவாசிகள் நம்பிக்கையோடும், ஊக்கத்தோடும், துணிவோடும் ஒரு கிளர்ச்சியில் முனைந்து வேலை செய்ய முற்படுவார்கள். எனவே மகாத்மாவின் தேசீய இயக்கத்தில் பற்றுக்கொண்ட பலர் சிறை செல்லாமலிருக்கலாம். உதாரணமாக நோய்வாய்ப்பட்டா னொருவன், உள்ளத்தில் பல எண்ணங்கள் உதிக்கலாம். பல தேயங்கட்கு யாத்திரைசெய்ய விரும்பலாம், பல புத்தகங்கள் படிக்க விரும்பலாம், பல பதார்த்தங்கள் சாப்பிட விரும்பலாம். இவ்வாறான பல உணர்ச்சிகள் உள்ளத்தி லெழும்பியும் ஒன்றும் செய்ய இயலாதவனாய் இருக்கின்றான். ஏன்? சத்தியில்லை—பலமில்லை. இன்னொரு உதாரணம் ஒரு பட்சியை எடுத்துக் கொள்வோம்.

கிளி—புறா முதலிய பட்சிகள் வீட்டில், ஒரு சிறு கூண்டில் வளர்கின்றன. பட்சி கூண்டில் இருப்பது சிறை வாசத்திலுங் கொடிது எனலாம். பட்சியின் சிறகுகளை வெட்டிவிடுவார்கள். சிறகு வளரவிட்டால், பட்சி பறந்துபோய்விடும் என்று காரணங் கூறுவார்கள். கூண்டில் உறையும் பறவைக்குத் தன் இஷ்டம்போல் உண்ணவோ, உறங்கவோ இயலுமா? சந்தோஷம் வந்தபோது சிறகுகளை அடித்துக் கூவிக் குலாவ முடியுமா? ஆக இத்துணை இன்னல்களையும் அநுபவித்துக்கொண்டு இருக்கும் பக்ஷிகளைக் கூண்டினின்றும் வெளியிற் றிறந்துவிட்டால், கூண்டிலிருந்த பட்சி வெளிவந்ததும், தன் இயற்கையாகிய இடம்—உரிமையாகிய இடம்—இனங்கள் வாழும் இடமாகிய வனாந்தரம் செல்ல வாஞ்சை கொள்கின்றதா? வானளாவ, வளம் பெருகிய சோலையில், தன் இஷ்டம்போற் சிறகுகளை வீசிப்பறக்கலாம்! தன்னினத்தோடு பாடலாம்! ஆடலாம்! கூடலாம்! குஞ்சுகளைப் பெறலாம்! குஞ்சுகளோடு கொஞ்சலாம்! கூடுகட்டிக் குஞ்சுகளை வளர்க்கலாம்! வளம்பெற வாழலாம்! வானுற உயர்ந்து பறக்கலாம்! பறக்கையிலேயே மல, ஜலம் கழிக்கலாம். அம் மல, ஜலம், மண்ணுறையும் மக்கள் மண்டையிலோ, வாயிலோ, உடம்பிலோ வீழலாம். காட்டில் சுதந்தரமாய் வாழும் பட்சிகளை மானிடர் தங்கள் பலத்தினால் பிடித்துச் சிறையாம் கூட்டிலடைத்துச் செய்யும் கொடுமைக்குத் தண்டனையாகப் பட்சிகள், மக்கள் மீது மல ஜலம் கழித்துச் சிட்சிக்கின்றன போலும்! பஞ்சாப் படுகொலை நடந்த காலத்தில், ஆகாயக் கப்பல்கள் குடிகள்மீது வெடிகுண்டு போட்ட கதை பலருக்கும் ஞாபகமிருக்கலாம்.

கொலையே முயல்வோர் கொலையால் மாய்வர்.



வெள்ளைக்காரரது வெடிகுண்டினும், இப் புள்ளினத்தின் மல, ஜலம், மக்கள் உள்ளத்தை வெம்மைப்படுத்தும். இத்துணைச் சுதந்தரமும், ஏகபோகமான இன்பமும், வானத்திலும் கானகத்திலுமிருப்பதை உணர்ந்திருந்தும், கூண்டிலிருந்த பட்சி வெளிவந்ததும் கானகம் நாடிப் பறக்கின்றதா? மீண்டும் கூண்டிலேறிக் குந்துகின்றதா? விடுதலையாகிய வானத்தையும், கானகத்தையும் விரும்பாது, சிறையாகிய கூண்டிலேயே குந்த முந்துகின்றது. காரணம் என்ன? பயமா? அச்சமா? பயமும் அன்று! அச்சமுமன்று! பின்னர் என்ன? பழக்கம் காரணம். அடிமை உணர்ச்சியில் பழகிவிட்ட காரணம் பற்றி மீண்டும் கூண்டிலேயே வாழ விரும்பியது பட்சி. மகாத்மாவும், பல தடவைகளில் சொல்லியுளார்—தேசமக்கட்கு பிரிட்டிஷ் ஆட்சியானது அடிமை உணர்ச்சியை உண்டாக்கி விட்டதென்றும், கல்வியும் அடிமை உணர்ச்சியையே உண்டாக்கி விட்டதென்றும் இன்னம் இம்மாதிரியாகப் பல உதாரணங்கள் காட்டியிருக்கின்றார். நல்ல மக்களும், தீய இனத்தாரால் கெடுவதுபோலும், நிலத்து இயல்புபோல் நீர்சுவை பெறுவதுபோலும், பிரிட்டிஷ் இனத்தாரின் சகவாசத்தால் இந்தியர்கள்—சுதந்தரமே பிறப்புரிமையாகக் கொண்டிருந்த இந்தியர்கள், இதுகாலை, அச்சமே ஆசாரமாகக் கொண்டு கீழ்மக்கள்—அடிமைகள் ஆய்விட்டார்கள் என்று பலகாலும் கூறியுள்ளார். இவ்வாறாகப் பட்சியினங்களும், மனித இனத்தில் பழகிய சகவாச தோஷத்தால் சுதந்தரம் என்பது இன்னதென்றே உணராது மறந்து, பழகிய பழக்கத்திற்கே அடிமையாகித் தன்னை அமிழ்த்தியிருக்கும் பழக்கமாகிய அடிமைப் பாறாங்கல்லை அகற்றும் ஆசானைப்பெறத் தவம்பூண்டு பட்சிகள் கூண்டில் உறைகின்றனவே யன்றிக் கானகம் செல்ல அஞ்சி உறைவனவல்ல. ஆதலால், கானகம் செல்லாது கூண்டிலுறையும் பட்சிபோன்று, சிறை செல்லாது வீட்டிலுறையும் மக்கள் பலர் இருப்பர். இவ்வாறாக இருப்பவர், சிறைசெல்ல அஞ்சி இருப்பர் என்று அறையலாமோ? அற்றன்று. பழகிய பழக்கத்தால், சார்ந்த இனத்தால், விடுதலை உணர்ச்சி வீறிட்டெழாது அடங்கியுளது. பாழும் பழக்கமாகிய அடிமையைத் தட்டியெழுப்பும் ஆசானும், சார்ந்ததன் வண்ணமாகிய இனத்தை இடிக்கும் துணைவரும் தோன்றுவரேல் புத்துணர்ச்சி பெற்றுச் சுதந்தர உணர்ச்சி வீறிட்டெழ விடுதலைப்போரில் முனைவர். "சகவாசயா தோஷ குணம் பவந்து" என்பது தவிர வேறு வகை யறியோம்.

மகாத்மாவது போர்க்களத்திற்குக் களப்பலி போன்ற காளைகளா இவர்கள்? பண்டு பாரதப்போரில் முதுகனப்பலி கொடுத்து விளங்கிய வீமன் மக்களா இவர்கள்? இவர்களிலரேல் போர்முனை பொன்றியாவிடும்? ஆதலால் இவர்களைப்பற்றிக் கவலையில்லை.

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

ஒன்றிய உறுதி வென்றிடும் பகையை.

# "தயரதன் தண்ணளி"

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பி. ஏ.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்"

என்பது வள்ளுவர் இன்குறள். தன் குடைக்கீழ் வாழும் குடிகளின் குறைகளை அறிந்து, அவரவர்க்கு ஏற்ற முறைகளில் நீதி செலுத்தியும் அறத்தை நிறுவியும், குடிகளைக் காக்கின்ற அரசனே மக்களால் இறைவனாக எண்ணப் படுவான் என்பதே பண்டைத் தமிழக மக்களின் அரசனது இலக்கணமாக இலங்கக் காண்கின்றோம். கவியரசர் கம்பரது காவியத்தில் காணும் தயரத மன்னன் இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்தவன் என்பதும், அவன் குடிகளிடத்தில் தண்ணளி மிகுந்தவனாய் வாழ்ந்து வந்தனன் என்பதும் யாவரும் மறுக்கமுடியாத உண்மை. தண்ணளி மிகுந்தவன் தயரதன் என்று யான் கூறுவேனேயானால் அது ஒரு சிறிதும் மிகையாகாது.

"முன்னுலகளித்து முறைநின்ற உயிரெல்லாம்
தன்னுயிர் எனக்கருதும் தன்மையவன்"

என்று, முற்றுந் துறந்த முனிவனான கோசிகன் தயரதனது செந்தண்மை பூண்டொழுகும் உள்ளத்தைப் புகழ்ந்து கூறும் உரை சாலவும் அழகிதாக அமைந்துள்ளது.

"தாயொக்கு மன்பில் தவமொக்கும் நலம் பயப்பின்
சேயொக்கு முன்னின்று ஒரு செல்கதியுய்க்கு நீரால்
நோயொக்கு மென்னில் மருந்தொக்கும் நுணங்குகேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்"

என்று கவியரசர் கம்பர் தயரதனது தன்மையை அழகாக எடுத்துரைக்கின்றார். தன்னரசில் வாழும் குடிகளிடத்து தாயன்பு பூண்டொழுகிய கொற்றவனாய் இலங்கிய பெருமை தயரதற்கே உரியதாகும்.

"தன்னனைய நிறைகுணத்து தயரத" மன்னன் தண்ணளி மிகுந்தவனாய் மட்டும் அமையாமல் வெற்றித் தனியரசாயும் விளங்கினான் என்பது வெள்ளிடைமலை. அயோத்தி மன்னனது தலைவாயிலில் முடிபுனைந்த மன்னர் பலர் குறையிரந்து நின்ற காட்சியைச் சித்திரிக்க விரும்பிய கம்பர்,

அடியிணை தொழும்இட மின்றி மன்னர்தம்
முடியொடு முடி பொருவாயில்"

என்றும் நலஞ் சான்ற மொழிகளில் அழகாக எடுத்துரைக்கின்றார். இன்னும் இவன் தன்னை அண்டினோரை ஆதரித்து அவர்தம் இடர்தீர்க்கும் பான்மை

உரிமைக்கிளர்ச்சிக் குரிமையே மருந்து.



யைக் கவியரசர் எடுத்துக் கூறும் நயம் கற்றோர் உளத்திற்குக் களிபேருவகை தருவதாகும். "மன்னுயிர் அடங்கலும் உலகும் வேறமைத்து தேவரோடிடங்கொள் நான்முகனையும் படைப்பேன் ஈண்டெனத் தொடங்கிய துணியுறு முனிவனா"ன கோசிகனும் தயரதன் முன்னேவந்து குறையிரந்து நின்ற பான்மையை உற்று நோக்கினால், தயரதனது வலியும், நெறிதவறா நீர்மையும் பெரிதும் விளங்குவதாகும்.

"என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூறொன் றுடையரானால்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும், பதுமபீடத்
தன்னகரும், கற்பக நாட்டணி நகரும்
மணிமாட அயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ?
இகல்கடந்த புலவுவேலோய்!"

என்று முனிவன் தனக்கும் தன்னையொத்த முனிவர்களுக்கும் இடையூறுற்ற காலத்தில் தங்கள் இடர்களைய விரும்பி அணுகும் இடங்களில் தயரதன் வாழும் அயோத்தி நகரும் ஒன்றெனக் கூறும் செம்மை சான்ற சொற்கள் சாலவும் அழகிதாக அமைந்துள்ளது. முனிவன் தயரதன் தங்கிய அயோத்தி நகரை, கைலை மலைக்கும், பாற்கடலுக்கும், பதும பீடத்திற்கும், கற்பக நாட்டிற்கும் உவமை கூறியது மிகவும் பொருத்தமுடையதேயாகும். இன்னும் முனிவன், "புரந்தரன் இன்று ஆள்கின்ற அரசு, நீ சம்பரனைக்கொன்று அன்று அளித்த அரசன்றி வேறாகுமா?" என்று தயரதனிடம் கூறும் சொற்கள் தயரதனது வலியையும் அவனது தண்ணளியையும் பெரிதும் விளக்குவதாகும்.

"இன்றளிர்க் கற்பக நறுந்தேனிடைதுளிக்கு
நிழலிருக்கையிழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடைக்கீழிதினொதுங்கிக்
குறையிரந்து நிற்பநோக்கிக்
குன்றளிக்கும் குலமணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீ கொண்டு
அன்றளித்த அரசன்றோ புரந்தரன்
இன்று ஆள்கின்ற தரசவென்றான்"

என்று கவிகூறும் நயம் கம்பருடையதேயாகும். இன்னும் இம் முனிவன் மிதிலைமாநகரில் ஜனகனது பேரவையில் மன்னர் மன்னவன் காதலர்களின் குலமுறை கிளத்தும்போதும், தயரதன், தன் குடிகள் துன்பம் ஒரு சிறிதும் அடையாது வாழ்வதே தன் முதற் கடனெனக் குறித்த கோமகன் என்றும், நெறிதவறா நீர்மையுடையவன் என்றும் போற்றியுரைக்கும் நலம் நயஞ் சான்றதாகும்.

பொய்யாதொழுகின் நொய்யாதரசு.

"துனியின்றி உயிர் செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனி வென்றபடி யென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான்"

என்று கவியரசர் கவியாற்றுகின்றார்.

தயரதன் தன் மக்கள்பால் மாறாத காதலுடையான் என்பதை மறுப்பவர் ஒருவருமிலர். தயரதன் மகவில்லாக் குறையால் வருந்திய காலையில் வெய்ய கானகத்திடையே வேட்டைக்காகச் சென்று அங்கு, இரண்டு கண்களு மிழந்திருந்த ஒரு முனிவனது மகனை அறியாது அம்பெய்து வீழ்த்தி பின்னர் தனது அடாத செயலை அம் முனிவனிடம் எடுத்துரைத்து குறையிரந்து நிற்கவும், மைந்தனைப் பிரிந்த முனிவன், தாங்கலாற்றாத துயருற்று அவ்விடத்தே உயிர்நீத்து நிற்கும் நிலையில் அமைந்தகாலையில் மைந்தனைப் பிரிந்து தானுறு துயரம், தயரதனும் தன் மைந்தனைப் பிரிந்து அடைக என்று சாபமிட்டனன் என்பர் கவியரசர். இச்சாபத்தை ஏற்ற மன்னவன், இதற்காக சிந்தை தளர்வுற்றயர்தல் ஒரு சிறிதும் இலனாகி மைந்தனில்லாத தனக்தும் முனிவனது சாபத்தால் மைந்தனுளன் என்பதறிந்து அந்த மகிழ்வோடே தன் நகரை நண்ணினான் என்று கூறும் கம்பர் கவிநலத்தை யாரே கணிக்கவல்லார்.

மகவிலாக் குறையால் வாடிய மன்னனின் வாட்டந்தீர முனிவர்தம் அருளால் மக்கட்பேறும் உண்டாயது. இராமனாதிய வீரர் நால்வரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வாழ்ந்துவரும் நாளில், கோசிக முனிவன் வந்து, தயரதனிடம், இராமனைத் தன் தவத்தைக் காக்க, தன்னுடன் கானகத்து அனுப்புமாறு வேண்டுகின்றனன். இம்மொழிகளைக் கேட்ட மன்னவன் உறுதுயரத்தை சித்திரித்துக் காட்டும் கம்பரது பேராற்றல் புகழ்ந்து போற்றுதற் குரியதாய்த் திகழ்கின்றது.

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனல்நுழைந்தால்
எனச் செவியிற் புகுதலோடும்
உண்ணிலாவியதுயரம் பிடித்துந்த
ஆருயிர் நின்று ஊசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
கடுந்துயரம் காலவேலான்"

என்று தயரதன் கூறும் செய்யுளில் தயரதன் உறுதுயரமும், அவன் அப்போதிருந்த நிலைமைக்கு, கண்ணிலான் பெற்றிழந்த தன்மையை உவமை கூறிய கம்பர் கவிநலமும் கற்றோர் உளத்திற்கு நனிபேருவகை தருவதாகும். தயரதன் தன் மக்களை தனது இரு கண்கள் போலவும் தனது உயிர்போலவும் போற்றி வந்தான் என்பதும் யாவரும் தெரிய அமைந்த ஒரு பொருளாகும்.

---

அநீதியரசினும் அரணியம் நன்று.



"மைந்தனலாது உயிர்வேறிலாத மன்னனா"ய் இலங்கிய தயரதனிடம், கேகயர் கோமகன், தான் முன்னர்ப்பெற்ற வரங்களை இறைஞ்சி நிற்கின்றாள். இவ்விரண்டு வரங்களில் ஒன்றினால் தன் சேயரசாளவும், மற்றொன்றினால் சீதை கேள்வன் போய் பதினான்காண்டுகள் வனமாளவும் வேண்டுகின்றாள். அவ்வுரை கேட்ட மன்னவன் எய்தும் சோக நிலையை சித்திரித்துக் காட்டும் ஆற்றல் படைத்தவர் கம்பர் ஒருவரேயாவர்.

"தண்ணே வேண்டுமென்னினும் ஈயக்கடவேன் என்
உண்ணேராவி வேண்டினும் இன்றே உனதன்றோ
பெண்ணே! வண்மைக் கேகயன்மானே! பெறுவாயேல்
மண்ணேகொள்நீ மற்றையதொன்றும் மற"

"நின்மகன் ஆள்வான் நீயினிதாள்வாய் நிலமெல்லாம்
உன்வயமாமே யாளுதி தந்தேன் உரைகுன்றேன்
என்மகன், என் கண், என்னுயிர், எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடிறவாமை நய"

என்று கேகயர் கோமகளிடம், இறைஞ்சிக் கேட்குஞ் சோகம் ததும்பிய சொற்களில், தண்ணளிமிகுந்த தயரதன் தன்னிருகண்களையும், தனது ஆவியையும் விட தன் மக்களை அதிலும் தன் காதற் றிருமகன் இராமனைப் பெரிதும் மதித்துள்ள தன்மை புலனாகும். "இழைக்கின்ற விதி முன் செல்லத் தருமம் பின்னிரங்கியேங்க" கானஞ்சென்ற நம்பியையும் தம்பியையும் கானகத்தே நீத்து "சுந்தரத் தடந்தோள் வெற்றிச் சுமந்திரன்" அரசன் அயரும் அமளியை அணுகுகின்றனன்.

"நாயகன் பின்னும் தன் தேர்ப்பாகனை நோக்கி, நம்பி
சேயனோ வணியனோ என்று உரைத்தலும் அனையான் செய்ய
வேயுயர் கானந்தானும், தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினர் என்றான் என்ற போழ்தத்தே யாவிபோனான்"

என்று கம்பர், தயரதன் ஆவி நீங்கியதை எடுத்துரைக்கும் நயம் கற்றோர் உளத்தை உருக்குவதாகும். அறத்தின் வழிநின்ற ஆரியர்கோனே தயரதனது ஆவியாய் இலங்கினான் என்பதும் அவன் பிரிவை யாற்றாது மன்னர் மன்னவன் உயிர்துறந்தனன் என்பதும் வெள்ளிடைமலை.

தண்ணளி மிகுந்த தயரதன்பால், அவனுடைக் குடிகளும் அன்பு பூண்டொழுகியவராய் அமைந்தது போற்றத்தக்கதொரு பொருளாகும். "மன்னுயிர்க்குறுவதும் செய்ய" எண்ணி, தன்னரசைத் தன் காதற் றிருமகன் இராமனிடம் ஒப்படைக்கக் கருத்துட்கொண்டு மதிவல்ல மந்திரிக் கிழவரோடு ஆராய, அறத்தின் வருகின்ற ஆரியர்கோனும் இராமன் மணிமுடி சூடுகின்றான் என்பதால் உவகையும் மன்னவன் பிரிந்து செல்கின்றான் என்பதால் விம்முறு நிலையும் எய்தி, "இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஆவெனவிருந்தார்" என்று மந்திரிக் கிழவர்தம் நிலையை எடுத்துக்காட்டும் கம்பர் கவிநலம் அழகுடையதேயாகும்.

---

வஞ்சகமன்னன் நெஞ்செலாம் புண்ணே.

இன்னும் "ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றும் பைய லென்றபோதே" பரிந்தெடுக்கும் தாயின் தன்மைவாய்ந்த தாதையாக அமைந்த தயரதன்

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்"

என்ற குறளுக்கு இலக்கியமாக அமைந்த தாதையாகவும் இலங்குகின்றான். பழிபடா மன்னனாய் வாழ்ந்த தயரதன் மந்திரிக் கிழவரோடு தனது அரசுரிமையை இராமனிடம் ஒப்புவிக்கும் விடயமாய் கலந்து ஆலோசிக்குமளவில் அவர்களும், திசைமுகன் திருமகனான வசிட்டரும், இராமனது குணநலங்களைப் போற்றியுரைக்கும் மாற்றங்கேட்ட அரசர் கோமகன் அம்

"மகனைப் பெற்றவன்றினும், பிஞ்சகன் பிடித்த அப்பெருவில்
இற்ற அன்றினும் எரிமழுவாளன் றன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோர் உவகையனாய்"

இலங்கினான் என்று கவிகூறுந்திறன் கம்பருடையதேயாகும்.

"தந்தைமகற் காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியமாய் அமைந்தவன் தயரதன் என்போம்.

"மகன்தந்தைக் காற்றுமுதவி இவன்தந்தை
யென்னோற்றான் கொல் எனுஞ்சொல்"

என்னும் தேவர் திருமொழிக்கு இலக்கியமாய் அமைந்தவன் இராமன் என்று சொல்வதில் பின்னிடார்.

"எந்தையேயேவ நீரே உரைசெய இயைவதுண்டேல்
உய்ந்தனன் அடியேன் என்னிற்பிறந்தவர் உளரோவாழி
வந்ததென் தவத்தினாய வருபயன் மற்றொன்றுண்டோ
தந்தையுந் தாயும் நீரே தலைநின்றேன் பணிமின்" என்று

"சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச்
சுதந்தரத்தடக்கை தானை மடக்குறத்துவண்டு"

நின்ற இராமனது திருமுகச் செவ்வியை நோக்குங்கள் அவனது "செப்பருங் குணப் பொலிவை"க் கண்டு மகிழ்வீர்கள்—தாதைக்கேற்ற தநயனாக அமைந்த பெருமை இராமனுக்கே உரியதாகும்.

இதுவரை கூறிய ஒன்றிரண்டு குறிப்புகளால் தண்ணளி யிருந்தவன் தயரதன் என்பதும் அவன் தன் மகன்பால் என்றும் மாறாத காதலுடையான் என்பதும் யாவரும் மறுக்கொணாத உண்மையென்று கூறி யென்பணி முடிக்கின்றேன்—திருவருள் முன்னிற்க. சுபம்.

---

கள்ளை ஒழித்தல் காவலன் கடமை.

## வேதாந்த சூடாமணி வசனம்

(பண்டிதர். பூ. ஸ்ரீநிவாசன்.)

### ஈசுவரத் தோற்றம்.

(விசாரியாதபோது மெய்போலத் தோன்றிப் பின் விசாரிக்குங் காலத்துத் தனக்கெனவோர் வடிவமு மின்றிக் கெடுமியல்பினையுடையதாகிய மாயையானது சுத்த சத்துவகுண வடிவமாயை மலின சத்துவகுண அவித்தை—தமோகுணப் பிரதான வடிவப் பிரகிருதி என்று மூன்று விருத்திகளை யுடையதாகும் என முன் சஞ்சிகையி னிறுதியிற் கூறப்பட்டது.)

அம் மூன்று விருத்திகளில் மாயையானது சுழுத்தி காலத்திலும் லய (மகாப்பிரளய) காலத்திலும் சத்ரூபப் பிரஹ்மத்தினிடத்தில் அத்தியாச (கற்பிதமாக) ஐக்யமாயிருக்கும். பின்பு, சாக்கிராவத்தையிலும் சிருஷ்டி காலத்திலும் அந்த பிரஹ்மத்தின் கண் சிறிது பேதமுடையதாகக் காணப்படும் ஓர் நிலையை யெய்தும்.

"மேயவதில் பிரமசை தன்னியம் விம்பித்திதுவே விளங்கு ஞானத்
தூயசைதன் னியவீசன் பதியிறை யென்றிட நிற்குந் துணிவுதன்னால்."

அவ்வாறு பேதநிலையை யடைந்ததாகத் தோன்றும் அம்மாயையில் அந்தப் பிரஹ்ம சைதன்னியம் (கண்ணாடியின்கண் முகம் பிரதிபிம்பிப்பது போல) பிரதிபிம்பிக்கும். அப்படி விளங்குகின்ற அப் பிரதிபிம்பசேதனம் பரிபூரண ஞானத்தையுடைய பரிசுத்தமாகிய சைதன்னிய வடிவ பரமேசுவரன், பதி—இறைவன்—என்றழைக்கப்படும். ஆகையால்,

ஈசுவரவுபாதி:—"அப்பாற் குபாதியாகி யமோக்காபணியாம் மாயை." அம்மாயையே ஈசுவரனுக்கு உபாதியாம். அது சுத்த சத்துவகுண வடிவினதாகிருத்தலின் அவ்வீசுவரனுக்கு மோகத்தை யுண்டாக்காமல் (மோகம்=மயக்கம், விபரீத புத்தி) அமோகத்தை யுண்டாக்குதற்குக் காரணமாவதாம். (மோகத்தை யுண்டாக்குதற்குக் காரணமாகா திருக்கும்.)

(உபாதி லட்சணம்:—எது தனது ஆசிரயத்தின் சொரூபத்திற் பிரவேசியாமல் அதனைப் பிறவற்றினின்றும் வேறு பிரித்தறிவிக்கின்றதோ அது

---

வீட்டுக்கு வேண்டிய ஆடைகளை ஒவ்வொரு குடும்பத் தலைவிகளும் செய்து கொடுக்கலாம்.

உபாதியாம் என்பது உபாதி லட்சணமாம். அது, குடம் தனது ஆசிரயமாகிய ஆகாசத்திற் பிரவேசியாமல் அவ்வாகாசத்தைப் பிற மகாகாச முதலியவற்றினின்றும், வேறு பிரித்தறிவித்தலால் (கடம்) உபாதியாதல் போலவாம். அல்லது, ஒரு பொருளைப் பல பொருள் போலக் காட்டுவது உபாதியாம் என்று கூறப்படும்.

## ஜீவத் தோற்றம்.

"பொய்ப்புறு மவித்தை யெண்ணிற் போத்துருப் பசுவென் றோதும்
ஒப்பருஞ் சீவர்க் கெல்லா முபாதியாய் மோகஞ் செய்யும்."

மலின சத்துவகுண வடிவ அவித்தையானது கலங்கற் சலம்போலத் தன்னமிசத்தால் பலவாயிருக்கும். அவ்வவித்தையில் பிரஹ்ம சைதன்யம் பிரதிபிம்பித்துப் போக்துரு பசு என்றழைக்கப்படும் அளவற்ற ஜீவர்களாம். அவித்தை தன் அமிசத்தாற் பலவாயிருத்தலின் ஜீவர்களும் பலராவர். அந்த ஜீவர்க்கு உபாதியாகவுள்ள மேற்கூறப்பட்ட அவித்தையானது மலினமுடையதாயிருத்தலின் சீவர்களுக்கு மோகத்தைத் தருவதாயிருக்கும்.

("மாயையிலுள்ள பிரஹ்மத்தின் பிரதிபிம்பம் அதிஷ்டான (பிரஹ்ம)த்துடனும் மாயையுடனும் கூடி ஜகத்கர்த்தாவாகிய சர்வஞ்ஞ ஈசுவரனெனப்படும். அவித்தையிலுள்ள பிரஹ்மத்தின் பிரதிபிம்பம் அதிஷ்டானத்து (கூடஸ்தரு)டனும் அவித்தையுடனும் கூடிப் போக்தாவாகிய அற்பஞ்ஞ ஜீவனெனப்படும். அவர்களுள் ஈசுவரனது உபாதியாகிய மாயை ஏகமா (ஒன்று)யும் ஆபேக்ஷிக வியாபகமாயுமிருத்தலால் ஈசுவரனும் ஏகமாயும் வியாபகமாயுமிருக்கின்றனர். ஜீவரது உபாதியாகிய அவித்தை நாநாவாயும் பரிச்சின்னமாயுமிருத்தலால் ஜீவனும் நாநாவும் பரிச்சின்னமுமாம்," என்று ஸ்ரீ. விசாரசந்திரோதயம் கூறுவது மிங்குணரத் தக்கதாம்.)

## பிரபஞ்சத் தோற்றம்

"எய்ப்புறு பகுதிபாச மெனக்குண சமமாய் நின்று,"

"அவித்தையின் விம்பித் துள்ளவாருயிர் நுகர்ச்சிக் காகத்
துவக்குறு காரியங்க டோன்றிட வெதிர்கு றித்த
உவப்புறு மீச ளோக்க மாத்திரத் துற்ற லர்ந்து
பவப்படு கால மாகி யதுகொடு பரிண மித்து,"

"இருமக தத்து வந்தா னெனநிற்கும்."

தத்துவ ஞானத்தா லழியுந் தன்மையதாய பிரகிருதியானது யோக்கியவடிவத் தன்மையால் பாசமெனக் கூறப்படுவதாய் சத்துவம் ராசதம் தாமதம் என்னும் முக்குணங்களையும் சமமாகத் தன்னிடத்துக் கொண்டிருக்கும்.

(மூலப்பிரகிருதியை—மாயை—அவித்தை என்பன ஒன்றற்கே யுரிய பெயர்களாம். சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்களும் சமமாய்க் கூடியிருக்கும் போது மூலப்பிரகிருதி என்றும், சத்துவகுணம் மிகுந்துள்ளபோது மாயை என்றும், இராசதகுணம் மிகுந்துள்ளபோது

அன்புளவாசிற் கென்படைவேண்டும்.



அவித்தை என்றும், தாமதகுணம் மிகுந்துள்ளபோது தமோகுணப் பிரதானப் பிரகிருதி என்றும் பெயர்களுண்டாகின்றன.

மேலே பிரகிருதி என்றது தமோகுணப் பிரதானப் பிரகிருதியை என்பதிங் குணரத் தக்கதாம்.)

அந்தப் பிருகிருதியானது, அவித்தையிற் பிரதி பிம்பித்துள்ள சீவர்களின் போகானுபவத்தின் பொருட்டு தேகாதி பிரபஞ்சங்களை யுண்டாக்க வேண்டுமென்றெண்ணிய ஈசுவரன் தன்னை நோக்கிய வளவில் மகதத்துவம் முதலிய காரியங்கள் தன்னிடத்தினின்றும் உற்பத்தியாதற் கேதுவாகிய பரிபாக காலத்தை யடைகிறது. அதனால் கால தத்துவ மென்றழைக்கப்படுகின்றது. பின்பு அது பரிணமத்தை (வேற்றுருவை) யடைந்து மகதத்துவமாகி நிற்கும்.

"...............................அதுதா னீர்பெய்
தரும்விதை முளையா மல்முன் போலிரா தாதல் போலக்
கருவெனும் பகுதி யோடாங் காரமு மாகாமற் பொய்
யுரமுறு நிருவி கற்ப வுருநடு வவத்தை யாகும்."

பின்னர், அம்மக தத்துவமானது முன்னைய காரண வடிவமாகிய பிரகிருதியாகாமலும் பின்னைய காரிய வடிவமாகிய அகங்கார தத்துவ மாகாமலும் மித்தியா ஞானமுற்ற நிருவிகற்ப வடிவத்தால் நடுநிலையை யுடையதாகும். அந்நிலை, நீரிலூறிய விதையானது பின்னைய முளைவடிவமாகாமலும் முன்னைய விதை வடிவ மாகாமலும் உப்பியிருத்தலாகிய ஓர்வித நடுநிலையை யடைந்திருத்தல் போன்றதாம்.

முற்கூறப்பட்ட மகத்தத்துவமானது ஈசுவரனது நோக்கத்தால் காரணமாயுள்ள தன்னிடத்தினின்று காரியப் பொருள்களை யுண்டாக்குதற் கேதுவாகிய பக்குவ காலத்தை யெய்தி காலதத்துவமாகிப் பின் வேற்றுருவமடைந்து மகத்தத்துவமாகின்றது. அம் மகத்தத்துவம் காரணத்தன்மையு மின்றி பின்னருண்டாகும் காரியத் தன்மையு மின்றி மத்தியாவத்தை யுடையதாகும்: அந்நிலையில் அது சாமானிய அகங்காரம் எனப்படுகின்றது. இச் சாமானிய அகங்காரமே பிறகு விசேஷ அகங்கார முண்டாதற்குக் காரணமாகும் என்பது மேற் கூறியதன் திரண்ட பொருளாம்.

"கொன்மக தத்து வத்திற் குணபேத முறுப்பொய்ஞ் ஞான
மன்சவி கற்ப மாக வருமுத லத்தி யாசம்
என்முத லாங்கா ரத்தோன் றிடும்."

பின்னர் அம்மகத் தத்துவத்தினின்றும் மூலாங்கார முண்டாகும். இது சவிகற்ப வடிவ பிரதம அத்தியாச மென்றும் (விசேஷ அகங்காரமென்றும்) கூறப்படும்.

(ஒவ்வொருவரும் நித்திரையினின்றும் விழித்துக்கொள்ளும் போது அந்நித்திராவஸ்தைக்கும் சாக்கிராவஸ்தைக்கும் இடைப்பட்டதாகிய ஓர் நிலை யுண்டாகின்றது. ஊன்றிக் கவனிப்போர் இதனை யுணர்வர். அந் நிலையில் தான் இன்னான் இன்னவிடத்தி லிருக்கிறேன் என்றுந் தோன்றாமல் சாமானியமாக நான் என்று மாத்திரம் அறிகிறான். அதுவே நிர்விகற்ப மித்தியா

பல்லறஞ் செய்தலே செல்வப் பயனும்.

ஞானமாகிய சாமானிய அகங்கார மெனப்படும். பிறகு நான் இன்னுன் இன்ன விடத்தி லிருக்கிறேன் என்பன போன்ற விஷயங்களை யறிகிறான். இதுவே விசேஷ அகங்கார மெனப்படுகின்றது.

அகங்காரத்தின் முக்குணங்கள்:—"குணம் சத்துவந்தான். பின் வரு மிராசதஞ் சொற் பெருந்தமோ குணமென்ருகும்."

அவ்வகங்காரத்தின் குணங்கள் சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்றுமாம்.

முக்குண வடிவம்:—"உரைப்பருஞ் சத்துவாதி யுருவங்கள் பிரகாசம் பின்—புரைப்பிர விருத்தி மோக மென்குவர்."

சத்துவகுணம் பிரகாச (ஞான)த்தையும், இராசத குணம் பிரவிருத்தியை யும், தாமசகுணம் மோக (மயக்க)த்தையும் வடிவமாக வுடையனவாம்.

முக்குணங்களின் வேறு பெயர்கள்:—"புகல் குணங்கள்—நிரைப் பெயர் தான்வை காரிகழுந்தை சதம்பூ தாதி."

அவற்றுள் சத்துவம் தைசசம் எனவும், இராசதம் வைகாரி யெனவும், தாமதம் பூதாதி யெனவும் வேறு பெயர்களையும் பெற்றிருக்கும்.

அந்தக்காணம் முதலியவைகளின் தோற்றம்.

"சத்துவ குணத்திற் ரேன்றுந் தயங்குமுட் காண நான்கும்
புத்தியிந் தியங்க ளைந்தும் போந்துதித் திடுமி ராச
தத்தில்வாக் காதி யைந்துந் தகும்பிரா ணுதி யைந்தும்
அத்தமோ குணத்திற் ரேன்று மகல்விசும் பாதிபூதம்."

மேற் கூறப்பட்ட அகங்கார தத்துவத்தின் சத்துவ குணத்தினின்றும் (சமஷ்டியாக) மனம் முதலிய அந்தக் காணங்கள் நான்கும் (வியஷ்டியாக) ஞானேந்திரியங்க ளைந்தும் தோன்றும். இராசதத்தினின்றும் (வியஷ்டியாக) வாக்கு முதலிய கருமேந்திரியங்க ளைந்தும் (சமஷ்டியாக பிராணன் முதலிய வாயுக்க ளைந்தும் தோன்றும். மற்றையதாகிய தாமத குணத்தினின்றும் ஆகாசம் முதலிய சூக்கும பூதங்களைந்து முண்டாகும்.

(சமஷ்டி=ஒன்ருகக் கூடியது. வியஷ்டி=தனித்தனியாக விருப்பது. இவற்றினிலக்கணம் முன்னரே கூறப்பட்டிருக்கிறது.)

பஞ்சீகரணம்.

"அப்பெரும் பூதம் பஞ்சீ கரித்துல காகிநிற்கும்."

அந்தச் சூக்கும பூதங்களைந்தும் ஒவ்வொன்றும் தனித்தனி ஐந்து பாகமாகப் பிரிந்து ஒன்ருேடொன்று கலந்து (பஞ்சீகாணப்பட்டு) தூல பூதங்களாகி உலக வடிவமாகும்.

("ஐந்துபூ தமும்மத் தாகிகி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதன் பாதிவிட்டு நாலொடு நாலுங் கூட்ட
வந்தன தூலபூத மகாபூத மவற்றி னின்றும்
தந்தன நான்காந்தூல தனுவண்ட புவன போகம்."

என்று கைவல்லிய நவநீதம் பஞ்சீகாண விளக்கத்தைக் கூறுவதறிக.

---

"இறந்தபின் தான தருமங்கள் செய்வதைவிட இருக்கும்போது தருமஞ் செய்து பலனடைவதே மேல்."



இதன் பொருள்:—சூக்கும பூதங்களைந்தனுள் ஒவ்வொன்றையும் இவ் விரண்டு பாகமாகப் பிரித்து, ஒரு பாதியை அப்படியே வைத்துவிட்டு மற்றை ஐந்து பாதிகளையும் ஒவ்வொன்றை நன்ஞன்கு பாகமாகப் பிரித்தல் வேண்டும். அப்படிப் பிரித்தபின் ஒரு பூதத்தின் நான்கு பாகங்களையு மெடுத்து மற்றையப் பூதங்களின் அரைப் பாகங்களோடு தனித்தனியாக ஒவ்வொரு பாகத்தைச் சேர்க்க வேண்டும். அப்படியே எல்லாப் பூதங்களின் நான்கு பாகங்களையும் பிற பூதங்களோடு சேர்த்துவிட்டால் ஒவ்வொரு பூதத்திலும் தன்னமிசம் அரைப்பாகமும் மற்றப் பூதங்களி லொவ்வொன்றின் அரைக்கால் அமிசமும் சேர்கிறது. இதுவே பஞ்சீகாணமெனப்படும்.

இதன் விளக்கம் இவ்வாறு காண்க.

பஞ்ச பூதங்கள்.




இரு பாகமாகப் பிரித்தல்.




ஒரு பாதியை விட்டு மற்றப் பாதியை நந்நான்கு பாகமாக்கல்.




---

குடிகள் திரண்டால் கொற்றவனேது.

ஒவ்வோரு பூதத்தின் நான்கு பாகத்தையும்
மற்றப் பூதங்களோடு சேர்த்தல்.

| ஆ. | வா. | தே. | அ. | பி. |
| --- | --- | --- | --- | --- |
| | | | | |
| வா. | ஆ. | ஆ. | ஆ. | ஆ. |
| தே. | தே. | வா. | வா. | வா. |
| அ. | அ. | அ. | தே. | தே. |
| பி. | பி. | பி. | பி. | அ. |

இத்தூல பூதங்களினின்றும் சகல அண்டபிண்ட சராசரங்களும் மூவகை ஜாதி நால்வகை யோனி எழுவகைத் தோற்றமாயுள்ள எண்பத்து நான்கு லட்ச ஜீவதூல பேதங்களு முண்டாகும்.)


"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை

## தெலுங்குப் பதிப்பு.

(o)

நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப் பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் அறிந்ததே. இப்பொழுது "ஆனந்தபோதினி"யைத் தெலுங்கு மொழியிலும் ஜூன் முதற்கொண்டு ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவர ஏற்பாடு செய்திருக்கின்றோம். தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம். மாதிரி காபி இனும்

வருட சந்தா தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0
வெளி நாடுகளுக்கு ... ,, 1—4—0

மானேஜர்.


தருமஞ் செய்வது நமது கடன். அதன்பால் வரும் இன்னல் தீர்ப்பவர் கடவுள். மன மகிழ்ச்சியோடு நம்பித் தருமத்தைச் செய்வாயாக.

# கர்ணன் மாண்பு.

(எம். சுப்பிரமணியம், பி. ஏ.)

'கர்ணன்' என்னும் பெயரைக் கேட்டமாத்திரத்தில் நம்பால் மிக்கதோர் மனநெகிழ்ச்சி உண்டாகின்றது. அவனிடம் அமைந்திலங்கிய அருமைக்குணங்களனைத்தும் நம் ஞாபகத்துக்கு வருவதால் நம் உள்ளம் பெரிதும் பூரிப்படைகின்றது. அவனைக் குறித்து மேன்மேலும் சிந்திக்கவும் கற்கவும் கேட்கவும் அவாவுகின்றோம். அவன்பால் அமைந்த சிறந்த 'குணங்களையே நம் வாழ்க்கைக்குக் குறிக்கோளாகக் கொண்டொழுக விழைகின்றோம். இத்தகைய உள்ளக்கிளர்ச்சியை உண்டாக்கும் குணங்களை ஒரு சிறிது ஆராய்வோம்.

நற்குணங்கள் என்று கூறத்தகும் யாவற்றுக்கும் கர்ணன் ஓர் உறைவிடமாய் அமைந்தவன் எனக் கூறுதல் சாலவும் சிறக்கும்.

"......................................பேருலகில்
உண்மைக்கிவனே வலிக்கிவனே உறவுக்கிவனே உரைக்கிவனே
திண்மைக்கிவனே நெறிக்கிவனே தேசுக்கிவனே சிலைக்கிவனே
வண்மைக்கிவனே கன்னனெனு மன்னன்கண்டாய் மற்றிவனே"

என்னும் செய்யுள் இவனது சிறந்த குணங்களைக் கூறுவதாகும். வண்மை, திண்மை, வலிமை, வாய்மை, மெய்ந்நெறிபேணல், செய்ந்நன்றி மறவாமை முதலிய அருங்குணங்கள் இவனுக்குக் கஞ்சுகமென அமைந் திருந்தனவாம். கர்ணன் இக்குணங்களைத் தன் உயிரினும் சிறந்தனவாகக் கருதி யிருந்தான். தன் உயிரையே இழக்க நேரிடினும், அதனைக் காக்கு நிமித்தம் இக்குணங்களைக் கைவிட ஒரு சிறிதும் ஒருப்படா உள்ளம் வாய்ந்தவன். சுருங்கக் கூறின், இக்குணங்களைப் போற்றிப் பாராட்டுதலையே தன் வாழ்க்கைக் கமைந்த குறிக்கோளாகக் கொண்டொழுகி வந்தவன்.

கர்ணனைப்பற்றிச் சிந்திக்குந்தோறும், அவனது அரும் பெருங்குணங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந் திலங்குவதாகிய 'கொடை' என்பதே நம் ஞாபகத்து முன்னணியில் நிற்கின்றது. இடையெழு வள்ளல்கள் என்று கூறப்படுவோரில் ஒருவனாகிய கர்ணன் இலனேல், 'கொடை' என்னும் மொழி எங்கிருந்து தோன்றி யிருக்கும்!

"கொடையிற் கர்ணன்" என்னும் முதுமொழிக்குக் காரண பூதமாய் அமைந்திலங்கிய இவன், "தேஹி" எனக் கேட்போர்க்குத் தாழாது தருதலையே சிறந்த தானமாகக் கருதி வந்தான். வரையாது வழங்கும் வண்மை வாய்ந்திருந்தான். இதனை வில்லிபுத்தூரார்.

"ஆன்மகோடிகள் எல்லாவற்றிலும் இறைவன் இருக்கின்றான். எவ்வுயிர்க்குத் தீங்கு செய்யினும் இறைவனுக்குத் தீங்கு செய்ததை ஒக்கும்."

"அறஞ்செறி தானம் வண்மை யளவிலா தளித்து" எனவும்

"உம்பர் கற்பகமு நாண வண்மையி லுயர்ந்த வீரன்" எனவும்

"உம்பர் காவனைய கையான்" எனவும் சிறப்பித்துக் கூறி யுள்ளார்.

இராயசூய யாகத்தின்கண்

"தானமுந் தியாகந்தானும் தபனன்மா மதலையான
மானவன் கொடுக்க"

என்பதும் சிறப்புப் பொருந்திய பதவி கர்ணனுக்கு கிடைத்த தன்மையையும் அவனது வண்மைக்குணத்தையும் நன்கு விளக்குவதாகும்.

மேலும், தன்னை வந்தடைந்தோர் யாவராயிருப்பினும், தக்கார் தகவிலர் என்னும் வேற்றுமை பாராது கொடுக்கும் குணமுடையவன். இத்தன்மையை

"வல்லார் வல்ல கலைஞருக்கு மறைநூலவர்க்குங் கடவுளர்க்கு
மில்லாதவர்க்கு முள்ளவர்க்கு மிரந்தோர் தமக்குத் துறந்தவர்க்குஞ்
சொல்லா தவர்க்குஞ் சொல்பவர்க்குஞ் சூழுஞ் சமயாதிபர்களுக்கு
மில்லாதவர்க்கு மிரவிமக னரியதான மளிக்கின்றான்"

என்று கவி, கண்ணன் கூற்றாக வெகு அழகாய்க் கூறுகின்றார். இதுவுமன்றி

"வண்மையாளர் தமாருயிர் மாற்றலார் கேட்பினு மறுக்கிலார்"

என்பதற்கிணங்க, பிறர் எப்பொருளைக் கேட்பினும்—தன் உயிரையே வேண்டினும்—தாழாது தரும் தன்மையன். இச்சந்தர்ப்பத்தில்

"......................................அவனென்றும்
இந்தப் புவியின் மறுத்தறியான் உயிரே யெனினு மீந்திடுவான்"

என்பது பன்முறையும் படித்து மகிழற் பாலது.

கர்ணனது அருங்குணங்களை விளக்கவல்ல சந்தர்ப்பங்கள் மகாபாரதக் கதையில் பலவாகச் செறிந்து கிடக்கின்றன. அவன் வள்ளன்மை, இந்திரன் அவன்பால் கவசகுண்டலங்களைப் பெறுங்காலையில் சிறந்து தோன்றுகின்றது. கண்ணன் கட்டளைப்படி இந்திரன் கர்ணனிடம் சென்றான். அதிதியின் வரவுகண்ட கர்ணன் உவகை யெய்தும் பெற்றி போற்றற் குரியதாகும். அவனைத் தொழுதடி வீழ்ந்து

"என்ன மாதவம் புரிந்தனன் பரிந்து நீரீண்டெழுந் தருளுதற்கென்று"

கூறி, அவனைப் பொன்னாசனத் திருத்தி, மெய்யன்புடன் பூசையும் முறைமையிற் புரிந்து,

"நீ சொன்னவை யாவையும் உனக்களிப்பன்" என்று கூறினான். மேலும்,

"நீ மெய்யுயிர் விழைந்திரந்தாலும் கருத்தினோடு உனக்களித்திடுவன்"

எனவும் செப்பினான். கவசகுண்டலங்களைத் தருகென இந்திரன் கேட்ட மாத்திரத்தில் அவற்றைத் தாழாது தந்திட்டான்.

"கவசகுண்டல மென்றிரண்டு புனையிற் கற்பாந்த
திவசம் பொரினுங் கன்னனுயிர் செகுப்பார் மண்ணிற் சிலருண்டோ"

என்பதற்கேற்ற சிறப்பு வாய்ந்த ஆபரணங்களைத் தந்திடின் தன் வன்மைக்குக்

---

"இந்தக்காலம் இந்த நிகழ்ச்சி வருமா என்பதை அறியோம். பிறப்பு இறப்புத் தன்மையுமறிந்திலோம். ஆதலின் உயிர் உடலுடன் இருக்கும்பொதே தருமங்கள் செய்யவேண்டும்."



குறைவுண்டாகுமே எனவும் கருதினானில்லை. அது சமயம் "மாயவனேவலால் இந்திரன் வந்துளான்" என அசரீரி கூறிய மொழியையும் பாராட்டினானில்லை. தன்னை வந்திரந்தவர்க் கொருபொருள் தருவதாக வாக்களித்த பின் எக்காரணத்தைக் கொண்டும் அதனைத் தாராது தாழ்த்தல் தூயதன்றென மகாபலி கருதியதேபோல் கருதித் தினகரன் சிறுவன்

"சிந்தையின் களிப்போர் கலக்கமற் றளித்தனன்"

என்னே இவன் வள்ளன்மை! இதனை வில்லிபுத்தூரார்,

"வண்மையாளர்த மாருயிர் மாற்றலார் கேட்பினு மறுக்கிலார்"

என்று கூறுந்தன்மை சிறப்புப் பொருந்தியதாகும்.

கர்ணனது வள்ளன்மை மற்றொரு சமயத்திலும் வெளியாகின்றது. கர்ணன் செய்த புண்ணியமானது, அவன் உயிர் செல்லவொட்டாது தடுக்கின்றதென்பதை யறிந்த கண்ணன் "மெய்த்தவப் படிவ வேதியனாகி வெயிலவன் புதல்வனை யடைந்தான்." அது சமயம் கர்ணன் நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதாகும். அவன் உடலினின்றும் குருதி வெயிலவன் கரங்கள் போல் உகுகின்றது. மகுடம் கவசம் குண்டலம் முதலியன ஏதுமின்றி உருக்குலைந்து கிடக்கின்றான். அச்சமயத்திலும் அவன் வள்ளன்மை குறைந்தபாடில்லை.

"ஈண்டிய வறுமைப் பெருந்துயருழந்தேன்
இயைந்தொன் றிக்கணத் தளிப்பாய்"

என்று கண்ணன் கூறிய மொழியைக் கர்ணன் "இருசெவிக் கமுதெனக் கேட்டான்" என்று ஆசிரியர் கூறுமுறை சிறந்ததொன்றாகும். கர்ணன் நன்றென நகைத்து

"நினக்கு வேண்டும் பொருள் யாதென நவில்க" என்று உவகை ததும்பக் கேட்டான்.

"நின் புண்ணிய மனைத்தும் உதவுக" எனக் கண்ணன் கேட்ட வளவில் கர்ணன் "உளமகிழ்ந்தான்" எனக் கவி கூறுதல் மிகுந்த இன்பம் பயப்பதொன்றாகும்.

இவ்வாறு உளமகிழ்ந்த கர்ணன் ஒன்று நினைத்து மனமுருக்க முறலானான். "வேண்டுப வேண்டுப வேண்டுநர்க் கருளும்" பக்குவத்தில் வாராது, ஆவியானது நிலையிற் கலங்கிய பக்குவத்தில்—கொடுத்தற்குரிய பல்வேறு பொருட்கள் தன்னிடம் இல்லாத காலத்தில்—அதிதி வந்தானே என்று கர்ணன் மனம் கவலும் தன்மை பன்முறையும் சிந்தித்து மகிழ்தற் குரியதாகும். இதனை

"ஆவியோ நிலையிற்கலங்கிய தியாக்கை யகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன்வேண்டும் பொருளெலா நயக்கும் பக்குவந்தன்னில் வந்திலையால்"

எனக் கவி, கர்ணன் வாயிலாக வெகு அழகாய்க் கூறுகின்றார்.

கொடுத்தற்குரிய சிறந்த பொருள் ஏதும் இலதே என்று மனம் கவன்ற கர்ணன்

"யான்செய் புண்ணிய மனைத்தும் உதவினேன் கொள்க நீ" எனக் கூறினான். "கைப்புனலுடன் தருக" எனக் கண்ணன் கேட்ட சமயம், கர்ணனது தியாகம் பொருந்திய செய்கையினால் வெளிப்படும் வள்ளன்மை முன்னிலும் சிறப்பாகப் பிரகாசிக்கின்றது. கண்ணன் கேட்டவாறே கைப்புன

லுடன் புண்ணியத்தைத் தருதற் பொருட்டு அருகே நீர் உளதோ எனவும் நோக்கினானில்லை. தன் நிலை தளர்ந்திருக்குங் காலத்து மெய்வருத்தத்தை ஒரு சிறிதும் பாராது, தன் இதயத்தில் தைத்திருந்த அம்பைப் பிடுங்கி அதன் வழியாக வெளிப்பட்ட குருதிகொண்டு புண்ணியத்தைத் தானம் செய்த இவனது வள்ளன்மைக்கு நிகருமுண்டோ? இதனை

"கன்னனை யுவகைக் கருத்தினானோக்கிக் கைப்புனலுடன் தருகென்ன
வன்னவ னிதயத் தம்பின்வா யம்பா லளித்தலு மங்கையா லேற்றான்"

எனக் கவி கூறியிருப்பது போற்றிப் பாராட்டற் குரியதாகும்.

கர்ணன் கண்ணனிடம் வரம் பெறும் தன்மை, அவனது வண்மைக் குணத்தைக் கோடி சூரியன்போல் பிரகாசிக்கச் செய்கின்றது.

"நீ வேண்டிய வரங்கள் சொல்லுக வுனக்குத் தருதும்"

எனக் கண்ணன் உரைப்ப

"அல்லல் வெவ்வினையா லின்னமுற்பவமுண் டாயினுமேழெழு பிறப்பு
மில்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா விதய நீ யளித்தருளென்
[றான்"

எத்துணைப் பிறவி பெறினும், 'இல்லை' யென்று கேட்போர்க்கு இல்லை யென்னாது கொடுக்கும் மனநிலையையே இறுதியில் பெறுதற்குரிய வரமாக வேண்டி நின்ற இவனது வள்ளன்மைதான் என்னே!

அவ்வாறே வரம்பெற்றுத் திருமாலின் திவ்ய ரூபத்தை நேராகக்கண்டு கண்களித்துப் பல படியாகத் துதித்து

"யான்பெற்ற பெருந்தவப்பே றென்னையன்றி
யிருநிலத்திற் பிறந்தோரில் யார் பெற்றாரே"

என அகமகிழ்ந்தான். (தொடரும்.)

## அன்னரச சஞ்சீவி.

மலச்சிக்கலுடையவர்கட்கும், மலம் தாராளமாய் வரப் பட்டவர்களுக்கும் எவ்விதமான வியாதியும் வராம விருப்பதற்கு அடியிற்கண்ட முறையை அநுசரிப்பது நலம். அதாவது இரவில் வீட்டிலுள்ளவர்கள் சாப்பிட்டு மிகுதியான சாதமிருக்குமல்லவா? அதற்குள் இரவில் வடித்த கஞ்சி நீர் விட்டு வைக்கவேண்டும். எங்ஙனமெனில் நல்ல சுத்த ஜலத்தை ஒரு மட்பாண்டத்தில் ஊற்றிக் கொதிக்கவைத்து ஆறினபிறகு ஷை கஞ்சி நீர் ஒரு பாகமும், சுத்த ஜலம் இரண்டு பாகமும் சேர்த்து இரவில் மிஞ்சிய சாதத்தில் விட்டு வைக்கவேண்டும். சாதத்தைக் காலையில் எழுந்து பல் துலக்கிக்கொண்டு அநுதினமும் விடாமல் சாப்பிட்டு வந்தால் எந்தவிதமான வியாதியும் அணுகாது என்பது அனுபவம். பரீக்ஷித்துப் பார்த்தால் தெரியவரும்.

187504

# முருகன் திருவருட் பெருமை

(தமிழ் வித்துவான். மு. அ. வயிரவலிங்க தேசிகர்.)

அருவமும் உருவமுமாகி யனாதியாய்ப் பலவாயொன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பே ஒரு திருவுருவாக்கொண்ட நம் முருகப்பெருமான் ஆறுபடை வீடாதிய பல நிலையங்களிடத்தும் எழுந்தருளியிருந்து சருவ ஆன்மகோடிகட்கும் பொதுவகையானும் சிறப்பு வகையானும் அவரவர்கட் கேற்றவாறு திருவருள் பாலித்து வருவது பிரசித்தமே. இங்ஙனம் பொதுவகையானும் சிறப்பு வகையானும் ஆன்மகோடிகட் கநுக்கிரகித்து வருவதில் சிறப்புவகையானே நம்மை வழிபடும் அடியவரிடத்து அதி விநோதத் திருவிளையாடல் புரிவதையே நம் குமாரக்கடவுள் தமக்குப் பெருங் கருணையாகக் கொண்டனர். அதுபற்றி யன்றே பெரியாரும் அடியார்க் கெளியவன் சூரசம்மார னெனவும்—பக்தர்க்கருளும் பரமாசாரிய னெனவும் கூறுகின்றனர்!

வழிபடு மன்பர்கட்கு நம் குகக்கடவுள் அநுக்கிரகிப்பது முருகநாம தியானம். கனவினும் மறவா முருகம்மையார், தம் நாயகனால் தங்கரந் துணிக்கப் பட்ட விடத்து, விழிப்புனல் மல்க, உரோமஞ்சிலிர்ப்ப, நாத்தழுதழுப்ப, முருகநாம தியானத்துடன் நின்றுருகுமமயத்து நம் பெருமான் அக்கற்புக் கரசியார் முன்றோன்றித் துணிவுற்ற கரத்தை வளர்வித்து அவ்வம்மையார்க் குத் திருவருள் பாலித்தும்—காப்புடை நிலவும் வாய்ப்புடைத்தாய பழநிப் பதியின் சார்பாம் வில்வவனத்துள்ள தேனுதீர்த்தத்துட் சீதரன் ஆக்ஞைப்படி மூழ்கி மறைந்த குழந்தையைத் தாய் தந்தைய ரிருவரும் காணாது கவன்று பழநிப்பதிவாழ் குழகக் கடவுளே எங்கட்குயர் துணையாமென வாய்விட்டலறு நிற்ப, அப்பொழுது நம் குமாரக்கடவுள் அன்னவர் துயரை யகற்றுவான் நினைந்து தாமே யக்குழந்தை வடிவாய் அத்தீர்த்தத்துணின்றும் போந்து அவ் விருவர் புத்திரசோகத்தையு மாற்றிப் பேரருள் புரிந்துமுள்ள இத்தகைய ஆடல்களானே அவனது கருணை இனிது விளங்கும். இவ்வருமை பாராட் டியே திருப்புகழாசிரியர் கந்தரலங்காரத்துள்—"குமரனென—எங்கே நினைப் பினும் அங்கே வந்தென்முன் னெதிர்நிற்பனே" எனவும், நக்கீரர்,

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேலொன்று—நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோதுவார் முன்.

எனவும் கூறின ரென்க. கலியுகவரதராம் நம் குகப்பெருமான் அடியவரிடர்ப்

---

ஆசை, பொறாமை முதலியவைகளே எல்லாப் பிணிக்கும் காரணப் பொருளாக விளங்குகின்றது.

படும் அமயத்துத் தோன்றி யளித்தலே யன்றிச் செந்தமிழ்ப் பனுவல் விந்தையாய்ப் பாடி வந்தனை செய்யும் பாவாணரிடத்தும் அதிவினோதத் திருவிளையாடல் புரிந்து திருவருள் பாலிக்கும் பெருங்கருணையுடையாருமாவர். இங்ஙனம் நம்பெருமான் செந்தமிழ்ப்பாவாண ரிடத்து மிகவும் பரிந்தருள் பாலிப்ப தென்னையோ வெனின் தமிழுக்குரிய தனித்தெய்வ மாதலினென்க.

நம் முருகப்பெருமான் தனித் தமிழ்த்தெய்வமென்பது திருவேங்கடத்தினின்றும் ஒழிந்த வடவெல்லைக்கண் குமாரதலங்கள் மல்கிக் காணப் பெறாமையானும், தென்னாட்டுக்கண் மலிந்து காணப்பெறலானும், தமிழகத்தாராலேயே பெரிதும் கொண்டாடப் பெறுதலானும், தமிழரியற்றும் பண்டை வழக்கத் தொண்டிலே பிரியமுடையரா யிருத்தலானும், தமிழ்ப்பாவிற் கிரங்கித் தண்ணருள் புரியும் தயையுடையாரா யிருத்தலானும், கடைச்சங்கம் மருவிய இறையனாரகப்பொருட்கு அரிய உரை விரித்திருக்கின்றமையானும் இனிது புலனாகும்.

இளநலமுடைய தனிக் குகப்பெருமான் அமிழ்தினு மினிய தமிழ்மொழியிடத்தும் அப்பாவாணரிடத்தும் அன்பு கொண்டருளினமையை, எச்சங்கத்தாரும் மெச்சும் கச்சிப்பதிக்கண் கச்சியப்பசிவாசாரியரிடத்துப் பெருங் கருணை கொண்டு, 'அன்ப நீ வடமொழியா னமைந்த நம் சரிதமாம் காந்தப் புராணத்தைத் தென்மொழியாற் பாடுக''வெனத் தமது அருமைத் திருவாக்கால், ''திகடசக்கரச் செம்முக மைந்துளான்'' என்றடியெடுத்துக் கொடுப்ப அவ்வாக்கையை ஆசிரியர் சிரமேற்கொண்டு அவ்வடியாதியாகக்கொண்டு மிகவும் சுவை பயக்கும் வண்ணம் பாடி முடித்துச் சபைகூட்டி அரங்கேற்றுவான் புகுந்தபோது நும் கவி குற்றமுடைத்தாமெனக் கூறிய அக்கடுஞ்சொற் செவி புகக் கேட்டு ஆசிரியர் மறுமொழி கூறவியலாது புராணத்தைக் கட்டிக் கொண்டு குமரகோட்டத் துறையு மிறைவன்பாற் சென்று முறைகூற, அவ்விரவின்கண் நம் பெருமான் கனவிடத் துரைத்தவாறு மற்றைத் தினமும் சபைகூட்டிப் புராணத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கிய வமயத்து, அடியவரிடரை யகற்றுவதே பெருங் கருணையாக்கொண்ட நம் குமாரக்கடவுள் ஓர் மூப்புடைப் புலவராய்த் திருவுருக்கொண்டு வீரசோழியமென்னும் நூலுடன் அவ்வவைக்கண் போந்து ஆங்குள்ளா ரனைவரும் ஒப்புறும் வண்ணம் ஆசிரியர் கூறிய கவிக்கு விதி இவ்வீரசோழியத்துக்கண் அமைந்துள்ளது, காண்மின்களென அந்நூலுள் விதி எடுத்துக்காட்டி ஆசாரியரை மகிழ்வித்து அன்னவரையும் புராணத்தமிழையும் ஆதரித்து அருள் புரிந்த பெருங்கருணைத் திறமே இனி துணர்த்தும்.

அன்றியும் மிக்க புலமை நக்கீரனார்க் குதவிய திருவருட் பான்மையையும் இங்கு சிறிது ஆராய்வோம். சிவபூசைக்கண் வழுவினோராய தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரையும் குகைக்குட் படுத்தி அம்முறைக்கண் வழுவிய ஆயிரவரை ஒருங்கே சேர்த் துண்பான் கருதிய பூதம் இன்னும் ஒருவர் வர வேண்டுமென வெதிர்நோக்கி யுலவு மமயம், அவ்விடத்துச் சென்று அம்முறையினின்றும் வழுவிய நக்கீரரையும் குகைக்குட் படுத்து,

உயிர் பிரிந்த உடலைத் தின்பதால் புலாலுண்ணுவோரைப் பிணந்தின்னிகளென்றும், அவைகளை வயிற்றிலடைப்பதால் அங்கு சுடுகாடு அடைந்திருக்கிறதென்றும் சொல்லலாம்.



நீராடி யுண்டலே நியதியென நீரகம் நோக்கிப் பூதம் சென்ற வளவில் குகைக்குட் சிறைப்பட்ட நக்கீரரையன்றி மற்றையத் துணைப்புலவரும் இடுக்கிட்டு நக்கீரரை நோக்கி, 'ஐய பெரும் புலவரே; யாங்க ளித்துணைக்காலமும் இப்பூதத்தால் நல்லுணவாதிய வுதவப்பெற்று உண்டு களித்து வாழ்ந்து வந்தனம்; இன்று உம்மால் உயிர் நீங்கும் விபத்துள் ளகப்பட்டுக் கொண்டோம்; இனி எங்ஙனம் உயிர் தப்புவே'மென வாய்விட் டலறிய அப்புலவரை நக்கீரர் நோக்கி, அனபுடையீர் வருந்தற்க. ஆபத்துக்கண் ணுதவும் அண்ணலாய் செவ்வேட் பெருமான் நம்மைப் பாதுகாக்குமென் றுதரங்கூறி இளநலம் வாய்ந்த வெழிலுடைக் குமரன் சரணலயத் தூன்றிய சிந்தையினராய் ஆறுபடைவீட்டையும் அங்கமாகக்கொண்டு அமிழ்தினு மினிய தமிழ்மொழியானே திருமுருகாற்றுப்படை என்னும் ஓர் அரிய பிரபந்தத்தைப் பாடி யருளின அக்கணமே, பாடற்கிரங்கும் பன்னிருதோட் பகவன், அன்னோர் முன்றோன்றி அஞ்சன்மின்களென வருள்புரிந்து பூதத்தைச் சங்கரித்து புலவர் பெருமக்கள் ஆயிரவரையும் பிராணாபத்தினின்று மீட்பித்த பெருங்கருணைத் திறனும் இங்கு பாராட்டற் குரியதாம். நம் குமாரக்கடவுள் பாடற்கிரங்கி யருளும் பான்மையை நன்குணர்ந்தா ராதலி னன்றோ திருப்புகழாசிரியரும் கந்தரனுபூதிக்கண்

''ஆடும்பரிவே வணிசேவலெனப்
பாடும்பணியே பணியா வருள்வாய்''—எனவும்

''கரவாகிய கல்வியுளார் கடைசென்
றிரவாவகை மெய்ப்பொருளீ குவையோ''

எனவும் இன்னும் பற்பல விடத்தும் வியந்து வியந்து பாராட்டிக் கேட்டிருக்கின்றனர்.

அன்றியும் செந்தமிழ் பாடுந் திறனில்லாதாரையும் நம் குகநாதன் ஆட்கொண்டு செந்தமிழ்ப்புலமைச் செல்வ ராக்குவித்து அன்னவர் தொடுக்கும் நன்னயப் பாடல்களையும் கேட்டின்புறும் தண்ணருளாளருமாவர்.

இத்தகைய பெருங்கருணையா னன்றோ குமரகுருபர சுவாமிகள் இளம் பருவத்துச் செந்திற்பதிக்கண் போந்த விடத்து ஆங்குள்ளார்கள் தம் மூகைத் தன்மையை நோக்கி வெறுப்புறக்கண்டு, தாமும் தம்மியல்பைக் கருதி நைந்து உயிர் துறப்பானெண்ணிக் கடற்கணிறங்கி வீழப் புகுமளவில் செந்திப்பதியாங் கந்தக்கடவுள் அவர் முன்றோன்றி யாட்கொண்டு செந்தமிழ் பாடும் முழுநலந்திகழச் செய்தருளியும் அருணைப்பதிக்கண் பிணிமிடுக்கா லுயிர்துறப்பான் கருதி மலைச்சிகரத்தேறி யுருண்டு வீழ்ந்த அருணகிரியாரையும் அடிமைகொண்டு பெரும் புலவராக்குவித்து அன்னோர் பாடிய செந்தமிழ்ப் புகழாம் சந்தப்பாக்களைக் கேட்டின்புற் றருளியும் இன்னுமிவைபோற் பலவிடத்தும் திருவிளையாடல் புரிந்திருக்கின்றனர்.

இம்மட்டோ இன்னும் அநேகந் திருவிளையாடலை நம் பெருமானிடத்துக் காணலாம். எங்ஙனமெனில், தம்மைத் துதிக்கவும், புலமை வாய்ந்தும்

என்றும் மனச்சாட்சிக்கு உண்மையெனத் தோன்றுவதைத் துணிந்து செய். அது பொய்யாகாது.

பாடவும் தம் மறியாமையானே நினைப்பெழா திருந்த புலவர்களிடத்துத் தாமே வலிந்து சென்று அன்னவரைத் தடுத்தாட்கொண்டு தம்மீது பாடுவித்து அப்பாடல்களைக் கேட்டானந்தித் தருள் புரியும் ஆடலையுடையராய் விளங்கும் பான்மையே இனி துணர்த்தும்.

இம் முறையைச் சிறிது சரிதத்தியல்பினும் ஆராய்வோம்: கோழிக்கும் பாடிக் குஞ்சுக்கும் பாடுவதா வென்றிறுமாந்திருந்த பொய்யாமொழியார் வறுமையுற்றுத் தஞ்சைவாணன் மீது கோவைபாடிப் பரிசு பெற்றுத் தம் முறைவிடம் நோக்கிக் கானத்தர்க்கண் விரைந்து போதும் அளவில் அமரர்க்கிறையாம் நம் குமரக்கடவுள் அப்புலவரைத் தடுத்தாட்கொள்வான் ஓர் வேட்டுவனாக முன்றோன்றி அன்னவரை மருட்டுவித்துத் தம்மீது பாடும் வண்ணம் அருளிய பெருங்கருணைத்திறனை யுணராதார் யாவர். நம் பெருமான் திருவருட்டிற னிருந்தவாறென்னே! இத்துணை உயர்பெருங் கருணையை நம் முருகக்கடவுளுடைய ராதலினன்றோ தனவணிக மக்களை யன்றி ஏனைய மக்களும் கலியுகவரதனெனக் காரணப்பெயராற் றுதித்து வழிவழி யடிமைபூண்டு வந்தித்தொழுகும் அன்புடைய ராகின்றனர்.

இங்ஙனம் நம் பெருமானார்க்கு கலியுகவரதனெனப் பெயர் வாய்ந்ததும் உயர்தரத் திருவருளை தாம்கொண்ட காரணத்தானென்பது பெறப்படும். இத்துணை உயர்தரப்பான்மையால் கந்தரலங்காரச் செய்யுள்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கண் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

எனக் கூறியபடி மக்களாகிய ஒவ்வொருவரும் நம் முருகன் திருவருட் பெருமையை வியந்து அவர்க்கடிமை சாதித்து அவ்வுயர் திருவருளைப் பெறற்குடையராதல் வேண்டுமென்பது துணியத் தக்கதாம்.

ஆதலின் நம் பெருமான் பெருங்கருணையை நாம் அனவரதமும் சிந்தித்து வாழ்வோமாக.

---

மக்கட் பிறவியில் சிறப்பாகச் செய்யவேண்டிய தெல்லாம் பல நூற்களைக் கற்பதும், கற்றோரிடம் சென்று அவர்கள் கற்றறிந்தவற்றைக் கேட்டறிதலும், அவ்வாறு கேட்டறிந்தபடி ஒழுகுதலுமே. இதைவிட பயன்தரத்தக்கது வேறு எப்பிறவியிலும் கிடையாது. ஆகையால் கல்வி, கேள்வி, ஒழுக்கமே இப்பிறவியில் பயன்தரத்தக்கனவாகும்.

* * *

பொறுமையைவிட வேறு தவம் இல்லை. பெருந்தவமுடையோர்க்குப் பொறுமையில்லாவிடின் அத்தவத்தினாற் பயனில்லை. ''பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினவர் காடாள்வார்'' என்பது ஆன்றோர்மொழி.

---

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு நற்குணமுண்டு. அதைக் கண்டு பின்பற்றி நடத்தலே அறிவின் அடையாளம்.

# தேச விசாரம்

(ஸ்ரீமான். எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்.)

பாரத பூமியின் பழம் பெருமை பேசப்போமோ? பல்வகையிலும் நல் ஏற்றமே படைத்து, நானிலமும் மேனிலமும் புகழும் வண்ணம் முன்னம் விளங்கியது அன்றோ? பாண்டவருக்கும் கௌரவருக்கும் நிகழ்ந்த பாரதப்போர் நமது தேசத்தினுக்குப் பெருஞ் சாபத்தீடு ஆயினதே, என் செயலாம்! ஒப்பு உவமை இல்லா அப்போரிலே நல்லோரும் வல்லோரும் ஆருயிர் துறந்தனர்; அல்லது அயல் தேசம் சென்று குடிபுகுந்தனர்; குலங்கள் ஒருங்கே குலைந்தன; கூண்டோடு மரபுகள் மாண்டு மங்கின. எனவே இப்பெரும் பூமி தனது நலமும் பலமும் வளமும் வாழ்வும் இழக்கலாயிற்று.

மாடு இளைக்கினும், கொம்பு இளைக்காது என்பர். அங்ஙனமே, ஆரியாவர்த்தம் அருமை பெருமை குன்றியும், பழைய பெருமித மணம் கமழா நிற்கும். அம்மாகா பாரதப் போரிலே, மறுபுலம் சென்ற மக்களோ ஆங்காங்கு உயர் நலம் ஊட்டி, ஓங்கு புகழ்கொண்டனர்; அயலக மாந்தருக்கு மதிநலம் புகட்டி, மகிமை கொடுத்தனர். மற்று மறுபுல மாந்தரை அன்னவர் நசுக்கவில்லை; கசக்கவில்லை; அடக்கவுமில்லை, ஒடுக்கவுமில்லை. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய கண்டங்கள் அனைத்திலும், நம் ஆரிய முன்னோரின் பெருமிதமே தோய்ந்து படியலாயிற்று. எகிப்து தேசமும் கிரேக்க பூமியும் ஆதியிலே எங்கும் கீர்த்தி பரப்பின எனின், அதற்கு ஆங்குச் சென்ற நம்மூதாதையரின் பேரறிவே காரணமாம். ஒருவரது, நஷ்டம் மற்றவரது இலாபம் ஆயிற்று.

சென்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இப்பாரத கண்டத்தின் நிலையும் வலியும் எவ்வாறுள? அயலக வேந்தருக்கும் வீரருக்கும், இப்பூமி வேட்டைநிலமாக விளங்குகின்றதே. கிரேக்க வேந்தனான அலெக்சாந்தர் என்பான் பெரும்படை கொண்டு இப்பூமியின் மீது சீறிவந்தனன்; சிந்து நதிப் பிரதேசத்தைக் கைப்பற்றினன்; பஞ்ச நதி பாயும் பூமியைப் பாழ்படுத்தினன். பின்னர் பாரசீகர் பெருமிதங் கொண்டு கிளம்பிவந்து, பாரத பூமியின் பீடு போக்கிப் பாடுகண்டனர். அப்பால் சாகர், குசர், மூண்டர், கிலேத்தர், ஹூணர் முதலிய பற்பல சாதியினர் ஆரிய பூமியில் புகுந்து அல்லல் இழைத்ததை ஆரே அறியார்? அங்ஙனம் வந்த அன்னியரோ இங்கு நிலையாக நிற்க முடியவில்லை. அன்னவர் பலரும் வந்த வழி நோக்கி ஓடிப்போயினர்; எஞ்சிநின்ற சிலரோ பாரதருடன் பாரதராய்க் கலந்து போயினர்.

---

மிருகபலம் என்றும் அழிந்துவிடும். சாந்தத்தையும், சத்தியத்தையும் அழிக்க எவராலும் முடியாது. அதுவே நமது மஹான் காந்தியடிகளுடைய கொள்கையாகும்.

மௌரியகுல திலகனும் சந்திரகுப்தன் சீறிக் கிளம்பி, அக்கிரேக்க வெள்ளத்தைப் புரட்டி எறிந்து, பேரரசு கண்டு பெருமிதம் கொண்டான். கிரேக்க பூபதி அக்கொற்றவனது செற்றங்கண்டு, மகளைத் தந்து சந்திரகுப்தனுக்கு மண்டியிட்டது. சில நூற்றாண்டுகளில் மௌரியகுலம் மங்கியது உண்மையே. ஆயினும், குப்த குலத்தினர் வீரங்கொண்டு எழுந்து, சாகர், குசர் முதலியோரைக் குப்புற வீழ்த்தி, வல்லரசொன்றை நிலைநாட்டி, ஆரியரின் பழம் பெருமையைத் தலைசிறக்கச் செய்தனர்.

அக்குலக் கொழுந்தாம் சமுத்திரகுப்தனுக்கு இணையான வீரர் இனி, எந்நாள் உதிக்கப்போகின்றனர்! நாளடைவில் குப்தகுலம் ஒளிகுன்றத் தலைப்பட்டதும், ஹூணர் என்போர் கொக்கரித்து வந்தனர். வர்த்தன வமிச விளக்கான ஸ்ரீ ஹர்ஷ மகாராஜன் பாரதத்தாயின் கண்ணீர் துடைக்கக் கருதி, அவ் அன்னியரைப் போரில் புறங் கண்டு, புகழ்க் கொடி தூக்கி, வெற்றி வேந்தனானான். மேற்கே காந்தாரம் முதல் கிழக்கே காமரூபம் வரையில் தனியரசு கொண்டு தலைசிறந்த ஹர்ஷ சக்கரவர்த்தி அந்தோ! நாளடைவில் பரகதி போயினன். மீண்டும் பாரத பூமி சின்ன பின்னமாகத் தலைப்பட்டுவிட்டது.

வல்லரசுகளும் பேரரசுகளும் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் எங்கும் நிலைத்திருப்பதில்லை. இது ஈசன் செயலோ? இயற்கையின் அற்புதமோ? பேரரசர் மறைந்ததும், சிற்றரசர் தனியரசு கொள்ளக் கருதிக் குலைகின்றனரே யன்றி, வல்லரசு காணக் கனவிலும் கருதுவதில்லை. சென்ற ஆயிரம் ஆண்டுகளுக்குள் ஐந்தாறு முறைக்கு மேல் இப்புண்ணிய பூமி அன்னியரால் அவதி அடைந்துளது. வருங்காலத்தில் என்னுமோ தெரியவில்லை. எத்தனை அன்னியர் எடுப்புடன் வருவரோ? எக்கோலம் காண்பரோ? எல்லாம் வல்ல ஈசனே அறிவான். ஆரிய அன்னைக்கு ஆறுதலும் தேறுதலும் ஊட்டக்கூடிய உயர் வீரன், பெரிய வேந்தன், விரைவில் கிளம்புதல் வேண்டும். இல்லையேல் பாரதவர்ஷம் மீளவும் சீரழிந்து சிறுமை கொள்ள நேரும். இந்நிலையிலே நம்மவரின் நிலைமை எங்ஙனம் உளது? அதனை நினைக்க நினைக்க உண்மைப் புதல்வனுக்கு உடல் கருகும், உள்ளீரல் வற்றும். மக்கள் மாக்களாக ஆகவா புத்தபகவான் தமது போதம் பரப்பினர்? அம்மகான் மீது குறைகூற ஒண்ணாது. மதிகெட்ட மக்களையே நோகவேண்டும்? இது நிற்க,

ஆதிகால ஆரியர் மக்களை நால்வகைப் படுத்தினர்; அனைத்துயிரும் இன்புடன் வாழ அறிவு கொண்டு உழைக்கும் மக்களை அந்தணர் என்று திட்டப்படுத்தினர்; உடல்வலி கொண்டு ஊருக்கு உழைக்கும் உத்தமரை க்ஷத்திரியர் அல்லது போர்வீரர் என்று பொறித்துவைத்தனர்; வர்த்தகமும் விவசாயமும் புரிந்து பூவலயத்தில் இனிமை பரப்ப, வைசியர் என்று சிலரை அழைத்தனர்; அம்மூவருக்கும் இனிய பணிபுரிந்து கனிவுகொள்ளவும் பூமிதிருத்தி உண்ணவும் பூவைசியரை ஏற்படுத்தினர். இதில் ஏற்றம் தாழ்வு என்பது ஒரு சிறிதும் பாராட்டப்பெறவில்லை.

பின்னர் அப்பாகுபாடு இப்பூமியிலே பலமும் பெருமையும் தந்து நின்றது. நாளடைவிலே அந்நால்வகையினருக்குள் அசூயையும் மாச்சரியமும்

---

தற்புகழ் பேசுவோன் தன்னிழிவு உணராதவனாவான்.



தோன்றலாயின. முதல் வருணத்தினரான மறையவரிலே சிலர் மதிபிசகி, நெறிதவறி, கர்வம் கொள்ளலாயினர். அஃதுடன் ஆரியர் வகுத்த யாகம், யக்ஞம், சிராத்தம், இயமம், நியமம் முதலியன கனமிடுக்கும் சிக்கலுங்கொண்டன. அவற்றை அநுஷ்டிப்பதில், மக்களிலே பலருக்குச் சிரத்தைக் குறைவும் சலிப்பும் உதிக்கலாயின; யாக யக்ஞங்களில், அறிந்தும் அறியாமலும் பல மூடக் கொள்கைகள் நிரம்பிவிட்டன. க்ஷத்திரியருக்குள்ளே வேட்டையாடும் வழக்கம் கரை கடந்து விடவே, உயிர்க்கொலையும் ஜீவ ஹிம்சையும் பெருகின. மாமிச போஜனம் வலுக்கலாயிற்று. மதுபானமும் தலைமிஞ்சியது.

இந்நிலையில் இரண்டாவது வகுப்பிலே அவதரித்த சித்தார்த்தன் என்னும் இளவரசன் அம்மக்களின் விபரீதப் போக்கைச் சீர்திருத்தவும், உயிர்க்கொலை, மதுபானம் இவற்றை ஒழிக்கவும், உள்ளங்கொண்டான்; இராஜ்ய போகத்தை வெறுத்து, அனைத் துயிர்களிடத்தும் கருணைகாட்ட வேண்டுமென அந்நன்மகன் போதிக்கலாயினன். அம்மைந்தனது வாசகம் அனைத்தும் விழுமியதேயாம். ஆதலின் நாளடைவில் அவ்வரசிளங் குமரன் புத்தன் எனும் பெரும் பெயர் பெற்றனன். பின்னர் புத்த பகவான் எனப் பெயர் பிரபலமாயிற்று.

சாதிப் பாகுபாடு வேண்டாம் என்பதும், அஹிம்சையே பேரறம் என்பதும், துறவே சர்வ சித்தியும் தரும் என்பதும் அம்மகானது போத சாரங்கள் எனலாம். அப்போதம் வேத மார்க்கத்தினுக்குப் புதியது அன்று. அவர் காலத்தில் இப்பூமியிலே பேரரசு கொண்டிருந்த மௌரிய குலத்தினர் அச்சமயத்தைத் தழுவத் தொடங்கினர். அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் அல்லவா? ஆதலின், அச்சமயம் (மதம்) இப்பூமியெங்கும் பரவலாயிற்று. ஏன்? இப்பாரத பூமியைக் கடந்து, ஆசியாத் துருக்கி, துருக்கிஸ்தானம், சீனா, திபேத்து, ஜப்பான், இலங்கை, சாவகத் தீவு முதலிய பல பூப்பரப்புக்களிலும் பரந்தோங்கிற்று. இப்பூமியிலே முதல் வருணத்தினரைத் தவிர்த்து, ஏனைய மூன்றிலும் உள்ள மக்களில் பலர் அப்புதிய சமயத்தில் சேர்ந்து கொண்டனர். எம்மதமும் சம்மதமே என்றுள்ள ஆரிய வேதமார்க்கம் அப்புதிய சமயங் கண்டு சீறவில்லை; சீரழியவுமில்லை; ஆனால் மாசு நீங்கி, மகாஜோதி கொள்ளலாயிற்று என்றே இயம்பவேண்டும்.

காலக்கிரமத்தில் அப்புதிய சமயமோ சிறுமையில் வீழாமல் இல்லை. அளவுக்கு மிஞ்சின், அமுதமும் விஷம் என்பர். அஹிம்சை அதி அவசியமே. உயிர்களிடம் அன்புகொள்ளுதல் உத்தமந்தான். ஹிம்சை அறவே கூடாது எனின், உலகிலே வாழ்வது எங்ஙனம்? காய்கனிகளைத் தின்னுவதும் பாபம் ஆகுமே. உழவுத் தொழிலும் ஒண்ணாதே. கழனிகளை உழுது பண்படுத்துவதில் எத்துணையோ உயிர்கள் இறக்க நேரிடுகின்றன அன்றோ?

சிரத்தில் கேசங்கொள்ளின் ஈரும் பேனும் புழுக்கும், கூந்தலைக் கோதி முடிப்பதில் அவ்வுயிர்கள் பட்டழியும் என்றஞ்சி, அப்பௌத்தரிலே பலர் தலையை முண்டனஞ் செய்துகொள்ளுகின்றனர்; பாதையிலே செல்லுங்கால்,

---

நற்காரியத்திற்குப் பலவித இடையூறு உண்டாயினும் முட்டாது நடக்க நடக்க பாதையாவதுபோயி பின் நன்மை விளையும். ஊக்கத்தைக் கைவிடாதே.

ஈ எறும்பு நசுங்கிவிடுமென அஞ்சி, மயிற் பீலிகொண்டு நீவி நடக்கின்றனர்; தரையிலே வாழின், பல உயிர்களுக்குத் துன்பம் நேரும் என்று எண்ணி, மரங்களிலே உறிகட்டி அதில் தொங்கி வாழுகின்றனர். காஷ்மீர வேந்தனான மேகவாகனனும், மாளவ மன்னவனான சீலாதித்தனும் தத்தம் படையிலுள்ள கரிபரிகளுக்கு வடிகட்டின நீரையே அருத்தினர். வடிகட்டாத நீரில் உள்ள கிருமிகள் கரிபரிகளின் வாயில் புகின் உயிர்க் கொலை நேரும் என்பதே அம்மன்னரின் துணிபு.

துறவின் பெருமை விண்ணினும் பெரிதுதான். வெறும் புறத் துறவினும் அகத்துறவே மேலாகும். அன்றியும் துறவு கொள்ளுவதற்குரிய இலட்சணம் உடையோரே அதனை ஏற்றல் வேண்டும். அப்போதுதான் நன்மை பயக்கும். அங்ஙனம் இன்றி, ஆடவர், பெண்டிர், விருத்தர், பாலர், கற்றோர், கல்லாதோர் ஆகிய அனைவரும் துறவு பூண்டுவிடுவது எனின், அத்துறவினுக்கு உரிய உயர்வே போய்விடும் அன்றோ? எங்கு பார்த்தாலும் தேசத்திலே பௌத்த சந்நியாசிகளும் சந்நியாசினிகளும் நிரம்பி நிற்கின்றனர். அந்நாள் போல் இந்நாள் அன்னவர் புலன்களை யடக்கிப் பரகதிக்கு வழிதேடுவது இல்லை. காவி உடை தரித்துச் சோம்பிக்கிடக்கின்றனர். அன்னவருக்கோ இல்வாழ்வார் நாடோறும் நல்விருந்து அளித்தல் வேண்டுமாம்.

மக்கள் தொகுதியிலே பலர் சோம்பல் துறவிகளாக ஆகிவிடின், தேச வர்த்தகமும் கைத் தொழிலும் என்னாகும்? அன்னவருக்கு ஆடையும் அன்னமும் தந்து ஆதரிக்கும் இல்வாழ்வார் பெரிதும் வருந்த நேரிடுகின்றதே. உயிர்க் கொலை ஒண்ணாது எனின், அரசராயுள்ளோர் சதுரங்க சேனை கொள்ளுதல் எங்ஙனம்? இராஜ நீதி நடப்பது எவ்வாறு? ஆரிய வேத மார்க்கத்தைச் சீர்செய்யத் தோன்றிய சமயமோ சமயச் சமூகரால் சீர்கெட்டுக் கிடக்கின்றதே. சமயத்தையும் சமய கர்த்தாவையும் பழிப்பதற்கு இல்லை. சமயத்தின் மெய்ந்நிலையை உணராமல் திண்டாடும் மக்களையே பழிசொல்ல வேண்டும். புத்த, ஜயின மதங்களிலும் புகுந்துவிட்ட மூடக் கொள்கைகளோ கணக்கில் அடங்கா. எனவே, இம்மாநிலத்திலும், மக்களிடமும் படிந்துள்ள மாசைப் போக்கி மீண்டும் பாரத தேசத்தின் பெருஞ் சிறப்பைப் புலப்படுத்தல் வேண்டும். கௌதம புத்தர் இக்காலம் உயிர்தாங்கி யிருப்பின், ஆடவர் அனைவரும் பேடிகளாய்த் திரிதல் கண்டு கண்ணீர் வடிப்பார். மக்களும் மாநிலமும் மாண்டு மடியவா அப்பகவான் புதிய சமயங் கொண்டார்?

பாத கண்டத்தின் நிலைமை இங்ஙனம் இருக்க, சிந்து தேசத்தின் நிலையோ கேட்க வேண்டியதில்லை. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவும், முயலுவதும் அவசியமாயின் அது பொருட்டு ஆவியை வழங்குவதும் அந்தணரின் கடமையாகும். அதிலும் அமைச்சுத் தொழில்புரியும் நாம் நந்தேசத்தையேனும் சீர்செய்ய முயலவேண்டும். இல்லையேல் உடல் எடுத்த பயனை எய்துவதற்கு இல்லை. நம் இறைவனைக் கொண்டு பேரரசு தோற்றுவிக்கலாம் என்றாலோ, அது ஆகாதகாரியம். வானம் பொய்ப்பினும் வல்லவரின்

---

உலகம் நமக்குப் படிப்பினைத் தரும் பெரிய புத்தகம். அதில் நொந்து பட்டு நோவெடுத்தவனுக்கும் அதுபற்றி உழைப்பவனுக்கும் வேறு நூல் படிப்பினைத் தேடவேண்டியதில்லை.



வாக்கு பொய்க்காது. சாகஸ வேந்தன் சின்னாளில் ஆவி துறப்பன் என்று சோதிடம் வல்லார் செப்பியுளர். படுநோயும் அக்குறியே காட்டுகின்றது. அவனுக்குப் பின் பட்டமேற ஆண் மகன் இல்லை. எனவே ஆரைக்கொண்டு அரசை நடத்துவது?

பாரத வருஷத்தின் நிலை கண்டு இரங்குவதா? சிந்து தேசத்தின் சீரழிவு கண்டு சிந்தாகுலம் அடைவதா? அவ்வரசனது குலத்திலிருந்து ஒருவனைத் தேர்ந்தெடுத்து, அரியணையில் அமர்த்தலாம் எனின், கட்சிப் பிரதி கட்சிகள் கிளம்பி வலுக்குமே. புதிதாக ஒருவனை நாடின் உள்நாட்டுக் கலகம் ஓங்கும். மனிதருக்கு வயது நூறு அல்லதில்லை. அரச வமிசங்களுக்கோ சராசரி இருநூறு ஆண்டுகளுக்குமேல் கிடையாது. இது இயற்கை ஆகிவிட்டது. சாகஸனுக்குப் பின் அவன் குலமும் அழியம் என அன்றே கணித வல்லார் கூறியுளர். எனவே புதிய வயிசம் ஒன்று கண்டாகவேண்டும். அதற்கு நாம் உடந்தையாக இருப்பின், அமைச்சனே அரசைக் கெடுத்தனன் என்ற பழிகிட்டும். ஊர் வாயை மூட உலைமூடி உளதோ? மறையவர் மரபில்வந்த நமக்கு இந்த அவச்சொல் ஏன்? ஒரு குலத்திலே ஒருவன் தவறி நடப்பின், அது அக்குலத்தின் தலையில் சுமருகின்றது. பௌத்த சமய ஊழல்களைத் தவிர்த்து ஆரியவேத மார்க்கத்தை நிலைநாட்ட விரும்பிய நாம், சங்கடமான நிலைமைக்கு உள்ளாக நேருகின்றது. ஆதலின், அல்லல் அனைத்தும் தொலைய உலக வாழ்வைத் துறந்து பாத்திற்குரிய வழிதேட முயலுவதே மேலாகும் என்று எட்டாம் நூற்றாண்டில் சிந்து தேச பூபதியாகவிருந்த சாகஸ வேந்தனது மதியமைச்சன் சாகன் என்பான் இவ்வாறு சிந்தனைகொண்டு நின்றனன்.

---

வாழ்க்கை முழுவதும் செல்வவந்தர்களாக இருப்பது உயர்ந்த பிறப்பினால் அல்ல; முன்செய்த புண்ணியவசமேயாகும். செல்வம்பெற்றுச் சுகமாக வாழவேண்டுமானால் வேதங்களிலே கூறியபடி நல்லொழுக்கங்களைப் பூண்டு தான தருமங்களைச் செய்தல் வேண்டும்.

* * *

வெப்பம்பொருந்திய கிரஹணங்கள் வாய்க்கப்பெற்ற "கதிரவனையும் ஒரு சமயம் சிறு குடையானது அக்கிரணங்கள் ஒரு பகுதியிற் புகாதவாறு தடுக்க வல்லமை பொருந்தியதாகும்; அதுபோல பல கற்றறிந்த வித்வான்களும் சில கற்றறிந்த வித்வான்களும்; சில கற்றறிந்தவர்களுடைய கேள்விக்கு விடை பகர இயலாது மயங்குவர். ஆகையால் பல கற்றுவிட்டோமென்று தற்புகழ்ச்சி கொள்ளுதல் கூடாவாம். "கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு" என்பது பெரியோர் வாக்கு.

* * *

பிறருக்குத் துன்பம் செய்யின் நாமும் அத்துன்பத்தையே அடைவோம். இவ்வுண்மையைப் பெரியார்களது சரிதங்களைப் படித்து நன்கறியலாம். "முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்" என்பது மூதுரை.

---

"கோபிப்பவனுடன் எதிர் நின்று வாதாடாதே. அவனுக்கு மனதிற் பதிய இன்சொல் நீதிகளைப் போதிக்க"

# ஆரியசித்தாந்தம்

## இல்லற வொழுக்கம்

(சிவானந்தசாகர யோகீஸ்வரர்.)

(333-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதனால் இல்வாழ்வான் தனது மனைவியை மாத்திரம் நேசிக்க வேண்டுமென்றும், பிற மாதரிடம் அன்புகொண்டால் அது விபசாரமென்றும், இவ்விபசாரத்தினால் வருந் தோஷம் ஆடவர் மகளிரிருவருக்கும் பொதுவென்றும் ஸ்மிருதிகள் கூறுகின்றன. தன் பத்தினி கற்பு நிலை கெடாதிருக்க விரும்பினால் தானும் அந்நெறி பிறழாது நடக்கவேண்டும்.

"திருவினு நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர்—நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்"

இதனால், பிறர் மனை விரும்புவோர் இனிப்பை விட்டுக் கசப்பை விரும்பும் மிருகம் போல்வாரென்று விளங்குவது காண்க.

பிறர்மனை புகல் பாவமா யிருப்பினு மிருக்கட்டும். கொண்டானும் பிறருங்காணின் மனமும் உடலும் நடுங்குவதான துன்பத்தை யோசித்துப் பார்க்கவேண்டும். இன்பமெனக் கருதிப் பிறர்மனைவிழைந்து செல்வழி மனமும் உடலும் நடுங்கும்படியான திகில் உண்டாவதையும் ஒரு சமயம் கொலை நேரிடுவதையும் உணர்ந்து பிறர் மனை புகாதிருத்தல் வேண்டும். இது பாத்தையர்க்கும் ஏனையோர்க்கும் ஒக்கும்.

"கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
தருமமுந் தாழ்வு படாமே—பெரிதுந்தம்
இன்னலமுங் குன்றாமே யேரிளங் கொம்பன்னார்
நன்னலந் துய்த்தல் நலம்"

என்றபடி தன் காரியம் கெடாமலும் இல்லற தருமம் சிதைவுபடாமலும் தமது நற்குணங்கள் கெடாமலும் இருக்கும்படி தான் கொண்ட தர்ம பத்தினியுடன் மனமொத்து வாழ்வதே நல்லதாம்.

இதுகாறுங் கூறியவதனால் சிற்றின்பவாசையால் நிகழும் மோக மயக்கத்தை, "மோகத்தை முனி" என்ற அன்னையார் உபதேச மொழியாகிய வாள்கொண்டு வீசி, "மெல்லினல்லாள் தோள் சேர்" என்ற அரும்பெருஞ் செல்வத்தைச் சிந்தைப் பொக்கிஷத்திற் சேர்த்துக்கொண்டு இல்லற வெல்லைக்குள் வசிப்பவனே மனிதருட் பெரியோனாவான்.

கணவனை வஞ்சியாமல் மனைவியும் மனைவியை வஞ்சியாமல் கணவனும் நிஷ்களங்க சித்தமுடையவர்களாய் இருவர் மனமும் ஒருமனமாய்க் கலந்து அதிதிகளுக்கு உபசாரத்துடன் அமுதூட்டி யாசகர்களை ஆதரித்துத் தேவரிஷி பிதிர்க்கடன்களாகிய மூன்றையுந் தீர்ப்பதற்காகச் சற்புத்திரனைப் பெற்று அதனால் புத் என்னும் நரகத்தைக் கடந்து சொர்க்காதி புவன போகங்களை அனுபவித்துச் சோபான முறையில் முத்தியெய்தலே இல்லறத்தாலாய பயனுமென்று கொள்க.



இவ்வாறு கூறிப் போந்த நெறியினின்று இல்லறம் நடத்தச் சக்தியில்லாதவர்கள், விருந்துக்கு அன்னமிடச் சக்தியில்லாதவர்கள், விருந்தைக் கண்டவுடன் முகமலர்ந்து இனியமொழி கூறி உபசரித்து, வெய்யிற்கொதுங்க நிழலும், தங்கவும் இரவிற் படுக்கவும் இடமுங்கொடுத்துக் கைகால் முகங்கழுவவும் குடிக்கவும் தண்ணீருங் கொடுக்கவேண்டும். உணவு கிடைக்கத்தக்க இடங்களை அவர்களுக்குக் காட்டவேண்டும். இவைகளெல்லாமும் விருந்தோம்புதலேயாம்.

இவ்வாறு இல்லற தர்மத்தை முறை தவறாமல் நடத்துகிறவன் எப்பொழுதுந் தெய்வ சிந்தனை யுடையவனா யிருக்கவேண்டும். இல்லறம் ஒருவகைத் தெய்வ வழிபாடாய் மோக்ஷத்துக்கு மார்க்கமாகுமென்று முன்னரே கூறினோம். இதுபற்றியே அன்னையாரும் "தெய்வமிகழேல்" என்றருளிச் செய்தார். ஏனெனில் இல்லறம் துறவறமாகிய இரண்டுக்கும் ஏற்ற பயனை அளிப்பது தெய்வமேயாகும். மானிடர் முயற்சிகொண்டு செய்யப்படுவனவெல்லாம் பற்பல விடையூறுகளால் சிதைவது மியல்பு.

துறவறத்தில் வழுவாது நடப்பது துறவறத்தார்க்குத் தவமாவதுபோல இல்லறத்தார்க்கும் அவ்வறநெறிக்குக் கூறப்பட்ட முறையிற் பிறழாது ஒழுகுதலே தவமாம். அத்தவமும் முற்பவங்களில் விட்டகுறை வந்தெய்தினாலன்றிக் கைகூடுவதரிது. அவ்வறமியற்றாமலிருப்பது மனைவியொடு கூடி வாழ்வதற்குப் பயனாகாது. அவன் எப்படியும் செய்தே தீரவேண்டும். அதற்குத் தெய்வ சகாயம் அவசியம் வேண்டப்படும். ஆதலால் தெய்வத்தை அலட்சியம் செய்யாமல் பயபக்தி சிரத்தையோடு இருவரும் தெய்வத்தை யாராதிக்க வேண்டும். அதுவே பெருந்தவமாகும். தங்கள் குலப் பெரியோர்கள் எந்தத் தெய்வத்தை எவ்வாறு ஆராதனை செய்தார்களோ அம்முறை தவறாமல் ஆராதிக்கவேண்டும். அவ்வாராதனையையும் சற்குரு முகத்தா லுணரவேண்டும். தெய்வ வழிபாட்டில் தவறுதல் நேருமாயின் அதுவே தெய்வகுற்ற மெனப்படும். அக்குற்றத்தால் தெய்வசகாயமில்லாமற்போகும். அதனால் செய்கின்ற தவம் கெட்டுப்போம். அதுபற்றியே "தெய்வஞ் சீறிற் கைதவமாளும்" என்றார் ஔவையார்.

தேவகோப முண்டாயின் நாம் செய்கிற தவமேயன்றி முன் செய்துள்ள தவமும் சிதையுமென்று இதனாற் புலப்படுவதுணர்க. நம்மையறியாமல் அஞ்ஞானபூர்வமாக ஏதேனுங் குற்றங் குறைகள் நேர்ந்திருப்பின் அதனைப் பொறுத்து மன்னித்து எடுத்துக்கொண்ட தவத்தைப் பூர்த்தி செய்தருளவேண்டுமென்று ஆராதனை முடிவில் தேவனைப் பிரார்த்தனை செய்து போற்றவேண்டும். இவ்வாறு செய்யின் எடுத்துக்கொண்ட இல்லறம் இடையூறின்றிச் சென்று பூரணமாய் இம்மை மறுமைப் பயன்களைத் தருவதுமன்றி முத்தியின்பத்தையும் பயக்குமென்க.

இல்லற தர்மத்தை எமது சிற்றறிவிற்கெட்டியமட்டில் ஒருவாறு ஈண்டெடுத்துரைத்தோம். ஐயம், திரிபு, அறியாமை முதலிய குற்ற வசத்தால் இன்னும் அநேக விஷயங்கள் விடுபட்டிருத்தல்கூடும். யுக்திவகையினாற் பல கொள்ளக்கிடக்கும். கற்றறிந்த பெரியோர் குற்றங்களைந்து நன்மைகளை மாத்திரம் ஏற்று மகிழ்வார்களாக. இல்லறமல்லது நல்லறமின்று.

# மேனாட்டுத் தத்துவம்

(கி. பாலசுப்பிரமணியன், M. A.)

(359-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸாக்ரெட்டீஸின் முக்கிய கருத்து மனிதருடைய அறிவின்மையைப் போக்குதலும் உண்மை ஞானத்தைப் போதிப்பதுமே. மனிதன் அறியக்கூடிய தத்துவம் யாதெனில் "நாம் ஒன்றும் அறிய முடியா தென்பது." எவ்வளவு மூடனாயினும் உண்மை ஞானத்தை அடையக்கூடு மென்பது ஸாக்ரெடீஸின் பூர்ண நம்பிக்கை. இவ்வுண்மை ஞானமானது தத்துவ முறையிலுமல்ல, ரஸாயன முறையிலுமல்ல, நன்னெறி முறையிலேயே அமைந்துள்ளது. "வேறொன்றும் தெரியாவிட்டாலும் இது மாத்திரம் எனக்கு நன்றாகத்தெரியும். நம்மைக் காட்டிலும் மேலான பதவியுள்ள பொருள் மனிதனாயினும் தேவனாயினும் சரி, அப் பொருளுக்குக் கீழ்ப்படிதலும், நியாய வொழுக்கமும் அவசியம்" என்று ஓரிடத்தில் சொல்லுகிறார். வானத்திலுலாவும் சந்திர சூரியர்களைப்பற்றி நமக்கு ஒன்றுந் தெரியாது. ஆனால் தெரிந்தும் நமக்கு ஒன்றும் பிரயோஜன மில்லை. மனிதன் அறிய வேண்டியது தன்னையே.

ஆகவே ஸாக்ரெட்டீஸ் அதிகமாகக் கருதியது மனிதனின் ஒழுக்கத்தைப் பற்றித்தான். பக்தி—பக்தியின்மை, உதார குணம்—நீசகுணம், நியாயம்—அநியாயம், அறிவு விளக்கம்—பித்தம், லக்ஷணம்—அவலக்ஷணம், தைரியம்—பயம், ராஜ்யம்—ராஜ்யாதி பத்தியம் முதலிய விஷயங்களைக் குறித்துப் பெரும்பாலும் பேசிக் கொண்டிருந்தார். ஏதேனும் ஒரு விஷயம் மனிதனுக்கு உடனே நன்மை பயப்பதல்லாததாக விருப்பின் அவருக்கு வெறுப்புண்டாகும். மனிதன் இவ்வுலகத்தில் செய்ய வேண்டியது நன்றாய் வசிப்பது. அவ்வாசத்திற்குப் பங்கமேற்படாம லிருக்கும் முறைகளையே அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். அனாவசியமான விஷயங்களில் புத்தியைச் செலுத்துவது காலத்தை வீணாக்குவதாகும். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உத்தியோக முறையில் தெரிந்துகொள்ள வேண்டிய ஞானத்தை அடைகிறான். ஆகையால் எல்லா உத்தியோகங்களிலும் மேலானதாகிய தேசவாசம் செய்பவன் அறிய வேண்டியது நல்லொழுக்கம். நல்லொழுக்கந்தான் உண்மை யறிவு. உண்மை யறிவு எதற்காக? நமக்கு நியாய முறையை போதிப்பதற்காக. அறிவதும் அறிந்தபடி செய்வதும் ஒழுக்கமுறை யாதலின் ஸாக்ரெட்டீஸின் முக்கிய கருத்து மனிதரைச் சன்மார்க்கத்தில் திருப்புவதாகும். மேலும் அறிவும் ஒழுக்கமும் ஒன்றாதலின் முன்னோர் செய்ததே நியாய

இல்லறத்தில் புகுமுன் இருபாலாரும் "வள்ளுவர் சரித்திரம்" படித்துணர்தல் மனையறத்திற்கு வழிகாட்டியாம்.



மென்றிராமல் நம் பகுத்தறிவுக்குத் தக்கபடி ஒழுகுவது சகஜமாகிறது. ஸாக்ரெட்டீஸ் ஒவ்வொரு மனிதனுடனும் பேசி, அவன் சொல்வதெல்லாம் சரியென்று முதலில் அங்கீகரித்துப் பிறகு சாதுரியமான கேள்விகளினால் அவனே தான் கொண்டிருந்த எண்ணங்க ளெல்லாம் தவறென்று ஒப்புக்கொள்ளும் வரை அவனிடம் பேசுவார். பிறகு அவனுக்கு ஞானமென்பது ஒருவனுக்குச் சொந்தமல்ல, ஒருவனுக்கு ஞானமென்பது மற்றொருவனுக்கு அஞ்ஞான மாகிவிடாது, ஞானம் பொதுவானதும் சோபிஸ்ட்கள் நினைத்தபடி மனிதனுக்கு மனிதன் மாறுபாடுள்ள தல்லாத தென்றும் அவனுக்குப் போதிப்பார். ஒவ்வொருவிஷயத்தையும் ஆராய்ந்து ஆழ்ந்த யோசனையோடு கருதினால் அதன் உட்கருத்து புலப்படும். அவ் வுட்கருத்து இடம் காலமன்றிப் பொதுவாக எல்லோராலும் அறியக்கூடியது. இவ்வுட்கருத்து அல்லது பொது அர்த்தத்திற்கு ஆங்கிலத்தில் (Concept) என்று சொல்வார்கள். எல்லா மனிதருக்கும் நியாயம், லக்ஷணம், உண்மை முதலியன ஒன்றே. மனிதன் தன் மனச் சாக்ஷிக்கு விரோதமாக நடத்தல் கூடாது. ஸாக்ரெட்டீஸ் தன் தத்துவத்தின்படியே ஜீவித்து வந்ததால்தான் அவருக்கு எதிரிகள் கிளம்பி அவர் அகால மரணமடைய நேரிட்டது.

ஸாக்ரெட்டீஸின் முக்கிய போதம் நல்லொழுக்க மென்று கண்டோம். இந் நல்லொழுக்கம் உண்மை ஞானத்தோடு நித்திய சம்பந்தமாக உள்ளது. நன்னெறி எதற்காக? நன்னெறி வேறொன்றிற்குக் காரணமாக இருக்க வேண்டும். அதைப் பேரின்பம் என்லாம். இப் பேரின்பத்தை அடைய விரும்புவோர் நன்னெறியைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். ஸாக்ரெட்டீஸின் ஜீவிய முறையைப் பார்ப்பின் நன்னெறி வேறொன்றிற்கும் மூலகாரணமான தென்று அவர் கருதியதாகத் தோற்றுகிறது. நன்னெறியோடு நடப்பவருக்குப் பரோபகார சிந்தையே சதா இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்குச் சுயநலமும் சுகமும் கிடையா, உலகப் பற்றற்றவனே மற்றோருக் குதவி செய்யக்கூடும். ஆகையால் ஸாக்ரெட்டீஸிடமிருந்து முக்கியமாகக் கொள்ளும் முறைகளிரண்டு. 1. பேரின்பத்தை அடைய முயலவேண்டும். (2) உலகப் பற்றை இயன்ற மட்டும் ஒழித்துவிட வேண்டும்.

ஸாக்ரெட்டீஸிற்குப் பின் வந்தவர்களில் முதல் முறையைச் சிலர் அனுசரித்தனர். அவர்களுக்கு ஸைரினேய்க்ஸ் (Cyrenaics) என்று பெயர். அவர்களில் முக்கியமானவர் அரிஸ்டிப்பஸ் (Aristippus). மனிதனின் முக்கிய கருத்து இன்பமே. முதலில் இம்மை இன்பமே அடைய முயல வேண்டும். இந்திரியங்களும் மனமும் எவ்வளவு இன்பத்தைப் பெறச் சக்தியுள்ளனவோ அவ்வளவையும் பெறவேண்டும். ஆனால் சில விஷயங்களில் எதிர்பாராத கஷ்டங்கள் உண்டாகின்றன. இன்பத்தை யுன்னிச் செல்பவர் இடுக்கணுக்குள்ளாகிறார்கள். ஆகையால் இச்சமயங்களில் சாக்ரெட்டீஸ் கூறியபடி புத்தியை உபயோகிக்க வேண்டும். புத்திசாலிதான் குறைவற்ற ஆனந்தத்தை அடைய முடியும். அவனே இன்பசாகரத்தில் குளித்தும் மூழ்கிவிடாமலிருப்பான். இன்பம் ஒரு புதிய குதிரை போன்றது. அதை அடக்கிச் சவாரி செய்பவனே புத்திமான். புத்தி இன்பத்தை அறவே ஒழிப்பதற்கல்ல. சுகதுக்கத்தை நன்கறிந்து, முன்பின் யோசனை செய்யும் பகுத்தறிவு புத்தியினால் உண்

பெரியோரின் சிநேகம் குற்றம் போக்கி சுத்தமுண்டாக்கி நிற்கும்.

டாகும். விஷய இன்பம் மாத்திரம் இருப்பின் அவசியம் துக்கமுண்டாகும். இந்திரியங்களை அடக்கிப் புத்தியை உபயோகித்து ஒவ்வொரு தொழிலையும் செய்ய வேண்டும்.

இப்பொழுது இன்பமென்பது தனித்தனியே அனுபவிக்க வேண்டியது. எல்லோருக்கும் பொதுவான தல்ல. அதாவது ஸாக்ரெட்டீஸ் அவ்வளவு கஷ்டப்பட்டு சோபிஸ்ட்கள் கருதியபடி மனிதர்கள் சம்பந்தமற்ற அணுக்களல்ல. எல்லோருக்கும் பொதுவாக அநேக விஷயங்களிருக்கின்றன என்று கற்பித்த நீதியை அவருக்குப் பின் வந்த ஸைரினேய்க்கர் குலைத்துவிட்டார்கள். ஒவ்வொருவனுக்கும் இன்பம் வெவ்வேறாகத் தோன்றுமல்லவா? அதாவது ஒவ்வொருவனும் தனக்குத் தானே அளவு கோலாகிறான். மேலும் உலகமானது ஒவ்வொரு மனிதனும் ஏதேச்சையாகத்தானே இன்பமடைய விடுவதில்லை. எனக்கு ராமனின் பொருளை அபகரித்தலில் இன்பமிருக்கலாம். ஆனால் ராமன் நான் அப்படிச் செய்வதற்கு விடுவனோ? கிருஷ்ணனுக்கு கோவிந்தனைக் கொன்று விடுவதில் இன்பம். அப்படிச் செய்ய கோவிந்தன் கிருஷ்ணனை விடுவனோ? ஆகவே துக்கக் கலப்பற்ற இன்பமே அனுபவிப்பது அசாத்தியம். இதையறிந்த சில ஸைரினேய்க்கர் இன்பத்தைத் தேடுவது பயனற்றது. துக்கத்திலிருந்து விடுதலை பெறுவதே மேன்மையான தோற்றமாகக் கொள்ள வேண்டும் என்றனர். ஹெஜியாஸ் (Hegias) என்பவர் முட்டாளுக்குத்தான் இவ்வுலகம் நன்மையாகத் தோன்றும் புத்திமானுக்கு இது விருப்பும் வெறுப்பும் தராது. மரணமே பேரின்பத்தை யடையச் செய்கிறது என்றார்.

ஸாக்ரெட்டீஸ் இரண்டாவது முறையைக் கைப்பற்றினவருக்கு ஸினிக்ஸ் (Cynics) என்பார்கள். ஸாக்ரெட்டீஸ் மனிதன் அநேக விஷயங்களில் புத்தியைச் செலுத்தி அவைகளை விரும்புதல் கூடாதென்றார். உலகப்பற்று அதிக மிருப்பவனுக்கு பிறருக்கு உதவி செய்ய முடியாது. சண்டைக்குச் சென்றாலும் அபயம் கேட்பவன் அவனே. உலகப் பற்றிருப்பவனுக்கும் உலகத்திலுள்ள மற்றப் பொருள்களுக்கு மிருக்கும் சம்பந்தத்தினால் துன்பமே யொழிய இன்பமுண்டாகாது. பொருளில்லானுக்குத் திருடர் பயமில்லை. இன்பம் தருவது மனமே. வெளியிலிருக்கும் பொருளொன்றுமில்லை. வேண்டாமையே மனிதன் பிரதானமாகக் கொள்ளவேண்டும்.

ஸாக்ரெட்டீஸ் இன்பமொன்றுமே வேண்டாமென்று சொல்லவில்லை. புத்திசாலியானவனுக்கு இன்ப மனுபவிக்கத் தெரியுமென்பது அவர் கருத்து. ஆனால் ஸினிக்கர் உலகப்பற்றையே ஒழித்து விடவேண்டுமென்று போதித்தார்கள். மற்ற மனிதரோடு பேசினாலும் சகவாசஞ் செய்தாலும் விஷயேச்சையில் புத்தி சென்றுவிடும் என்பது அவர்களுடைய கொள்கை. ஆகவே உலகத்திலிருந்தும் நாகரிக முறையை அனுசரிக்காமல் நல்லுணவு, நல்ல உடை முதலியன இல்லாமல் திரிந்து மற்றோரைக் காணவும் பிரியமின்றி காலத்தைப் போக்கினர். டையாஜெனீஸ் (Diogenes) என்பவர் பொருளொன்றையும் எடுத்துச் செல்லாமல் நீர் குடிக்க மாத்திரம் ஒரே கோப்பையை வைத்திருந்ததாகவும், ஒரு குழந்தை நீரைக் கையால் ஏந்திக் குடிப்பதைப் பார்த்து இந்த கோப்பையும் தனக்கு அதிகப்படி யென்று தள்ளிவிட்டதாகவும் படிக்கிறோம்.

நூற்றல், நெசவு, பயிர், கைத்தொழில் முதலியன தூய தொழிலாம்.



இக்காலத்திலும் கூடச் சிலர் உலக விஷயங்களில் பற்றில்லாமல் ஏனையோரை அவதூறு பேசினால் அவர்களை "ஸினிக்கர்" என்று சொல்வது எல்லோரு மறிந்த விஷயம். ஸினிக்கர் மற்றவர்களை மதிப்பதே இல்லை. நாகரிக முறைகளைக் குறித்து இழிவாகப் பேசுவதும் சித்தந் தவறினவர்போல் நடந்து [illegible]ராகத் திரிவதுமாகக் காலங்கழித்து வந்தனர்.

சாக்ரெட்டீஸுக்குப் பின் தத்துவ ஆராய்ச்சியில் ஊக்கத்துடன் புத்தியைச் செலுத்தியவர் பிளேடோ (Plato) என்னும் மகான். அவர் அக்காலத்தில் வழங்கிவந்த பிரபு குலத்தில் பிறந்து அக் குலத்தில் பிறந்த மற்றோரைப் போல சாமானிய மனிதரை அசட்டையாகக் கருதினார். தேசீய சேவையில் புகுந்தால் பொதுஜன சம்பந்த முண்டாகுமென்று அவர் தத்துவத்திலேயே கருத்தாக இருந்தார். சாக்ரெட்டீஸ் எவ்வளவுக் கெவ்வளவு பொதுஜன சமூகத்தையே நாடினாரோ அவ்வளவுக் கவ்வளவு பிளேடோ அதை வெறுத்தார். பேரின்பத்தை மனதைக் கொண்டே சிந்தித்து அடைய வேண்டுமே யல்லாமல் தேசசேவையில் அடைய முடியாது. ஆகையால் பிளேடோ வேறு குற்றமற்ற உலக மொன்றிருக்கிறதென்றும் இவ்வுலகம் அதன் தோற்றமென்றும தீர்மானித்தார். (தொடரும்.)

## ஒரு ஐய வினா.

நமது முன்னோர்களால் போஜனத்துக்குரிய பதார்த்தங்களாகச் சேர்க்கப்பட்டவைகளில் வெங்காயமும் ஒன்று என்பது எல்லாரும் அறிந்தவிஷயம். வைதிகர்களா யிருக்கும் சிலர் இதை உபயோகிக்காமல் நீக்கியிருக்கின்றனர். அவ்வாறு நீக்கப்படுவதற்குத் தேகத்தைக் கெடுக்கக்கூடிய என்ன விஷ வஸ்து அதில் சேர்ந்திருக்கிறது? விஷ வஸ்து சேர்ந்திருந்தால் அதைப் போஜன பதார்த்தத்தோடு சேர்ப்பானேன்? வெங்காயத்தை நாம் கசக்கினாலும், அல்லது உலக்கைகொண்டு இடித்தாலும், கண்ணில் நீர் வடிகிறது; அப்படி கண்ணில் நீர் வடியச்செய்யும்படியான அம்சம் அதில் என்ன சேர்ந்திருக்கிறது? அது சம்பந்தமாய் கண்ணில் நீர் வருவதால் கண்ணுக்கு நன்மையா? தீமையா? நன்மையுண்டாவதாயிருந்தால், அதிலுள்ள சத்து எது? அந்தச் சத்தை வேறுவிதமாகக் கைப்பற்ற முடியுமா? அதனால் என்ன உபயோகம்? இவ்விவரங்களைப்பற்றி வைத்திய நிபுணர்களாவது, தாவர வர்க்க ஆராய்ச்சியாளராவது தயவுசெய்து நமது "ஆனந்தன்" மாத வெளியீடு மூலமாகவே விடையளிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாவக்கல். கர்ணம். கோவிந்த செட்டியார்.

உடற் பயிற்சியானது உடற் கட்டை உண்டாக்கி, வீரம், வெற்றி, ஆண்மைகளைத் தந்து கண்கவர் வனப்பையும் அழகையு முண்டாக்குகின்றது.



# அபாயகரமான உபாயம்.

ஸ்ரீமதி. R. ரங்கநாயகி

சித்திரை மாதம்; கொடுமையான வெய்யில்—ஜீவராசிகள் எல்லாம் வாடிப் பழுங்குகின்றன. வசந்தா குடும்ப நிர்வாகத்திற்கு வந்து இன்னும் வருஷம் முடியவில்லை. வசந்தாவும் தன் கொழுந்தி சந்திராவும் உடலும் உயிரும்போல்—அவ்வளவு ஒற்றுமையா யிருக்கிறார்கள். வசந்தாவுக்குக் கொழுந்தியோடு சம்பாஷிப்ப தென்றால்—ஒரு தனி உற்சாகம். பொழுது போவதே தெரியாது. இதனால் அவள் அந்த வெய்யிலின் கொடுமையைக்கூட லக்ஷியம் செய்யாமல் கொழுந்தியோடு சந்தோஷமாய்ப் பொழுதுபோக்கி வருகிறாள்.

வசந்தாவும் சந்திராவும் சிரித்து விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்ட சாரதாம்பாள் "வசந்தா! ஏன் தூங்காமல் சும்மா பேசிக் கொண்டும் அலைந்து கொண்டும் இருக்கிறாய்? போய்க் கொஞ்சம் படுத்துக் கொள்ளுவது தானே" என்றாள்.

"வெய்யிலின் கொடுமை சகிக்க முடியவில்லை அத்தை! தூக்கம் எங்கே வருகிறேன் என்கிறது" என்று சொல்லிவிட்டு, மறுபடியும் "தாயாரைப் பார்த்துவிட்டு வரவேண்டு மென்று ஆசையாயிருக்கிறது. நான் இன்றைக்கு எங்கள் வீட்டுக்குப் போய் வரட்டுமா?" என்றாள் வசந்தா. "சரி. வேணுமானால் சாயந்திரம் உன் கொழுந்தனைத் துணையாக அழைத்துக்கொண்டு போ." என்று விடை கொடுத்தாள் சாரதாம்பாள்.



உடனே வசந்தா மகிழ்ச்சியோடெழுந்து "கொழுந்தனைச் சாயந்திரம் எங்கும் போகவேண்டாமென்று சொல்லப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடினாள்.

சாரதாம்பாள் தங்கக் கட்டி. நல்ல பெருந்தன்மை வாய்ந்தவள். துரதிர்ஷ்ட வசமாக ஒரு கொடுமைக்காரியாகிய மாமியாரிடம் சிறு வயதில் படாதபாடு பட்டவள். இத்தகைய சாரதாம்பாள் இன்று வசந்தாவுக்கு மாமியாராய் விளங்குகிறாள். மருமகளைத் தன் சொந்த மகளைவிட அருமையாக வைத்திருக்கிறாள்.

வசந்தாவுக்கு மாமியார் வீட்டிலிருப்பதாகவே எண்ணமில்லை. அதனால் அவள் பயமின்றி விளையாட்டுக் குழந்தையைப்போல் பேசிக்கொண்டும், மாமியாரையும் கொழுந்தியையும் சந்தோஷப்படுத்திக்கொண்டும் இருக்கிறாள். வசந்தா நினைத்தால் தன் தாய் வீட்டுக்குப் பயணமாகி விடுவாள். இதனால் தன் காதலனுக்கு மட்டும் அவள் மீது கொஞ்சம் கோபம். அதுவும் 'நீர் கிழிய எய்த வடுப்போல்' நீங்கிவிடும். ஒவ்வொரு சமயம் பொறுக்கமுடியாத கோபம் வருவதும் உண்டு. எனினும் அது கடைசியில் காதற் கோபமாக மாறி மகிழ்ச்சியைப் பெருக்கிவிடும். "இன்னும் சிறு பெண்ணாதலால், தாய் வீட்டுப் பாசம் நீங்கவில்லை. காலம் செல்லச் செல்ல மாமியார் வீடு தன்னுடைய தெனவும் தாய் வீடு அன்னியமான தெனவும் தெரிந்து கொள்வாள்" என்று வசந்தாவின் காதலனாகிய சுந்தரம சமாதானம் செய்துகொள்வான்.

அன்று சாயந்திரம் வசந்தா தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு பயணத்திற்குத் தயாராகிவிட்டாள். ஆபீசினின்றும் தன் காதலனது வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள். பாவம் ஒரு நிமிஷம் ஒரு யுகமாகத் தோன்றியது வசந்தாவுக்கு. "எங்கே இன்னும் காணோமே?" என்று அடிக்கடி தெருப்பக்கம் வந்து வந்து எட்டிப் பார்த்துக்கொண்டே இருந்தாள். சற்று நேரத்தில் சுந்தரமும் வந்தான். கூடத்திற்குள் வந்து பூட்ஸைக் கழற்றிக் கொண்டிருக்கும் போதே "நான் எங்கள் தாயார் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன். இந்தத் தடவை இருபது தினங்கள் இருந்துவிட்டு வருவேன்" என்றாள் வசந்தா. அதற்குச் சுந்தரம் "என்ன! நீ அங்கிருந்து வந்து இன்னும் மூன்று நாளுங்கூட ஆகவில்லையே! இதற்குள் என்ன வந்துவிட்டது? ஏதேனும் அங்கு கப்பல் மூழ்கிவிட்டதா என்ன?" என்றான் ஆச்சரியக் குறி முகத்தில் தோன்ற.

"மூன்று நாளா? ஒரு மாதமாகவில்லையா வந்து" என்றாள் வசந்தா.

"ஒரு மாதமா? ஒரு மாதம் ஒரு யுகமாய்விட்டதா என்ன? பாவம்! தாயாரை விட்டு எப்படி இத்தனை நாள் இருந்துவிட்டாய்? தொண்டை வறண்டுவிட்டது குழந்தைக்கு! எங்கே எதுவரைக்கும் வறண்டிருக்கிறதோ பார்ப்போம்." என்று அப்படியே கட்டித் தழுவ நெருங்கினான் சுந்தரம்—சிரித்துக் கொண்டே.

---

"ஸ்திரீகளுக்குக் கணக்கில்லாத புடவைகள், ஆபரணங்களிருந்தாலும் இன்னும் புதிய புடவை ஆபரணம் வேண்டுமென்று தான் கூறுவார்கள்."

---

"ரயில் வண்டியில் ஏறும் போதும் உட்காரும் போதும் சண்டை சச்சரவு—இறங்கும் போது சமாதானம்—பிரிவு உபசாரம்."

வசந்தா கோபம் வந்ததுபோல் நடித்துத் தழுவவந்த கைகளை விலக்கி விட்டு "உங்களுக்கு எப்பொழுதும் பரிகாசம்தான். என் தொண்டை ஏன் வறண்டுபோகும்? நான் சின்னக் குழந்தையா தாய்ப்பால் குடித்துக்கொண்டே இருக்க?"

"சின்னக் குழந்தைகளாவது பரவாயில்லை. தாய்மாரை விட்டுச் சில தினங்கள் பிரிந்திருக்கும்."

"ஆமாம். அப்படித்தான். அவைகள் இருக்கும். நான் இருக்கமாட்டேன். நான் போகிறேன்."

இதைக் கேட்டவுடன் சுந்தரம் வழி மறித்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு "வசந்தா!" இப்பொழுது போகவேண்டாம். இன்னும் சில நாள் சென்ற பின் போகலாம்" என்றான்.

"அத்தை போகும்படி உத்தரவு தந்துவிட்டார்கள். நான் இனி இருக்க மாட்டேன்."

அப்படியானால் நான் சொன்னபடி இங்கே இருக்கமாட்டாயா? உண்மை தானா? நான் உனக்கு ஒன்றுக்கும் வேண்டாமே?

"ஐயோ! இதென்ன? அப்படி நினைத்துவிடுகிறீர்கள்? நீங்கள் எப்பொழுதும் விபரீதமாகவே நினைத்துக் கொள்ளுகிறீர்கள்!" அம்மாவைப் பார்க்க அதிக ஆசையாய் இருப்பதால் தானே போய்வருகிறேன் என்றேன். நான் போய் வரட்டுமா?"

"......................................."

"என்ன? ஒன்றும் பேசாதிருக்கிறீர்களே?"

"என்னை என்ன பேசச் சொல்லுகிறாய்?"

"போய் விட்டுவா என்று சொல்லுங்கள்."

"..........................................."

"என்ன ஊமையா?"

ஆனால் போய்விட்டு நாளைக்கு வந்துவிடுவாயா? நாளைக்கே வருவதாகச் சத்தியம் செய்."

"உம். அது எப்படி முடியும்? போனதும் திரும்பினால் எல்லாரும் என்ன சொல்லுவார்கள்."

"சரி. உன் இஷ்டப்படி செய். எத்தனை தினங்களானாலும் இரு. நான் ஒன்றும் வாய்திறக்கவில்லை. போ" என்று சற்றுக் கோபத்தோடு வெளியில் போக, வசந்தா "சரி, சரி, உங்களுக்கேன் இவ்வளவு கோபம்? நான் போகவில்லை."

"இல்லை. போ. போ. நீ அவ்வளவு தியாகம் செய்யவேண்டிய அவசியம் என்ன வந்துவிட்டது? உன் சந்தோஷத்திற்கு நான் ஏன் தடையா

---

"ஒருவன் தன் காதலியை அடையும் வரையில் இருக்கும் பிரியம் அடைந்துவிட்டால் இருப்பதில்லை."



யிருக்கவேண்டும்? நான் இல்லாவிட்டால் உனக்கு எந்தச் சங்கடமும் இருக்காதல்லவா?" என்று சொல்லும்போது வசந்தா தன் உள்ளங் கையால் காதலனது வாயை மூடி ஐயோ! நீங்கள் ஏப்பேர்ப்பட்டவர்கள்? இனி நான் போகவில்லை; இப்பொழுதேனும் சமாதானம் அடையுங்கள்."

"போதும், போதும் என்மீதுள்ள அன்பு! பயணத்திற்குத் தயாராகி விட்டு ஏன் அதை நிறுத்துகிறாய்? போய்வா. ஆனால் சீக்கிரம் வரவேண்டும்."

"நீங்கள் கோபத்தோடு சொல்லவில்லை யல்லவா?"

"இல்லை. கோபமில்லை. போய்வா" எனச் சிரித்தான் சுந்தரம்.

வசந்தா சிறிது நேரம் அப்படியே நின்றிருந்து விட்டுப் பின்பு கணவன் கைகளைப் பிடித்து ஒரு முத்தங் கொடுத்துவிட்டுப் பிறந்த அகம் சென்றாள்.

சுந்தரம் வசந்தா போவதைக் கண்மறையும் வரை பார்த்துவிட்டு உள்ளே சென்று அவளை இனிமேல் எப்படியேனும் தாய் வீட்டுக்கு அடிக்கடி போகாமற் செய்யவேண்டும் என்று ஏதேதோ ஆலோசனை செய்த பிறகு, ஒரு முடிவுக்கு வந்தான்.

***

வசந்தா இரண்டு வாரத்தில் திரும்பி வீட்டிற்கு வந்தாள். மாமியாராகிய சாரதாம்பாள் ஆச்சர்யத்தோடு "வசந்தா! இது என்ன ஆச்சரியமாயிருக்கின்றது? இவ்வளவு விரைவில் வந்துவிட்டாயே! தாயார் உன்னை இவ்வளவு சீக்கிரம் அனுப்பிவிட்டதா? என்ன!" என்று கேட்டாள்.

வசந்தா வேறொன்றும் பேசாமல் "ஆமாம். அங்கே என்ன வேலை?" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றாள். சாரதாம்பாளும் ஏதோ வேலை மீது ஞாபகமாகப் புழக்கடைப் பக்கம் போய்விட்டாள்.

சந்திரா, "அண்ணி! ஏது இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டது? என்ன சங்கதி? உன் முகம் வாடியிருக்கிறதே? அண்ணாவோடு சண்டையா என்ன?"

"உங்கள் அண்ணா முகத்தைக் கண்டிருந்தாலல்லவா சண்டைக்குச் சந்தர்ப்பம் வரும்."

"என்ன அண்ணி! அவர் ஒரு நாள்கூட உங்கள் வீட்டிற்கு வரவில்லையா?"

"வாராதினால்தான் நான் இவ்வளவு சீக்கிரம் வர நேர்ந்தது."

"சரிதான்! நல்ல வேலை செய்தாய்! ஆனால் அவர் எங்கு போயிருப்பார்? நீ போனதிலிருந்து இரவு பன்னிரண்டு மணிக்குமுன் வீட்டுக்கு வருவதில்லையே. எப்பொழுதும்போல் உங்கள் வீட்டுக்கு வந்திருப்பாரென்றே நாங்கள் எண்ணியிருந்தோம்."

---

"உலக ஜீவராசிகளில் எல்லாவற்றிலும் சிறந்தது மனித ஜென்மந்தான் என்றார் பெரியார். நாயினும் கடையே னென்றார் மற்றோர் பெரியார். இரண்டும் சரிதான்."

இவ்வார்த்தைகள் காதிற் பட்டமாத்திரத்தில் வசந்தாவுக்குத் துக்கம் அதிகரித்துவிட்டது. துக்கம் தொண்டையை அடைக்க மெதுவாக "ஒருநாளேனும் அங்கு வரவே இல்லை" என்று சொன்னாள்.

சந்திரா தனக்குள்ளாகத் தன் அண்ணு இரவில் அவ்வளவு நேரம் எங்கே போயிருக்கக்கூடும் என்று எண்ணிக் கொண்டே, அதைக் குறித்துப் பேசினால் வசந்தாவுக்குத் துன்பம் அதிகரிக்குமென்று பேசாதிருந்துவிட்டாள்.

வசந்தாவின் உள்ளத்தில் துன்பம் நிறைந்துவிட்டது. அவளால் ஒன்றும் செய்யமுடியவில்லை. தலைபாரத்தால் படுக்கைக்குச் சென்றாள்.

சுந்தரம் பன்னிரண்டு மணிக்கு வீடு சேர்ந்து கீழே படுத்திருக்கும் தன் மனைவியைப் பார்த்தும் பேசாமல் தன் படுக்கையில் படுத்துக்கொண்டான்.

சற்று நேரம் இருவரும் மௌனம் சாதித்தனர். பின்பு வசந்தா "நீங்கள் என் எங்கள் வீட்டுக்கு ஒரு தடவைகூட வரவில்லை?" என்று கேட்டாள். அதற்குச் சுந்தரம் "நான் வரவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? அப்படி ஒன்றும் இல்லாததால் வரவில்லை." என்று ஒரு தினுசாய்ப் பதில் தந்துவிட்டு மௌனமாயிருந்தான். வசந்தா தன் காதலனிடமிருந்து இவ்வளவு அலக்ஷியமான பதிலைக் கேட்டது இதுவே முதல் தடவை. கொடுமையான அவ்வார்த்தை கூரிய அம்பைப்போல் வசந்தாவின் இருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. அத்துன்பத்தை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, கண்களினின்றும் வழியும் நீர்த்தாரைகள் தன் மார்பை நனைக்க "ஆனால் இரவு இவ்வளவு நேரமாகியும் வீட்டுக்கு வராமல் எங்கே போயிருந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"உனக்கேன் அந்தக் கவலை? நான் எங்கே போவேன். மதனவல்லி வீட்டுக்குப் போயிருந்தேன். அழகிலும், சங்கீத ஞானத்திலும், பேச்சிலும் அவளுக்கு நிகரானவர்கள் யார்? அவளுடைய சாரீர சம்பத்தே சம்பத்து! அவளுடைய குரலில் அமிர்தம் சொட்டும். அவளுடைய வீட்டுக்குப் போய்விட்டு வந்தேன்."

இவ்வார்த்தைகள் வசந்தாவின் இருதயத்தைப் பிளந்துவிட்டன. எனினும் தன் காதலன் அவ்விதம் நடக்கும் தன்மை உள்ளவன் அல்ல என்றும், அவ்வளவு குறுகிய காலத்தில் அவ்வாறு மாறமாட்டானென்றும், வேண்டுமென்றே கற்பித்துக் கூறித் தன்னைப் பரீக்ஷிக்கவே அவ்வாறு சொல்லுகிறான் என்றும் எண்ணினாள். என்றாலும் அவள் மனம் கேட்கவில்லை.

"எனக்குக் கோபம் வரவேண்டுமென்று இப்படிச் சொல்லுகிறீர்கள்—இல்லையா?"

"கொஞ்சம் கூடப் பொய் இல்லை. முழுதும் உண்மையே. நீ வேணுமானால் இதெல்லாம் கனவென்றெண்ணிக்கொள். அப்படி நினைத்துக்கொள்வது தான் நல்லது."

---

"கிறிஸ்தவர் நம்மை அஞ்ஞானிகள் என்கிறார்கள். மகமதியர் நம்மை காபிரிகள் என்கிறார்கள். நாம் அவர்களை அப்படிக் கேவலப் பெயரிட்டழைப்பதில்லை. இதுதான் இந்துக்களின் பெருந் தன்மை."



வசந்தாவுக்கு உண்மையில் சந்தேகம் அதிகரித்துவிட்டது. உடனே "நீங்கள் என் அங்கேபோகிறீர்கள்? இனிமேல் போகக்கூடாது. நாளையோடு போவதில்லை என்று சொல்லுங்கள்" என்று வேண்டினாள்.

"நான் என் அப்படிச் சொல்லுவேன்? ஒரு நாளும் அவ்விதம் சொல்லமாட்டேன். நான் என் அங்கே போகக்கூடாது? நீ இல்லாவிட்டால் என்னால் சந்தோஷமாகக் காலங்கழிக்க முடியுமா? முடியாதா? நீ சதா சர்வ காலமும் உன் தாயார் வீட்டுக்கே ஓடிப்போகும்போது நான் அவளிடம் போவதில் குற்றம் என்ன வந்தது? நீயே சொல் பார்க்கலாம். உன்னைத் தாயார் வீட்டுக்குப் போகாதே என்று இனி நான் சொல்லமாட்டேன். இனிமேல் நீ எத்தனை தடவை வேணுமானாலும் போய்க்கொள்ளலாம். இஷ்டம்போல் இருந்துவிட்டு வரலாம். எவ்விதத் தடங்கலும் இல்லை. போதும் இதோடு உன் பிரசங்கத்தை நிறுத்திவிடு. இரவு நெடுநேரமாகி விட்டது நான் தூங்க வேண்டும்."

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் தாங்கமுடியாத துக்கத்தோடு வசந்தா தன் கணவன் அருகே சென்று இனி நீங்கள் அங்கே போகக்கூடாது! போகவில்லை என்று தயவு செய்து சொல்லுங்கள். அப்படிச் சொல்லமாட்டீர்களா?" என்று மன்றாடினாள், தூங்குவதுபோல் நடிக்கும் தன் காதலனைப் புரட்டினாள்; தள்ளினாள். சுந்தரம் கோபமாக "அப்படிச் செய்யவேண்டாம். எனக்குத் தொந்தரவாயிருக்கிறது. உனக்கேன் இவ்வளவு கவலை? நான் உனக்கு எதற்காக வேண்டும்? நான் உனக்கு வேண்டியவனாயிருந்தால், நீ அத்தனை தடவை போகிறேன், போகிறேன், என்று தாய் வீட்டிற்குப் போவாயா? இப்பொழுது என் போக்கும் குணங்களும் மாறிவிட்டன. நான் அப்பெண்மணியின் வீட்டுக்குப் போகாதிருக்க முடியாது. மதனவல்லி என்னை விட்டுப் பிரியாள். என் பிரிவைச் சகிக்காது உயிரையுங்கூட விட்டுவிடுவாள். அப்படியிருக்கும்போது நான் எவ்விதம் போகாதிருக்க முடியும்?" என்று சொல்லிவிட்டுச் சுந்தரம் கண்களை மூடிக் கொண்டான்.

வசந்தா கீழே கற்சிலையைப் போன்று அப்படியே அசையாது உட்கார்ந்துவிட்டாள்; அவள் விடும் பெருமூச்சிலிருந்து உயிர் அப்படியே வெளிப்பட்டுவிடும்போல் தோன்றிற்று. அவள் மனம் மிகவும் கலவரம் அடைந்துவிட்டது. "அது சாத்தியமா? நான் காதலனைத் தெய்வம்போல் பாவித்திருக்கின்றேன். இவ்வளவு விசுவாசமுள்ள என்னை வெறுத்துவிட்டு அநாசாரம் பிடித்த ஒரு தாசி வீடு போகும்படியான காரியம் செய்வாரா? அவர் அவ்வாறு செய்வதற்கு நான் என்ன குற்றம் செய்தேன்? நான் அடிக்கடி தாய் வீட்டிற்குச் செல்லும் குற்றம் தவிர வேறு என்ன இருக்கிறது? அதுவும் அவர் தினம் தவறாது வீட்டுக்கு வந்துகொண்டிருந்ததாலல்லவா நான் அவ்விடம் அவ்வளவு நாட்கள் தங்குவது? அப்படி இல்லாவிட்டால் நான் அத்தனை நாட்கள் தங்குவேனா?" என்று பலவாறு நினைத்து நினைத்துக் கண்ணீர் விட்டுக்

---

"புஸ்தகம் எழுதிக் கொடுப்பவர்களை ஏமாற்றி விடலாமென்பது பல அச்சிடுபவர்களது எண்ணம். ஆனால் ஏமாற்றினவர்களை ஆசிரியர்கள் எந்தப் புஸ்தகத்திலும் எழுதிக்கொண்டே வருவார்கள். அப்படியே நன்மை செய்தவர்களுக்கும்."

கொண்டே யிருந்தாள். சுந்தரம் மெதுவாக அவளைப் பார்த்துத் தனக்குள்ளே சிரித்துக் கொண்டே படுத்துக்கொண்டிருந்தான்.

* * *

பொழுது புலர்ந்தது. கதிரவன் தனது கிரணங்களாகிய கரங்களைப் படுக்கை அறைக்குள் சாளரத்தின் வழியே செலுத்தி, இரவெல்லாம் மனோ வியாகூலத்தால் வேதனையடைந்து அப்பொழுதுதான் சற்றே கண்ணயர்ந்த வசந்தாவை எழுப்பினான்; இரவில் நடந்ததெல்லாம் ஒரு கனவுபோல் தோன்றியது வசந்தாவுக்கு.

சுந்தரம் இன்னும் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து, வசந்தா அவன் முகத்தைக் கண்ணிமையால் அப்படியே சிறிது நேரம் கூர்ந்து நோக்கினாள். தன் காதலன் அவ்வாறு செய்வானா என்னும் சந்தேகம் இன்னும் அவளை விட்டு நீங்கவில்லை. சுந்தரமும் அப்பொழுதுதான் எழுந்து உட்கார்ந்தான். வசந்தா மெதுவாக அவனை அணுகி, "இரவு முழுதும் நீங்கள் வெறுங் கட்டுக் கதையால் என்னைப் பயப்படுத்திவிட்டீர்கள் அல்லவா? நீங்கள் சொன்னதெல்லாம் முழுப் பொய்தானே" என்று கொஞ்சும் மழலையில் கேட்டாள்.

சுந்தரம் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு "நான் சும்மா சொல்லிக்கொண்டே இருக்கமாட்டேன். நீ நம்பினால் நம்பு—நம்பாவிட்டால் விட்டுவிடு" என்று சொன்னான்.

வசந்தா பின்னும் பக்கத்தில் நெருங்கி "சரி, என் தலையைத் தொட்டு நீங்கள் சொல்வது மெய்தான் என்று சொல்ல வேண்டும்" என்று கேட்டாள்.

சுந்தரம் அவள் புஜத்தைத் தொட்டு "நான் சொன்னதெல்லாம் உண்மைதான்" என்றான். வசந்தா இனி நம்பாது என்ன செய்வாள் பாவம்! பொங்கிவரும் துக்கத்தை அடக்கிக் கொண்டு அவ்வறையை விட்டுக் கூடத்திற்குச் சென்றாள். அங்கிருந்த சந்திரா, வசந்தாவின் துக்கமான முகத்தைக் கண்டு பிரமித்து "அண்ணீ! ஏன் உன் முகம் இருளடைந்து கிடக்கிறது? இன்னும் தலைவலி நீங்கவில்லையா?" என்று கேட்டாள். வசந்தா அதற்கொன்றும் பதில் பேசாது குளிக்கும் அறைக்குப் போய்விட்டாள். இவள் சந்திராவிடம் ஒருநாளும் இவ்வாறு நடந்து கொண்டதில்லை. இதற்கு என்ன காரணமாயிருக்கலாமென்று சந்திரா எண்ணத் தொடங்கினாள். சாரதாம்பாளும் வசந்தாவின் துக்கத்தை மாற்ற எவ்வளவு முயற்சித்தும், கேட்டும் பயனொன்றும் விளையவில்லை. வசந்தா சரியான காரணம் ஒன்றுமே சொல்லவில்லை. உடம்புக்கு என்னமோ அசௌக்கியம்போ லிருக்கிறது என்று பேசாதிருந்துவிட்டார்கள்.

* * *

அன்றும் சுந்தரம் பன்னிரண்டு மணிக்குத்தான் வீடுவந்துசேர்ந்தான். வந்தவன் மேஜைமீது ஒரு அழகிய சிறு பெண்ணின் போட்டோ படமொன்றை

"ரயிலிலும் தபாலாபீஸிலும் பத்து ரூபாய் சம்பளம் வாங்கும் வேலைக்காரன் எவ்வளவு பெரிய மனிதன் வெளியே இருந்தாலும் அலக்ஷியமான பதில்தான் சொல்வான்."



ஒரு புத்தகத்திற்குள் வைத்துவிட்டுப் படுத்துக்கொண்டான். வசந்தாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. ஏதேனும் ஒரு புஸ்தகத்தையாவது படிக்கலாம் என்று மேஜையைச் சமீபித்தாள். அப்பொழுது அப்படம் கண்ணில் தென்பட்டது. "இனி என்ன! எல்லாம் நன்றாய் விளங்கிவிட்டது. காதலன் சொன்னது முழுதும் உண்மைதான்" என்று சொல்லிக்கொண்டு ஒரு கடிதத்தில் ஏதேதோ எழுதினாள். சற்று யோசனையில் ஆழ்ந்து இருந்துவிட்டு அக்கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித் தெறிந்துவிட்டாள். மெதுவாக வெளியே எழுந்து சென்றாள்.

* * *

நல்ல நடுநிசி. ஓர் பெரிய சப்தம் வீட்டிலுள்ளாரனைவரையும் எழுப்பிவிட்டது. சுந்தரம் விழித்துப் பார்க்க வசந்தா காணப்படவில்லை. அவனது இருதயம் பயத்தால் படபட வென்று துடித்தது. எங்கு தேடியும் வசந்தாவைக் காண முடியவில்லை.

அதற்குள் வீட்டுக் காவற்காரன் "ஐயோ! என் செய்வேன்! அம்மா மாடிமேலிருந்து கீழே விழுந்துவிட்டார்கள்." என்று கூச்சலிட்டான். எல்லோரும் அவ்விடத்திற்கு ஓடினார்கள். வசந்தா ஸ்மரணை யற்று அங்கே கிடந்தாள். உடனே டாக்டர் ராமராவுக்கு ஆளனுப்பினார்கள். உடனே ராமராவும் மனைவியோடு விரைவில் வந்து சேர்ந்தார்.

சாரதாம்பாளும் வசந்தாவும் பலமாக அழ ஆரம்பித்தார்கள். டாக்டர் அவர்களுக்குச் சமாதானம் கூறி, வசந்தாவின் காயங்களைப் பரிக்ஷித்துவிட்டு "மிகவும் அபாயமான காயங்கள் ஒன்றும் படவில்லை. இருந்தாலும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்று சொன்னார்.

உடனே வசந்தாவை ஓர் அறையில் படுக்கவைத்தார்கள். சந்திராவும் ராமராவின் மனைவியும் துணையாக இருந்து உபசரித்துக்கொண் டிருந்தார்கள்.

* * *

மறுநாள் வசந்தாவுக்குச் சிறிது உணர்வு வந்தது. தன் எதிரே உட்கார்ந்திருந்த டாக்டரின் மனைவியைப் பார்த்து "நீ யார்? நீயா? அமாம்

"தபால்காரனுக்கு இருக்கும் கவுரவம் மற்றயாருக்கு மில்லை"

அவள்தானா நீ? எதற்காக இங்கே வந்தாய்? இன்னும் இரண்டு மூன்று தினங்கள் பொறுக்கக் கூடாதா? நான் சாகும்வரை பொறுத்திரு. பிறகு உன் இஷ்டம்போல் செய். இப்பொழுது வெளியே போய்விடு. உம். போ. போ'' என்று சொல்லிக் கொண்டே திரும்பவும் ஸ்மரணை பறறுப் படுத்துக் கொண்டாள்.



சந்திரா இவ்விபரீத மொழிகளைக் கேட்டு ஏதோ கலவரத்தால் இவ்விதம் பேசுகிறாள் என்று எண்ணி "அண்ணீ! என்ன இது? உனக்கு அடையாளம் தெரியவில்லையா என்ன? இங்கிருப்பது நம்ம டாக்டர் வீட்டு அம்மா அல்லவா'' என்று கேட்டாள். வசந்தா பதில் கொடுக்கவில்லை.

சுந்தரம் அங்கு வந்தான். உடனே சந்திரா முதலிய பெண்கள் வெளியே போய்விட்டார்கள். சுந்தரம் வசந்தாவின் அருகே உட்கார்ந்து அவளை இமைகொட்டாது பார்த்தான். வசந்தா கண்களைத் திறந்தாள். வெளுத்துப் போன அவர் முகத்தைக் கண்டாள்.

சுந்தரம் அவள் பேசுவதற்கு முந்தியே "வசூ! நீ என்ன வேலை செய்து விட்டாய்? ஏன் இப்படிச் செய்தாய்?'' என்று கண்ணீர் ததும்பக் கேட்டான்.

வசந்தா "நான் ஏன் அப்படிப் செய்யக்கூடாது? இதைவிட வேறு லக்ஷியம் எனக்கு ஏது? தன் காதலனது காதலை இழந்துவிட்ட ஓர் பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்? ஜீவ நாடி இழந்த பின் உயிர் வாழ்வதெப்படி? அச்சரீரம் இனி பூமிக்குப் பாரம்தானே என்று எண்ணி உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்தேன்'' என்று புன் முறுவலோடு பதில் தந்தாள்.

"உன்னை விடுத்து நான் இன்னொருத்தியைக் காதலிப்பேன் என்று நீ உண்மையாக நம்பிவிட்டாயா?''

"உண்மையாக நான் நம்பவில்லை. ஆனால் நீங்கள் நம்பும்படி செய்துவிட்டீர்கள்.''

"வசூ! நானே பெரிய குற்றவாளி. நான் வெறுங் கட்டு வார்த்தையைத்தான் சொன்னேன். உன் தாயார் வீட்டுக்குச் சும்மா அடிக்கடி போகாமல் தடுக்கவே அவ்விதம் சொன்னேன். நான் இரவு அவ்வளவு நேரம் நமது டாக்டரின் வீட்டுக்குச் சென்று சம்பாஷித்துக்கொண்டிருப்பேனே தவிர வேறெங்கும் போகமாட்டேன். என்னை மன்னிக்கவேணும்'' என்று சுந்தரம் வருந்திக்கேட்டான்.

---

"கருடன் நிழல்பட்டல் நல்ல பாம்பு இறந்துவிடுமாம். ஆனால் நேரில் பார்த்தவர்களே கிடையாதாம்.''



அன்று பௌர்ணமி. சந்திர கிரணம் சாளரத்தின் வழியாய்ச் சந்திராவின் அழகிய முகத்தின் மீது பிரகாசித்துக் கொண்டிருந்தது. வசந்தாவின் உதடுகள் சிவந்து பள பள வென்று மின்னின. அவற்றின் மீது புன்முறுவல் தாண்டவமாட "அப்படியானால் மதனவல்லி என்னும் பெண் இல்லையா'' என்று கேட்டாள்.

சுந்தரம் புன்முறுவலோடு மதனவல்லி என்னும் பெண் இருக்கின்றாளோ என்னமோ எனக்குத் தெரியாது. அப்படி யிருந்தாலும் பிரமாணமாகச் சொல்லுகிறேன். அவளோடு எனக்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது. வசூ! அப்படத்தை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லையே உன்னால்! அது உனது இளமையில் எடுத்த படமல்லவா'' என்றான்.

வசந்தா வெட்கமடைந்து சுந்தரத்தை அப்படியே ஆலிங்கனம் செய்து தன் முகத்தை அவனது மார்பின்மீது வைத்து மறைத்துக் கொண்டாள்.

## நமது கடமை.

பிறநாட்டவர் பல்வேறு புதுமை கண்டு நம் நாட்டை ஓர் வியாபாரக் களமாக்கி நம்மை சாசுவத அடிமையாக்குகின்றனர். நாமோ பல்வேறு சத்திரஞ் சாவடி முதலியவைகளை உற்பத்தி செய்து நன்றாகத் தொழில் செய்துகொண்டுவரும் பல பலம் பொருந்திய மனிதர்களையும் சோம்பேறிகளாயும் பேடிகளாயும் தர்மத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் விர்த்திசெய்து வருகின்றோம்.

நமது பண்டைப் பெரியோர் எதைச் செய்திருப்பினும் அது எவ்வளவு மஹோன்னத நிலையிலிருந்திருப்பினும் இன்று எள்ளளவும் நமக்குப் பிரயோஜனமில்லை. நாம் அதை எண்ணுவதால் பயனுமில்லை. அதையே ஸ்மரிப்பதை விட்டு நாட்டின் நிலைமையை நினையுங்கள். நாட்டிற்கு ஏது வேண்டுமாயினும் பிற நாட்டை எதிர்பார்க்கும் நிலைமையில் நாம் சோம்பேறிகளாய் வாழ்வதை நினையுங்கள். நம் முன்னோர்கள் சொன்னார்களெனச் சொல்லாது அவர்கள் சொன்ன முயற்சியைச் செயலில் ஆற்றுங்கள். பல புதிய புதிய தொழிற்சாலைகளை நாட்டுங்கள். ஒற்றுமையைக் காட்டுங்கள். நாட்டின் விடுதலையை ஈட்டுங்கள். அதுவே நலம். அம்முயற்சியே உங்களை முதன்மையாக்கும்.

"நவமணி."

---

"நல்லவர்கள் பகையிருந்தாலு மிருக்கலாம் கெட்டவர்கள் சிநேக மிருக்கப்படாது."




# கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(398-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

ஆனந்தஸிங் உடனே திரும்பி பிச்சன் நுழைய விருந்த அவ் வீதியி லுள்ள வீட்டை நோக்கித் துரிதமாய்ச் சென்றதும் மணியடிக்கும் கயிற்றைப் பலத்தோடு பிடித் திழுத்தான். ஒரு நாணயமும் பெருந்தன்மையும் உடையவளைப் போன்ற ஒரு மாது வந்து கதவைத் திறந்தான்.

ஆனந்த:—கிட்டு என்ற ஒரு ஆள் இங்கு வசிக்கிறானா?

ஆனந்தஸிங் ஏதோ பெரிய ஆபத்து வந்துவிட்டதுபோல் பெருமூச்சு விட்டுக் கொண்டே கேட்டான்.

அம்மாது:—அவனை யார் கூப்பிடுகிறது?

அச்சமயம் ஆனந்தஸிங் மேல் மாடியிலிருந்து எட்டிப் பார்க்கும் ஒரு சிரசைச் சாடையாய்ப் பார்த்தான். முதல் பேசிய மாதிரியாகவே, "முனிஸிபால்டி ஆஸ்பத்திரியில் ஒரு மனித னிருக்கிறான். அவன் பெயர் பிச்சன் என்று கூறுகின்றான். எந்நேரமும் கிட்டு கிட்டு என்று கத்துகிறான். அவன் முதலில் மேட்டுத் தெருவி லிருக்கும் ஒரு வீட்டிற் கனுப்பினான். அங்கு போய்ப் பார்த்தேன். அங்கு யாருமில்லை யென்று போய்க் கூறியபின், இந்த வீட்டின் அடையாளத்தைக் கூறினான். அவன் இறந்து விடுந் தருவாயி லிருப்பதாய்த் தோன்றுகிறது" என்றான்.

"அவனுக் கென்ன தீங்கு?" என்று மாடிமேல் இருந்து கீழே யிறங்கி வந்த கிட்டு கேட்டான்.

ஆனந்த:—அவன் அபாயகரமாய்க் கத்தியால் குத்தப்பட் டிருக்கிறான்.

கிட்டு:—யார் குத்தியது?

ஆனந்த:—அவன் தானே செய்து கொண்டதாய்க் கூறுகிறான். ஏனெனில் தன் பெண்ணே தனக்கு விரோதமாய்த் திரும்பி விட்டாள் என்று கூறுகிறான்.

கிட்டு:—அவன் வைத்திய சாலைக்கு எப்படி வந்தான்?

ஆனந்:—எப்படி வந்தானோ எனக்குத் தெரியாது. நீங்கள் யாரும் போக மாட்டீர்களோ? நான் காத்திருக்க முடியாது. என் வேலை முறை முடிந்து விட்டது. நான் வீட்டிற்குப் போகவேண்டும்.

கிட்டு:—ஒரு சமயம் நான் போவேன்.



ஆனந்:—"அவன் நீ வராததா யிருந்தால் இன்னொரு சங்கதி கூறச் சொன்னான். அதாவது: தான் முக்கியமாய் அப் பெண்ணின் விஷயமாய் ஏதோ கூற வேண்டுமாம். நீ வாராவிட்டால் எல்லா சங்கதிகளையும் டாக்டரிடம் கூறிவிட்டால்தான் அவன் மனம் நிம்மதியா யிருக்குமாம். இவ்வளவே சங்கதி. பிறகு போவதும் போகாம லிருப்பதும் உங்கள் பிரியம். வந்தனம், நான் போய்வருகிறேன்" என்று கூறி விட்டுப் படிகளில் இறங்கித் துரிதமாய்ச் சென்றான்.

வீதியில் மறைந்திருந்து கிட்டு வெளியில் சென்று கதவு மூடப்பட்டதே மறுபடி அவ் வீட்டிற்குச் செல்லவே அப்படி தந்திரம் செய்தான்.

ஆனந்தஸிங் அவ்வீட்டின் எதிரிலேயே மறைந்திருந்தான். அவன் கோரியபடி சற்றுநேரத்திற்குள் கிட்டு வீட்டிலிருந்து வெளிவந்தான்.

அதற்குள் ஆனந்தஸிங் தன் உடைகளைத் திருப்பி யணிந்துகொண்டு சாதாரண கூலியாளா யிருந்ததுபோய் ஒரு மரியாதையும் சுறு சுறுப்புமுடைய மனிதனாய் விட்டான்.

கிட்டு பாதை வழியே வைத்தியசாலையை நோக்கிச் சென்றதே, ஆனந்தஸிங் மறுபடி யவ் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டி, அம்மாது வந்து கதவைத் திறந்ததே, "ஏனம்மா முனிஸிபல் ஆஸ்பத்திரியி லிருந்து ஒரு வேலைக்காரன் இங்குள்ள கிட்டு என்பவருக்குச் சமாசாரம் கூறினானா?" என்றான்.

அம்மாது:—"ஆமாங்கோ அய்யா. ஐந்து நிமிஷங்களுக்கு முன்புதான் வந்தான். கிட்டு இப்போதுதான் ஆஸ்பத்திரிக்குச் சென்றார்" என்றான்.

ஆனந்த:—அந்தப் பயல் எந்நேரம் பொறுத்தோ இங்கு வந்திருக்கிறான். நோயாளி பாவம் "ஐயோ என்னை அனாதையாய் விட்டு விட்டார்கள்—" என்று கூறிப் பிறகு மிக்க கோபமடைந்து "ஆகட்டும் நான் பூரணமாய் வஞ்சந் தீர்த்துக் கொள்வேன்" என்று கத்துகிறான். அவன் மனம் சரியான நிலைமையி லில்லைபோல் தெரிகிறது. அவன் பயங்கரமான பிரமாணிக்கங்கள் செய்கிறான். ஒருவேளை சற்று நிதானமா யிருக்கையில் என் மனைவி வர வில்லையா? குள்ளன் வர வில்லையா? முனியன் வர வில்லையா? என்று கேட்கிறான். அவர்கள் வராவிட்டால் ஆகட்டும் என்று பயங்கரமான வார்த்தைகளைக் கூறுகிறான். அவன் மனதில் ஏதோ வைத்துக் கொண்டிருக்கிறான் என்று நன்றாய்த் தெரிகிறது. அவர்கள் வராவிட்டால் அவர்கள் அழும்படி செய்வேன் என்று பயங்கரமான பிரமாணங்களைச் செய்கிறான். தாங்கள் யாரோ—கிட்டு என்பவர் மனைவியோ என்று சந்தேகம்........

அம்மாது:—ஆம் ஐயா.

இக்கேள்வியை ஆனந்தஸிங் தற்செயலாய்க் கேட்டான். ஆயினும் அவள் கொடுத்த விடை அவனுக்கு மிக்க சந்தோஷத்தை யளித்தது.

அவன் அம்மாதை நோக்கி,

"அவன் காண விரும்புகிற அம் மனிதர்கள் எங்கிருக்கிறார்கள். ஏனெனில் அதற்காகவே நான் வந்தேன். அவன் பாபம் இறந்து போகிற நிலையி லிருப்பதால் அவன் எண்ணங்களைத் திருப்தி செய்ய வேண்டு மென்பது என் விருப்பம்" என்றான்.

---

"பெண்கள் குற்றம் செய்தால் ஆண்களுக்கு உடனே தோன்றிவிடும்—ஆண்கள் தாங்கள் செய்யும் குற்றத்தைக் கவனிப்பதில்லை."

அம்மாது:—அவர்கள் இருப்பிடம் எனக்குத் தெரியும் வேண்டுமானால் அவர்களுக்கு ஆளனுப்பித் தெரிவிக்கிறேன்.

ஆனந்த:—'மிக்க வந்தனம். அப்படியானால் நான் அவர்களுக்காக இங்கு காத்திருக்க வேண்டாம். ஏனெனில் நான் மறுபடி வைத்தியசாலைக்கே செல்ல வேண்டும்'' என்று கூறிவிட்டுத் துரிதமாய் அங்கிருந்து திரும்பி விட்டான்.

அவன் மறுபடி வீதியில் மறைந்திருந்தபோது சற்று நேரத்திற்குள் மங்கம்மாளும் முனியனும் வீட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வதைக் கண்டான். உடனே தன் மாறுவேடத்தைச் சற்று வேறுமாதிரியாய் மாற்றிக்கொண்டு மூன்றாந்தரம் மறுபடி கதவைத் தட்டினான். அதே தடித்த மாது சற்று ஆயாசமடைந்த முகத்தோடு வந்து கதவைத் திறந்தாள்.

ஆனந்த:—குள்ளன் இங்கிருக்கிறானா?

அம்மாது:—குள்ளனா? யார்?

ஆனந்தலிங் சந்தேகத்தோடு அவள் முகத்தை நோக்கி, ''ஓ! நான் பிசகாய் வந்து விட்டேன்'' என்று சட்டென்று திரும்பிச் செல்பவன்போல் அபிநயம் செய்தான்.

அம்மாது:—''இரு, அவசரப்பட வேண்டாம்; குள்ளனை ஏன் காண வேண்டும்'' என்றாள்.

ஆனந்த:—நான் குள்ளனை நன்றா யறிவேன்.

அம்மாது:—அப்படியாயின் அவன் கூட்டாளிகள் யார் கூறு பார்ப்போம்.

ஆனந்த:—ஏன் பிச்சன் ஒருவன்.

அம்மாது:—சரியாகவே கூறினாய், அவனை வரவழைக்கிறேன்.

ஆனந்த:—அப்படியானால் நான் உள்ளேவந்து காத்துக்கொண்டிருக்கிறேன். அவன் வர எந்நேரம் பிடிக்கும்?

அம்மாது:—எப்போதோ தெரியாது, ஆனால் சீக்கிரத்திலேயே வருவான்.

ஆனந்த:—அப்பெண் இங்குதான் கொண்டுவரப்பட் டிருக்கிறாளோ?

இதைக் கேட்டதே அம்மாது திகிலடைந்து ஆத்திரத்தோடும் பயத்தோடும், ''என்ன பெண்ணா? எந்தப் பெண்?'' என்றாள்.

ஆனந்த:—இக்கதை யெல்லாம் என்னிடம் அளக்காதே. எனக்கு எல்லாச் சங்கதிகளும் ஆதியோடந்தமாய்த் தெரியும்.

இதைக்கேட்ட அம்மாது பின்னும் இடிவிழுந்து, நீ யார்? என்றாள்.

ஆனந்தலிங் அவள் மனதில் உண்டான கலவரத்தைக்கண்டு,

''நானா யார் என்கிறாய்? ஏன்? உன் புருடனுக்கும் மற்றக் கள்ளப் பயல்களுக்கும் இவ்வளவு தொந்திரவையும் கொடுத்த துப்பறிவன் நானறான். உனக்குச் சந்தேகமா யிருந்தால் இத் துப்பாக்கியைப் பார்த்தால் நான் எதற்கும் அஞ்சாத துணிகர முடையவ னென்று அதுவே தன் குழாய் வழியாய்க் கூறும்'' என்று தன் உள் சேபியி லிருந்த கைத் துப்பாக்கியை யெடுத்துக் காட்டினான்.

---

'' அப்போது தான் ரயிலில் கண்ட ஒருவரை ஒருவர் விசாரித்துக்கொள்வதால் பெரிய சம்பந்தங்கள் நேரிடுவதுண்டு.''

18-மாதங்கள் தூங்கிய மாது:—நாட்டிங்ஹாம் ஷையரைச் சேர்ந்த சுமார் 32-வயதுள்ள மிஸ். டோரிஸ் ஹிண்ட்டன் என்னும் மாது சமீபத்தில் இறந்துவிட்டாள். அவள் 1925ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஏதோ மயக்கங்கொண்டு தூக்கம் போல் விழுந்தவள் 18 மாதங்கள் அப்படியே இருந்து பிறகு சிறிது சௌக்கியம் அடைந்தாளாம். எனினும் இறுதியில் அதே வியாதியால் இறந்து விட்டாள்.

புற்களாலாகிய கடிகாரம் :—ஜர்மன் தேசத்தில் கடிகாரம் செய்வதில் நிபுணத்வம் வாய்ந்த ஒருவர், தன் 20 வருஷ ஆராய்ச்சிக்குப் பின் புற்களைக் கொண்டே முழுக்கடிகாரமொன்றைச் செய்திருக்கிறாராம். அதில் சிறிதும் உலோக சம்பந்தமில்லாமலிருந்தும் அது நன்றாக மணி காட்டுகிறதாம். அவர் பெயர் காரெல் ரெஸ்ட்னட் என்பதாகும்.

உலகில் பெரிய ஞாபகசக்தி யுடையவர் :—பல்கேரியா தேசத்தைச் சேர்ந்த காாடி மிட்ராப் என்பவர் உலகத்தில் எல்லாரையும்விட மிகப் பெரிய ஞாபகசக்தி யுடையவர் என்று தெரிகிறது. அவருக்கு விவாகமும் ஆகிக் குடும்பமும் இருக்கிறது. அவர் சிகரெட் பிடிக்கிறார். ஆனால் குடிப்பதில்லை. ஒருவர் அவர் எதிரில் 400 பேர்களின் பெயர்களைச் சொன்னார். உடனே அவர் அவற்றையெல்லாம் அப்படியே திருப்பிச் சொன்னார்.

நாய்களின் மாளிகை :—அமெரிக்காவைச் சேர்ந்த சிகாகோவிலுள்ள மாது ஒருத்தி தெருவில் அலையும் நாய்களின் சௌகரியத்துக்காகவெ 1700 பவுன் செலவு செய்து ஒரு மாளிகையை அமைத்துள்ளார். அதில் 150-நாய்கள் தங்கி யிருக்கலாம். அம் மாளிகையில் நாய்களுக்கு வேண்டிய சௌக்ரியங்களைக் கவனிப்பதற்காக இரு வேலைக்காரர்கள் வேலைசெய்து வருகின்றனர்.

முத்தத்தை அறியாதார்:-எஸ்கிமோ ஜாதியாரிடையே விவாகமென்பது தொழில் கூட்டாளிகள் இடையே யுள்ள சம்பந்தம் போலவே கருதப் படுகிறது. அவர்களிடையே காத முதலிய உணர்ச்சி கிடையாது. மு தமிடுவ தென்பதே இன்னதென அ சமூகத்தார் அறியார்கள்.

கண்ணியமுள்ள ஆங்கில மாது:—லண்டன் கடல் ஓரத்திலுள்ள சி வீடுகளில் சுமார் 82 வயதான எ மாலிஜன் ஹெல்ம் என்னும் மா வசிக்கிறார். அவர் சமுத்திரத்தி அடிக்கடி ஆபத்துக்குள்ளாகும் ஜன களுக்கெல்லாம் தன்னாலான உத செய்கின்றார். எந்த நேரத்தில் யா அவர் வீட்டைத் தேடிப் போனாலு அவர் மலர்ந்த முகத்துடன் உபசரி கிறார். சுவீடன் சர்க்கார் தரு சொற்ப பென்ஷனில் அந்த அம்மை யார் ஜீவிக்கிறார் என்றாலும் அதி பெரும் பகுதி துயரப்பட்டோருக்கே அளித்துவிடுகிறாராம்.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரமோதூதஞு தைமீ—கலியுகாதி 5032, சாலிவாகனம் 1853,
பசலி 1340, கொல்லமாண்டு 1106, ஹிஜரி 1349,
இங்கிலீஷ் 1931ஞு ஜனவரிமீ—பிப்ரவரிமீ

| தைமீ | ஜனவரிமீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | புதன் | ஏகா34-48 | அனு52-48 | சித்60 | சர்வ மத்வஏகாதசி, கரிநாள், சங்கராந்தி பண்டிகை |
| 2 | 15 | வியா | து35-33 | கே55-18 | பி55-18சி | கரிநாள், மாட்டுப்போங்கல் |
| 3 | 16 | வெ | திர37-18 | மூல58-43 | அ58-43பி | கரிநாள், மாச சிவராத்திரி |
| 4 | 17 | சனி | சது39-58 | பூரா60 | சித்60 | திருதினஸ்பிருக், மாடுவாங்க |
| 5 | 18 | ஞா | அ● 43-40 | பூரா3-0 | சித்3-0அமி | சர்வத்திர தை அமாவாசை |
| 6 | 19 | திங் | பிர48-15 | உத்8-18 | மர8-18அ | மாகசுத்தம் |
| 7 | 20 | செவ் | துதி53-48 | திரு14-30 | சித்60 | சந்திர தெரிசனம் |
| 8 | 21 | புத | திரி60 | அவி21-28 | பி21-28சி | திருதின ஸ்பிருக் |
| 9 | 22 | வியா | திரி0-10 | சத29-0 | மர29-0சி | மாச சதுர்த்தி விரதம் |
| 10 | 23 | வெ | சது6-55 | பூர36-55 | சித்60 | மதன பஞ்சமி, ஸ்ரீ பஞ்சமி |
| 11 | 24 | சனி | பஞ்13-43 | உத்44-38 | சி44-38மர | சஷ்டி; கரிநாள் |
| 12 | 25 | ஞா | சஷ்20-0 | ரே51-33 | அ51-33சி | சர்வ முகூர்த்தம் |
| 13 | 26 | திங் | சப்25-10 | அஸ்57-15 | சித்60 | ரதசப்தமி, மஹா சப்தமி |
| 14 | 27 | செவ் | அஷ்28-38 | பர60 | சித்60 | திருதின ஸ்பிருக் |
| 15 | 28 | புத | நவ30-8 | பர✕1-5 | சித்1-5அமி | கிருத்திகை, மாடு வாங்க |
| 16 | 29 | வியா | தச29-23 | கிரு2-53 | மர60 | கதிராறுக்க, கிருஷிபாரம்பம் |
| 17 | 30 | வெ | ஏகா26-30 | ரோ2-30 | மர2-30சி | சர்வ மத்வ ஏகாதசி, கரிநாள் |
| 18 | 31 | சனி | து21-33 | மிரு0-3 திரு55-43 | சித்60 | அவமாகம், பீஷ்ம துவாதசி, வாராஹ துவாதசி |
| 19 | 1931ஞு பிப்ரவரீ 1 | ஞா | திர14-55 | புன49-55 | சித்60 | விவாகம், பும்சவனம். கிரக பிரவேசம், சர்வமுகூர்த்தம் |
| 20 | 2 | திங் | சது7-0 ○58-15 | பூச43-8 | சித்60 | பௌர்ணமி, தைப்பூசம், புஷ்ய ஸ்நானம் |
| 21 | 3 | செவ் | பிர49-0 | ஆயி35-53 | சித்60 | |
| 22 | 4 | புதன் | துதி39-55 | மகம்28-30 | சி28-30அ | |
| 23 | 5 | வியா | திரி31-28 | பூரம்21-43 | சி21-43மர | |
| 24 | 6 | வெ | சது23-48 | உத்15-40 | சி15-40அ | |
| 25 | 7 | சனி | பஞ்17-18 | அஸ்10-50 | மர60 | |
| 26 | 8 | ஞா | சஷ்12-13 | சித்7-23 | சித்60 | |
| 27 | 9 | திங் | சப்8-53 | சுவா5-33 | அ5-33மர | |
| 28 | 10 | செவ் | அஷ்7-5 | விசா5-15 | மர5-15சித் | |
| 29 | 11 | புதன் | நவ6-53 | அனு6-33 | சித்60 | |

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | குரு |
| | 17-தனு-சுக் 24-மக-புதன் | | செவ் |
| சூரி | | | |
| சனி புத | சுக் | | கே |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS.

# ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும்.

(நான்காம் பதிப்பு.)

(ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவர் மனைவியாராகிய சாரதாமணி தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் உருவப் படங்களோடு கூடியது; உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது.)

*சாரதாமணி தேவியார் சரித்திரமும் சேர்க்கப்பட்டது; உயர்ந்த சீமை காலிகோ பைண்டுள்ளது;* **இதன் விலை ரூபா 1 12 0**

சில வருஷங்களுக்கு முன்னர் கல்கத்தாவிலே ஞானமே இரண்டு ஓர் உருவெடுத்தாற்போன்று தோன்றி, சகல வேதாந்த சாஸ்திரக் கருத்துக்களையும் ஓதாதுணர்ந்து, அறியாப் பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, 'இந்து மதமே அழிவற்ற மதம்' என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்துமதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்து மதத்தில் சேர்த்து, திக்குவிஜயஞ் செய்துவந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகளுக்கு இந்த இராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இங்ஙனம் அவர்க்கும் இவர் குருவாயிருந்தனரென்றால் இவருடைய மகிமை அளவிடற்கரிதாமென்பதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ; இவருடைய துறவைப்பற்றிய சரித்திரமோ மிகவும் அற்புதமானது. இவர் உலகப்பற்றைத் துறந்த உத்தமஞானி. இவர் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவராயிருந்தும் உயர்ந்த ஞானமார்க்கத்தை யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் விளங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பல விதமாக உபதேசித்திருக்கின்றார். அவையெல்லாம் பக்தி, ஞானம், மோக்ஷம் முதலிய பெரிய விஷயங்களை யெல்லாம் சுலபமாக விளக்கிக் காட்டக் கூடியவைகள்.

# பாரத வீரர்.

இது புண்ணிய பூமியாகிய பாரத தேசத்தில் மானம், குலம், கல்வி, பரோபகாரம், ஊக்கம் முதலிய மேன்மைபொருந்திய குணங்களிற் சிறந்து விளங்கிய நல் வீரர்களின் திவ்விய சரித்திரங்களைக் கொண்டது; இனிய செந்தமிழில், எளிய நடையில், யாவரும் மகிழ்ச்சியுடன் படித்தானந்திக்கும்படி எழுதப்பட்டது; முத்தைப்போன்ற அச்செழுத்துக்களில், 113 பக்கங்கள் கொண்ட கிரௌன் சைஸில், வெகு அழகாக அச்சிடப்பட்டது. மக்கள் உயர்தர ஒழுக்கங்களில் சிறந்து விளங்குவதற்கு இது ஓர் அனுகூலமான நூல். இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-1-31 வரை விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

வெட்டுக்காயம், எரி ரணங்கள் எவ்வளவு அற்பமாயினும் சரி, உடனே 'வாஸிலேன்' ஜெல்லியை உபயோகிக்கவும்.

**வாஸிலேன்** ஜெல்லி விரைவில் குணம் செய்கிறது. கட்டுகளில் இதை உபயோகிப்பதால் கட்டு அவிழ்க்கும்போது ரணத்தின்மீது ஒட்டிக்கொள்ளாது. எப்போதும் ஒரு ஜாடி கைவசமிருக்கட்டும்.

மெய்யான **வாஸிலேன்** ஜெல்லியே வேண்டுமென்று கேள். போலிகளை வாங்காதே.

# Vaseline

**TRADE MARK**

**PETROLEUM JELLY**

" வாஸ்லேன் " என்ற பதம் எமது டிரேட்மார்க், எம்மால் செய்யப்படும் பொருள்களையே குறிக்கின்றது.

செஸ்பரோ மான்யுபேக்டரிங் கம்பெனி,
கன்செட், நியூயார்க்,
லண்டன், மான்ட்ரீல்.



# 1-கல் போட்டோகிராப் மோதிரம்.

இந்த மோதிரமானது எலக்டிரிக் தங்கத்தினால் செய்து மேல் பக்கத்தில் ஊதா, பச்சை அல்லது வெள்ளைக் கல் வைத்திருக்கும்.

